ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

பகவத்கீதையறுபத்திரண்டு.

[ஸ்ரீகாஞ்சி, ப்ர. அண்ணங்கராசார்யர்.]

द्विषष्टितमहायनव्यपगमस्य लक्ष्मास्त्विति द्विषष्टिविषयावली विलसिता कृतीर्भूयसीः ।
व्यलेखिषमुदारधीविलसितात्मनां शासनात् प्रकाशमिह नीयते प्रथमजा कृतिस्तत्र च ॥

1. ஸர்வேச்வரன் உபயவிபூதிநாதனென்று கொண்டாடப்படுகிறான். லீலா விபூதியும் நித்யவிபூதியுமாகிய மண்ணுலகும் விண்ணுலகும் உபய விபூதிகளெனப் படும். "அருளார் திருச்சக்கரத்தால் அகல் விசும்பும் நிலனும் இருளார் வினைகெடச் செங்கோல் நடாவுதிர்" என்று (திருவிருத்தத்தில்) நம்மாழ்வாரும், "பொங்கோதஞ் சூழ்ந்த புவனியும் விண்ணுலகும் அங்காதுஞ் சோராமே யாள்கின்ற எம்பெருமான்" என்று (நாச்சியார் திருமொழியில்) ஆண்டாளும் எம்பெருமானுடைய உபயவிபூதி நிர்வாஹகத்வத்தைப் பற்றிப் பேசின பாசுரங்கள் அறியத்தக்கன. நித்யவிபூதிக்கு எதிராயிருக்கின்ற இந்த லீலாவிபூதியை மாஞானிகள் 'இருள் தருமாஞாலம்' என்று வழங்குகிறார்கள். இம்மண்ணுலகம் இருளே மலிந்ததென்று சொல்லப்படுகிறது. ஸூர்யன் சந்திரன் அக்னி முதலிய சுடர்ப்பொருள்களால் போக்க முடியாத அகவிருள் [அஜ்ஞாநாந்தகாரம்] இங்கு இருளெனப்படுகிறது. "अन्धं तम इवाज्ञानम् — அந்தம் தம இவாஜ்ஞாநம்" என்று ஸ்ரீபராசரமஹர்ஷியும் சொல்லிவைத்தார்.

2. இப்படிப்பட்ட அகவிருளை அகற்றுவதற்காகப் பேரருளாளனான எம்பெருமான் "கலைகளும் வேதமும் நீதிநூலும் கற்பமும் சொற்பொருள் தானும் மற்றை நிலைகளும் வானவர்க்கும் பிறர்க்கும் நீர்மையினாலருள் செய்து" என்று திருமங்கையாழ்வாரருளிச் செய்தபடியே ச்ருதிஸ்ம்ருதிஇதிஹாஸ புராணாதிகளான நாநாசாஸ்த்ரங்களை யுபகரித்தருளினான். அப்படி உபகரித்தவிடத்தில் ஸத்வாரகமாகப் பலநூல்களையும் அத்வாரகமாகச் சில நூல்களையும் இவ்வுலகில் அவதரிப்பித்தருளினான். வ்யாஸபராசர வால்மீகி ப்ரப்ருதிகளான மஹர்ஷிகளை த்வாரமாகக் கொண்டு அவர்கள் வாயிலாக வெளியிட்டவை ஸத்வாரகமெனப்படும். அப்படியன்றிக்கே தானே ஸாக்ஷாத்தாக வெளியிட்டவை அத்வாரகமெனப்படும். இப்படிப்பட்ட அத்வாரக சாஸ்த்ரங்களுள் பகவத்கீதாசாஸ்த்ரமென்பது தலைசிறந்து விளங்குகின்றது.

3. "वेदेषु पौरुषं सूक्तं धर्मशास्त्रेषु मानवम् । भारते भगवद्गीता पुराणेषु च वैष्णवम्— வேதேஷு பௌருஷம் ஸூக்தம் தர்மசாஸ்த்ரேஷு மாநவம், பாரதே பகவத்கீதா புராணேஷு ச வைஷ்ணவம்" வேதங்களுக்குள்ளே புருஷஸூக்தமும், தர்மசாஸ்த்ரங்களுக்குள்ளே மநுஸ்ம்ருதியும், மஹாபாரதத்திற்குள்ளே ஸ்ரீ கீதையும், புராணங்களுக்குள்ளே ஸ்ரீ விஷ்ணுபுராணமும் சிறந்தவை யென்று சொல்லிற்று. பஞ்சம வேதமாகப் புகழப் படுகின்ற மஹாபாரதத்தினுள்ளே கீதோபநிஷத்தென்று குலாவப்

படுகின்ற பகவத்கீதையானது பெரும்பாலும் ஸகலமதஸ்தர்களாலும் உச்சிமேல் வைத்து மெச்சப்படுகின்றதென்பது உலகமறிந்தது. உபநிஷத்துக்களின் அரிய பெரிய பொருள்களெல்லாம் இதனுள் அடங்கிக் கிடக்கின்றமையால் எப்படிப்பட்ட பண்டிதர்களுக்கும் வியாக்யானங்களின் உதவியின்றி இதன் பொருள் அறிய முடியாததாயிருக்கும். ஆனதுபற்றியே பலபல மஹான்களும் மஹாசார்யர்களும் மேதாவிகளும் இதற்கு அநேக வியாக்யானங்கள் இயற்றியுள்ளார்கள். மூலத்தின் மேல் ப்ரதிபதவியாக்யானமாகவும் பொழிப்புரையாகவும், கருத்துரையாகவும், உபந்யாஸ ரூபமாகவும், ஆராய்ச்சி யுருவமாகவும் மற்றும் பலவிதமாகவும் கீதைக்கு அமைந்திருக்கின்ற விவரணங்கள் எண்ணுதற்கரியன. இவை இரண்டொரு பாஷைகளிலல்ல; ஐந்தாறு பாஷைகளிலுமல்ல; உலகில் எத்தனை பாஷைகள் நடையாடுகின்றனவோ, அத்தனை பாஷைகளிலும் தோன்றியுள்ளன. இது கொண்டே இதன் ஒப்புயர்வற்ற மஹிமை அறியற்பாலது.

4. எத்தனை வியாக்யானங்கள் அவதரித்திருந்தாலும் 'மதத்ரய பாஷ்யம்' என்று ப்ரஸித்தமாக வழங்கப்பட்டு வருகின்ற மூன்று பாஷ்யங்களே வைதிகவுலகில் அதிகமான ப்ரஸித்தியை யடைந்திருக்கின்றன. வட இந்தியாவில் வல்லபமதத்திற்கு அதிகப்ரசாரம் காண்பதனால் ஆங்கே வல்லபாசார்ய வியாக்யானமும் சிறந்ததாகக் குலாவப்படும். நமது நாட்டில் சங்கராசார்யரியற்றிய அத்வைதபரமான பாஷ்யமும், ஸ்வாமி யெம்பெருமானாரியற்றியருளின விசிஷ்டாத்வைதபரமான பாஷ்யமும், ஸ்ரீமத் ஆநந்த தீர்த்தரென்னும் மத்வாசார்யரியற்றிய த்வைத பரமான பாஷ்யமும் இவற்றுக்கு சிஷ்யகோடிகள் இயற்றிய டீகைகளும் ப்ரஸித்திபெற்று விளங்குகின்றன. பகவத்ராமாநுஜர் அருளிச் செய்த பாஷ்யமும் அதற்கு வேதாந்த தேசிகனருளிய தாத்பர்யசந்த்ரிகை யென்னும் டீகையும் ஸ்ரீ வைஷ்ணவ ஸம்பிரதாயத்தில் மிகவுயர்ந்த ஸ்தானத்தை யலங்கரித்து வருகின்றன.

5. மதத்ரய பாஷ்யங்களென்று குலாவப்படுகின்ற மேலே குறித்த மூன்று பாஷ்யங்களும் ஸம்க்ஷேபமான முறையில் அவதரித்தவை யெனினும், மத்வாசார்ய பாஷ்யமானது மிகவும் ஸம்க்ஷிப்தமாகத் தோன்றியது. சங்கராசார்ய பாஷ்யமானது அதைவிட சிறிது விரிவாகத் தோன்றியது. பகவத் ராமாநுஜ பாஷ்யமானது ஆவச்யக விஷயங்களைச் சிறிதும் விடாமலும் அநாவச்யக விஷயங்களை அடியோடு ஏற்றுக்கொள்ளாமலும் பரம போக்யமான பத்ததியில் அவதரித்துள்ளது. உலகில் அவரவர்கள் தம்தம் ஸம்பிரதாய நூல்களைப் புகழப் பிறந்தவர்களாதலால் அதற்குச் சேர நாம் பகவத் ராமாநுஜ பாஷ்யத்தை ப்ரசம்ஸிப்பதாகச் சிலர் நினைக்கவுங்கூடும். வஸ்து ஸ்திதியில், எந்த மதத்தைச் சேர்ந்தவரும் பகவத் ராமாநுஜ பாஷ்யத்தைக் கண்டு ஈடுபடுவதை நாம் காண்கிறோம். மூலத்திலுள்ள ஒரு பதத்திற்கும் அர்த்தம் செய்வதை விடாமலும் பொருத்தமான அந்வயக்ரமங்களையும் அர்த்தங்களையும் காட்டியும் அருளிச்செய்யப்பட்ட பாஷ்யம் இஃதொன்றே யென்று நாம் கூசாமல் கூறலாம். இது அபிமானத்தினால் சொல்லப்படுகிற வார்த்தை யென்று பிறர் நினைத்தாலும் நினைத்திடுக. விவேகிகளான யாவருடைய மனமும் ஒருங்கே இசையக்கூடிய வார்த்தையே இது என்பது வஸ்துஸ்திதி.

6. அடியேன் ஒரு ஸமயம் இம்மூன்று பாஷ்யங்களையும் டீகைகளுடனும் பூர்த்தியாக ஸேவிக்கவும் ஆராய்ச்சி செய்யவும் ப்ராப்தமாயிற்று. அப்போது பகவத் ராமாநுஜ பாஷ்யத்தை தாத்பர்ய சந்த்ரிகையுடன் ஆர அமர அநுபவிக்க நேர்ந்தது. அப்போதே எழுத நினைத்த இந்த வியாஸம் பகவத் ஸங்கல்ப விசேஷத்தினால் இப்போ தெழுத ப்ராப்தமாகிறது. இதற்கு முன்பும் ஸமய விசேஷங்களில் அடியேனெழுதி யுள்ள பலவகைப்பட்ட வியாஸங்களில் கீதைக்கு ஸம்பந்தப் பட்டதாக எழுதியுள்ள விஷயங்களைப் பெரும்பாலும் இதில் சேர்த்துக் கொண்டேன். மிக விரிவாக எழுத வேண்டிய பலபல விஷயங்கள் நெஞ்சில் தோன்றி யிருந்தாலும், வாசகர்கள் எளிதாக வாசித்து உணர்ந்து இன்புறவேணுமென்னும் நோக்கத்தினால் அதிகவிஸ்தரங்களின்றி யெழுதுகிறேன். ஒவ்வொரு க்ரந்தத்திற்கும் அவதாரிகையுண்டு. ஆனால் அந்த அவதாரிகையானது பெரும்பாலும் வியாக்கியானகாரர்களால் விவரிக் கப் படும். அது மூலக்ரந்தத்தில் இல்லாமலிருக்கும். திருவாய்மொழிக்கு முதல் ச்ரிய:பதியென்றும் இரண்டாம் ச்ரிய:பதியென்றும் மூன்றும் ச்ரிய:பதியென்றும் அவதரித்துள்ள அவதாரிகைகள் வியாக்கியான காரர்களினால் அமைக்கப்பட்ட வையேயன்றி மூலமான திருவாய்மொழியில் அவதாரிகையாக ஓரக்ஷரமும் கிடை யாது. கீதையில் அப்படியன்றிக்கே முதலத்யாயம் முழுதும் அவதாரிகையாகவே தோன்றியுள்ளது. 'இந்த நூல் எதற்காக அவதரிக்கின்றது' என்பதை விசதமாக நிரூபிப்பதுதானே அவதாரிகை. அதனை நாம் பிறர் வாயினால் தெரிந்துகொள்ள வேண்டாமல் கீதையைக் கொண்டே நன்கு தெரிந்து கொள்ளுகிறோமாதலால் இதற்கு அவதாரிகையும் இதிலேயே பொருந்தியிருக்கிறதென்று சொல்லத் தட்டில்லை.

7. கண்ணபிரான் பாண்டவர்கட்காகத் துரியோதனனிடம் தூதுசென்று ஸமாதான வுரிகள் பல பேசியும் "வீரபோக்யா வஸுந்தரா" ஆகையாலே போர்க் களத்தில் வீரத்தனத்தைக் காட்டி வெற்றி பெறுமவர்களே ராஜ்யமாளக் கடவர்கள் என்று த்ருதராஷ்ட்ர வகுப்பினர் கூற, பிறகு யுத்தமே நடத்தக் கடவதாக முடிவு பெற்றது. இருவகுப்பினரும் படைத்துணை வேண்டிக் கண்ணபிரான் பக்கலிலே வந்தார்கள். துரியோதனன் கண்ணபிரானைத் துணையாக விரும்பவில்லை. "कृष्णाश्रया: कृष्णबला: कृष्णनाथाश्च पाण्डवा:— க்ருஷ்ணாச்ரயா: க்ருஷ்ணபலா: க்ருஷ்ணநாதாச்ச பாண் டவா:" என்னும் புகழ் பெற்ற பாண்டவர்களுக்கே கண்ணபிரான் துணைவனாக நிற்க வேண்டிற்று. பக்த பராதீநனான ஸ்ரீக்ருஷ்ண பரமாத்மா தன்னுடைய பரமபக்த னான அர்ஜுனனுக்குத் தேர்ப்பாகனாயிருந்து கொண்டு குருக்ஷேத்ரமென்னுமிடத் தில் வந்து போர் புரிய அணிவகுத்து நின்றனன். அப்பொழுது அர்ஜுனன் கண்ண பிரானை நோக்கி 'பெருமானே! இந்தப் போரில் யான் யாருடன் போர் புரிவது தகுதியானது? துர்ப்புத்தி வாய்ந்த துரியோதனனுக்குத் துணைபுரிவதற்காக யார் யார் வந்திருக்கிறார்களென்பதை நான் கண்டு தெரிந்து கொள்ளுமாறு தேரை இரண்டு சேனைகளினிடையில் நிறுத்த வேணும்' என்று கூற, அப்படியே கண்ணபிரான் இரண்டு படைகளினிடையே தேரை நிறுத்தி 'அர்ஜுநா! இவ்விரு படைகளிலு மிருக்கின்ற போர்வீரர்களைப் பாராய்' என்றனன்.

8. அப்போது அர்ஜுனன் போர்க்களத்தில் வந்து நின்றிருக்குமவர்கள் தந்தைகளையும் புத்திரர்களையும் பேரன்மார்களையும் தோழன்மார்களையுமிருப்பது கண்டு அவர்களிடத்து இரக்கங் கொண்ட மனத்தனாய் ஸ்ரீக்ருஷ்ணனை நோக்கி 'கண்ணா! போர்புரிய ஆயத்தர்களாயிரா நின்ற இந்த உற்றுறவினரைக் காணவே எனது காண்டீவ தனுசு கையினின்றும் சோருகின்றது; என்னுடல் எரிகின்றது; மயிர்க்கூச்செறிகின்றது; தேஹம் நடுங்குகின்றது; நான் நிற்கமாட்டேன்; என் மனம் குழம்புகின்றது; அபசகுனங்கள் காண்கின்றன; அமர்க்களத்தில் இவ்வுறவினர்களைக் கொன்று நான் என்ன நன்மையடையப் போகிறேன்? எனக்கு யுத்தமும் வேண்டா, யுத்தத்தில் வெற்றியும் வேண்டா; இராச்சியமும் வேண்டா, இன்பமும் வேண்டா; உற்றுறவினர்களோடு கூடிக் களித்து வாழ்வதற்காகவன்றோ பொருட் செல்வம் விரும்பப்படுகின்றது; அன்னவர்களனைவரும் உடலையும் உயிரையும் செல்வத்தையும் பொருள்படுத்தாது போர்புரிய வந்து நிற்கின்றனரே. அவர்களை வென்று கொன்ற பின்பு இந்த ராஜ்யத்தினாலுண்டாகு மின்பம் யாதோ? பிறகு நான் பிழைத்திருந்துதான் என்ன பயன்? மூவுலகவின்பமும் கிடைப்பதாயிருந்தாலும் நான் இவர்களைக் கொல்லமாட்டேன். இந்த அற்ப பூமிக்காக இவர்களைக் கொல்ல நினைப்பதும் ஏலாதது. நெருப்பிட்டுக் கொல்பவர்கள், விஷமிட்டுக் கொல்பவர்கள், பிறருடைய தனங்களையும் பூமியையும் மாதரையும் கொள்ளைகொள்பவர்களான ஆததாயிகளைக் கொலை செய்வதில் குற்றமில்லையாகையாலே அப்படிப்பட்டவர்களில் தலைவர்களான இத்துரியோதனாதியர் கொலை செய்யத் தகுந்தவர்களேயானாலும் இவர்களைக் கொல்ல நான் விரும்புகின்றிலேன். இந்த பந்துக்களைக் கொன்று நான் எப்படி ஸுகமடைவேன்? க்ருஷ்ணா! ராஜ்ய ஸுகங்களுக்காக உறவினரைக் கொல்வது பெரும்பாதகமல்லவோ? ஆகையால் அஸ்த்ர சஸ்த்ரங்களை நான் பிரயோகிக்கப் போகிறதில்லை! பிரயோகியாமல் வாளா நிற்கு மென்னைத் துரியோதனாதிகள் கொன்றபோதிலும் அதனால் எனக்கு வருத்தமில்லை; அது எனக்கு க்ஷேமமேயாகும்— என்று கூறி வில்லைக் கீழே போகட்டு வருத்தமும் கலக்கமும் மிகப் பெற்றுத் தேரிடையே உட்கார்ந்து விட்டான்; என்கிற விதுவே நாற்பத்தேழு ச்லோகங்கள் கொண்ட முதலத்யாயத்தின் ப்ரமேயம்.

9. இப்படி அஸ்தானே கலங்கின அர்ஜுனனுடைய கலக்கத்தைப் போக்கி அவனை யுத்தத்திலே மூட்டுவதற்காகக் கண்ணபிரான் இரண்டாமத்யாயத்திலிருந்து பல பல வுபதேசங்களைச் செய்தருள அவனும் தெளிவு பெற்று "स्थितोऽस्मि गतसंदेहः करिष्ये वचनं तव– ஸ்திதோஸ்மி கதஸந்தேஹ: கரிஷ்யே வசனம் தவ" என்று சொல்லிப் போர் புரிய இசைந்தானென்பது கீதையின் முழுப்பொருள். இவ்விஷயத்தில் புத்திமான்கள் முக்கியமாக ஆலோசிக்கத் தக்கவை இரண்டு விஷயங்களுண்டு. யுத்தத்திற்குக் குதூஹலியாய்வந்து சேர்ந்த அர்ஜுனன் யுத்தாடம்பரம் செய்ய வேண்டியிருக்க அது செய்யாமல் தேர்ப்பாகனாயிராநின்ற தேவனை நோக்கி உபயஸைன்யங்களிலுமிருக்கிற பந்துக்களை இன்னாரின்னாரென்று பார்ப்பதற்காக இந்தத் தேரைச் சிறிது முன்னே கொண்டு போய் உபயஸேனைகளின் முன்னே நிறுத்து என்றானே; இப்போது அர்ஜுனன் இப்படிச் சொல்லவேண்டிய அவச்யமேயில்லை. ஏற்கனவே இவன் தெரிந்துகொள்ளாத அம்சம் என்ன இருக்கிறது? யுத்தத்தில் எதிரிகளாக

வரப்போகிறவர்கள் அல்லது வந்திருக்கிறவர்கள் இன்னாரின்னாரென்பதை அர்ஜுநன் இதற்குமுன் தெரிந்து கொள்ளாமல் இனிமேலா தெரிந்து கொள்ளப்போகிறான்; இல்லையே. அவர்களையெல்லாம் வதைத்தொழிக்க வேணுமென்கிற எண்ணங் கொண்டே போர்புரிய ஆயத்தனாய் வந்து நின்றவன் இப்போது இன்னாரின்னார் போர் புரிய வந்திருக்கிறார்களென்பதைக் கண்டறிந்து கொள்ளவேணுமென்றது சிறிதும் பொருத்தமாக இல்லையே. இது எப்படி பொருந்தும்? இது முதன்முதலாக ஆலோசிக்க வேண்டிய விஷயம். இனி மற்றொரு விஷயமாவது, யுத்தம் பண்ணமாட்டேனென்ற அர்ஜுநனை யுத்தஞ்செய்ய இசைவிக்க வேண்டியதுதானே கண்ணபிரானுக்குக் கர்த்தவ்யம்; அதற்கு இவ்வளவு விஸ்தாரமான கீதாசாஸ்த்ரம் வேணுமோ? 'அப்பா! நீ க்ஷத்ரியனாகையாலே யுத்தஞ்செய்யக் கடமைப்பட்டவனாகிறாய்' என்கிற இவ்வளவை உபபத்திகளுடன் சொன்னாற்போதும்; இதற்கு ஒரு அத்யாயமே அதிகம். அத்தனையத்யாயங்கள் வளர்த்திருப்பது எதற்காக?; என்பது. ஆக இவ்விரண்டு விஷயங்களையும் ஆலோசித்துப் பொருத்தமான முடிவுகட்டவேண்டியது அவச்யமாயிருக்கின்றது.

10. மேலே ப்ரஸ்தாவித்த இரண்டு விஷயங்களுள் முந்தின விஷயத்திற்கு முன்னம் ஸமாதானம் தெரிவிக்கின்றோம். பகவான் ஸ்ரீ ராமாவதாரஞ்செய்து * தச வர்ஷஸஹஸ்ராணி தச வர்ஷசதாநி ச, ராமோ ராஜ்யமுபாஸித்வா * என்றபடி பதினொராயிரமாண்டு இந்நிலவுலகில் வாழ்ந்திருந்தும் ஸம்ஸாரி சேதநோஜ்ஜீவநார்த்தமாக ஒரு சாஸ்த்ரமும் இட்டருளவில்லை; தன்னடிச் சோதிக்கு எழுந்தருளினபிறகு திருவுள்ளத்தில் இக்குறை மிகவும் தோன்றிற்று. அப்போதே திடமாக ஸங்கல்பம் செய்து கொண்டான்—அடுத்தபடி மண்ணுலகில் அவதாரம் செய்யும்போது மிகச் சிறந்ததொரு சாஸ்த்ரத்தை அவதரிப்பித்தே தீருவேனென்று. சாஸ்த்ரத்தை அவதரிப்பித்தலென்றால் ஓலைப்புறத்திலே எழுதிவைப்பதன்று. அப்படியெழுதி வைத்தால் மஹர்ஷிப்ரணீதங்களான இதிஹாஸபுராணாதிக்ரந்தங்கள் போலே இதுவுமொன்று என்று நினைக்கும்படியாகுமத்தனை. ஒரு உத்தமாதிகாரிக்குத் தன் திருவாக்காலே நேராக உபதேசித்து அம்முகத்தாலே உலகில் பரவ வைக்க வேணுமென்று திருவுள்ளம் பற்றியிருந்தான்.

11. ஸ்ரீவசநபூஷணத்தில் "ஜிதேந்த்ரியரில் தலைவனாய் ஆஸ்திகாக்ரேஸரனாய் * கேசவஸ்யாத்மா * வென்று க்ருஷ்ணனுக்கு தாரகனாயிருக்கிற அர்ஜுநனுக்கு" என்று பிள்ளை லோகாசார்யர் புகழும்படியான பெருமைவாய்ந்த அர்ஜுநனையே உபதேசஸத்பாத்ரமாகத் திருவுள்ளம்பற்றினான் கண்ணபிரான். அரும்பெரும் பொருள்களை சிஷ்யனானவனுக்கு உபதேசிக்கலாமே யல்லது மற்றையோர்க்கு உபதேசிக்கத் தகாது. அர்ஜுநன் இப்போது நண்பனென்னும் முறையிலுள்ளானே யன்றி சிஷ்யனென்னும் முறையிலில்லை. * अतिपरिचयादवज्ञा सन्ततगमनादनादरो भवति । मलये भिल्लपुरन्ध्री चन्दनतरुकाष्ठमिन्धनं कुरुते– அதிபரிசயாதவஜ்ஞா ஸந்ததகமநாத் அநாதரோ பவதி, மலயே பில்லபுரந்த்ரீ சந்தநதருகாஷ்டமிந்தநம் குருதே. * என்று ஒரு ஸுபாஷிதமுண்டே. மலயபர்வதத்தில் வாழும் குறத்திகள் சந்தனக் கட்டைகளை விறகாக உபயோகப்படுத்திக் கொள்ளுகிறார்களாம்; எதனாலே? அவ்விடத்தில்

சந்தனகாஷ்டங்கள் மலிந்துகிடக்கின்றன. அவற்றோடே அவர்களுக்குப் பரிசயம் அதிகம். அதிக பரிசயமுள்ளவிடத்தில் அவஜ்ஞை தோன்றுவது இயல்பு. ஆகவே அவர்கள் சந்தனக்கட்டைகளின் பெருமையை யுணராமல் அவற்றை யிட்டுச் சமையல் செய்வதும் குளிர்காய்வது மாயிருக்கிறார்கள். அதுபோல, கண்ணன்பக்கலில் அதிக பரிசயமுள்ள அர்ஜுனனுக்கு சிஷ்யத்வமிருக்க ப்ரஸக்தியில்லையன்றோ. சிஷ்ய வ்ருத்தி செய்யாதவனுக்கு உபதேசிக்கக் கூடாதாகையால் இவ்வர்ஜுனனை எப்படியாவது சிஷ்யனாக்கிக்கொண்டு இவனுக்கே கீதாசாஸ்த்ரத்தை யுபதேசிக்கவேணுமென்று திருவுள்ளம் பற்றினான் கண்ணபிரான்.

12. "கண்ணபிரானே! உனக்கு நான் சிஷ்யனாயிருக்கிறேன், எனக்குத் தத்வோபதேசம் செய்தருளவேணும்" என்று ப்ரார்த்திக்கும்படியாக அர்ஜுநனைச் செய்து பிறகு அவனுக்கு உபதேசிக்கவேணும். சிஷ்யத்வமென்பது எளிதாக உண்டாய்விடுமோ? "परीक्ष्य लोकान् कर्मचितान् ब्राह्मणो निर्वेदमायात्... तद्विज्ञानार्थं स गुरुमेवाभिगच्छेत्..." இத்யாதியுபநிஷத்தின்படி நிர்வேத முண்டானாலல்லது சிஷ்யத்வ முண்டாக மாட்டாதாகையாலே அர்ஜுனனுக்கு சிஷ்யத்வ ப்ராப்திக்கு அங்கமாக நிர்வேத முண்டாகவேண்டியது அவசியமாயிற்று. அந்த நிர்வேதத்தை யுண்டாக்குவதற்கு ஸமயமெதிர்பார்த்திருக்கிறான் கண்ணபிரான்.

13. இப்பெருமான் ஸந்தி பண்ணிவைப்பதாகப் புகுந்து, முடிவில் போர்செய்வதையே ஏற்படுத்திக்கொண்டு, ஸமயத்தில் கீதாசாஸ்த்ரத்தையுபதேசிக்க இடம் பெறுவதற்காக அர்ஜுநனோடு ஸாரதிகைங்கர்யம் [சேர்த்தி] ஸித்திக்கும் பொருட்டு அவனுடைய தேரில் இருப்புப் பெறுவதற்குத் தேர்ப்பாகனாயிருக்க இசைந்து அவனோடும் அவனுடையாரோடுங்கூட குருக்ஷேத்திரம் வந்து சேர்ந்து, யுத்தத்தைத் தொடங்குவதற்கு முன்னே பந்துக்களைக் கண்டு மோஹிப்பதென்ன; அதனால் சோக விஷாதங்களை யடைவதென்ன ஆகிய இவற்றை யுண்டாக்கி, ஆக இவ்வளவால் சிஷ்யத்வத்திற்கு அங்கமான நிர்வேதத்தை யுண்டாக்குவதாகத் திருவுள்ளம்பற்றி, மேலே பத்தாவது அத்தியாயத்தில் "अहं सर्वस्य प्रभवो मत्तस्सर्वं प्रवर्तते- அஹம் ஸர்வஸ்ய ப்ரபவோ மத்தஸ் ஸர்வம் ப்ரவர்த்ததே" என்று தானே யருளிச்செய்திருப்படியே தனக்கு அஸாதாரணமாக விருக்கும் சக்தியினால்-இப்போது போர்புரிய வந்து நிற்கும் உற்றுறவினர்களைப் பார்க்கவேணுமென்பதோராசையை அர்ஜுனனுக்கு உண்டு பண்ணினனாயிற்று.

14. இரண்டாமத்யாயத்தில் பதினோராவது ச்லோகமாகிய "अशोच्यानन्वशोचस्त्वं प्रज्ञावादांश्च भाषसे। गतासूनगतासूंश्च नानुशोचन्ति पण्डिताः- அசோச்யாந் அந்வசோசஸ்த்வம் ப்ரஜ்ஞாவாதாம்ச்ச பாஷஸே, கதாஸூந் அகதாஸூம்ச்ச நாநுசோசந்தி பண்டிதா:" என்கிற ச்லோகந்தான் உபதேசத்தின் உபக்ரமமாகவுள்ளது. இதற்கு முன்னே அர்ஜுனன் வாயில் "शिष्यस्तेऽहं शाधि मां त्वां प्रपन्नम्- சிஷ்யஸ் தேஹம் சாதி மாம் த்வாம் ப்ரபந்நம்" என்று வெளிவந்திருக்கிறது. 'கண்ணா! எனக்கு தர்மாதர்மங்கள் தெரியவில்லை; எனக்கு ச்ரேயஸ்ஸென்று நீ அறுதியிட்ட பொருளை எனக்கு உரைப்பாயாக. உனக்கு நான் மித்திரன் மாத்திரமல்லேன்; சிஷ்யனுமாகிறேன்;

இதோ உன் திருவடிகளில் வீழ்ந்து யாசிக்கிறேன் காண்; எனக்கு ஹிதா ஹிதங்களை யுபதேசிப்பாயாக' என்று அர்ஜுநன் சொல்லும்படி செய்து விட்டான் கண்ணபிரான். இந்த ப்ரார்த்தனையைப் பெறாமல் சிறந்த சாஸ்த்ரத்தை யுபதேசிப்பது தகுதியன்றென்றாலும், நிர்வேதமில்லாதவனது வாயில் இந்த ப்ரார்த்தனை வெளிவராதாகையாலும் இத்தனையும் கண்ணபிரான் செய்துவைத்த வொரு நாடகம் என்பது அறியத்தக்கது. ஆகவே அர்ஜுநனுக்குண்டான வ்யாமோஹம் அவன்றன்னுடைய ஸ்வபாவத்தாலுண்டானதன்று. மாயப் போர்த் தேர்ப்பாகனுடைய மாய மந்திரம் செய்வித்த செயல் என்றதாயிற்று. இல்லையாகில் கீதாசாஸ்த்ரம் அவதரிக்க அவகாசமே யிராதன்றே.

15. போர்புரிய மாட்டேனென்ற அர்ஜுநனைப் போரில் மூட்டுவதற்கு இந்த கீதாசாஸ்த்ரத்தில் சொல்லப்படுகிற விஷயங்களித்தனையும் வேணுமோ? க்ஷத்ரியதர்மோபதேசமொன்று போதுமே; ப்ரக்ருதத்திற்கு அநபேக்ஷிதங்களான அதிகவிஷயங்களை இதில் பரக்கக்கூறி யிருப்பது ஏன்? என்கிற இரண்டாவதான ஆலோசனைக்கு இனிச் சொல்லுகிறோம். ஏதோ வொரு வ்யாஜத்தையிட்டு அரியபெரிய சாஸ்த்ரார்த்தங்களை வெளியிட வேணுமென்று நினைத்த கண்ணபிரானது திருவாக்கில் இது ஆவச்யகம், இது அநாவச்யகம் என்று வரையறுக்க நாமார்? விஷயங்களனைவை ப்ரஸக்தம் அநுப்ரஸக்தம் என்று இருவகைப்படுமன்றே. எந்த சாஸ்த்ரமும் ப்ரஸக்த விஷயங்களோடு மட்டும் நிற்காது. அநுப்ரஸக்த விஷயங்களும் சேர்ந்தே நிற்கும். ஸ்வாமி எம்பெருமானார் தம்முடைய கீதாபாஷ்ய அவதாரிகையின் முடிவில் "पाण्डुतनय युद्धप्रोत्साहनव्याजेन परमपुरुषार्थलक्षणमोक्षसाधनतया वेदान्तोदितं स्वविषयं ज्ञानकर्मानुगृहीतं भक्तियोगमवतारयामास" என்றருளிச் செய்துள்ள ஸ்ரீஸூக்தியை இங்கே அநுஸந்திப்பது. அர்ஜுநனை யுத்தத்தில் உத்ஸாஹப்படுத்துவது என்பது வ்யாஜமாத்ரமென்றும், பரமபுருஷார்த்தமான மோக்ஷத்திற்கு ஸாதனமாக வேதாந்தங்களில் ஓதப்பட்டதாய் ஜ்ஞானகர்மங்களை அங்கமாக வுடைத்தாயிருக்குமுள்ள பக்தியோகத்தை அவதரிப்பிப்பதுதான் இந்த கீதாசாஸ்த்ரத்திற்கு ப்ரதாந லக்ஷ்யமென்றும் தெரிவித்தருளினாராயிற்று. ஆகவே முமுக்ஷுக்களுக்கு ஜ்ஞாதவ்யங்களான ஸகலார்த்த ஸாரங்களும் இந்த கீதாசாஸ்த்ரத்தில் தெள்ளமுதாக அமைந்துள்ளனவென்றதாயிற்று.

16. இந்த கீதாசாஸ்த்ரமானது அர்ஜுநனுக்கும் கண்ணபிரானுக்கும் ஸம்வாதரூபமாக அவதரித்திருக்கச்செய்தேயும் த்ருதராஷ்ட்ரனுக்கும் ஸஞ்ஜயனுக்கும் ஸம்வாதரூபமாகவும் அவதரித்ததாயிற்று. கீதை தொடங்கும்போதே "धृतराष्ट्र उवाच" என்று அவன் பெயரைத்தான் நினைக்கவும் சொல்லவும் ப்ராப்தமாகிறது. த்ருதராஷ்ட்ரன் ஸஞ்ஜயனை நோக்கிக் கேட்க, குருக்ஷேத்ரத்தில் நடந்த செய்திகளையெல்லாம் அவனுக்கு ஸஞ்ஜயன் சொல்லுவதாகவும், கீதாசாஸ்த்ரமும் ஸஞ்ஜயன் வாயிலாகவே வெளிவருவதாகவும் அமைந்திருக்கின்றது. பதினெட்டாமத்தியாயத்தில் எழுபத்து மூன்றாவது ச்லோகத்தோடு க்ருஷ்ணார்ஜுநஸம்வாதம் முடிந்து விட்டது. அதற்குமேலுள்ள ஐந்து ச்லோகங்களும் த்ருதராஷ்ட்ரனுக்கு ஸஞ்ஜயன் சொல்லி முடிப்பதாக அமைந்திருக்கின்றன.

17. பாண்டவர்களும் கௌரவர்களுமாகிற இருவகுப்பினருடையவும் சேனைகள் போர்புரிய ஆயத்தமாயிருந்த வளவில் வேதவ்யாஸ பகவான் தன் புதல்வனை த்ருதராஷ்ட்ரனிடம் வந்து 'மன்னவனே! இனி நடக்கப்போகிற யுத்தத்தில் உனது புத்திரர்கள் தவறாது விநாசமடையப் போகிறார்கள்; அந்த யுத்தத்தை நீ நேரில் காண விரும்புகின்றாயாகில் அதைக் காண்பதற்கிடான சக்ஷுஸ்ஸை உனக்கு அளிப்பேன்' என்றார். அதுகேட்ட த்ருதராஷ்ட்ரன் 'நான் அதைக் காண விரும்புகின்றிலேன்; உள்ளபடி அனைத்தையும் கேட்பிக்க வேணும்' என்றான். அப்போது வேதவ்யாஸர் தம்முடைய சிஷ்யனும் த்ருதராஷ்ட்ர ஸாரதியுமான ஸஞ்ஜயனை யழைத்து யுத்தவிஷயத்தில் அவன் ஸர்வஜ்ஞனாம்படி அநுக்ரஹம் செய்து, 'ஆதியோடந்தமாக யுத்த விருத்தாந்தங்கள் முழுவதையும் த்ருதராஷ்ட்ரனுக்கு நீ சொல்லக்கடவாய்' என்று நியமித்து (வியாஸர்) தம் இருப்பிடம் சென்று சேர்ந்தார். பிறகு ஸஞ்ஜயன் யுத்தரங்கத்தில் வந்து, அர்ஜுனனுக்கு கீதோபதேசம் செய்தருளாநின்ற ஸ்ரீ க்ருஷ்ண பரமாத்மாவின் முகாரவிந்தத்தில் நின்றும் கீதாம்ருதத்தை ஸாக்ஷாத்தாக ச்ரவணம் பண்ணி வியாஸருடைய அநுக்ரஹத்தினால் கிடைத்திருந்த திவ்யஜ்ஞானத்தாலே விவித விசித்ர யுத்த விருத்தாந்தங்களெல்லாவற்றையும் தனக்கோர் அபாயமின்றிக்கே கரதலாமலகமாகக் கண்டுணர்ந்து அந்த யுத்தரங்கத்தில் நின்றும் போய் த்ருதராஷ்ட்ரனிடம் சேர்ந்து, யுத்தத்தைப்பற்றியே சிந்தித்துக் கொண்டிருந்த அவனுக்கு யுத்தச்செய்திகளை முதலே பிடித்துச் சொன்னான். ஆக இந்த ஸம்வாதம் கீதாசாஸ்த்ரமாக உலகில் பரவி அனைவரையும் புனிதமாக்கிக்கொண்டு வருகின்றது.

18. ஸ்ரீ க்ருஷ்ணபரமாத்மா வாஸ்தவமாகத் திருவவதாரம் செய்து, வாஸ்தவமான அர்த்தங்களை நிரப்பி வாஸ்தவமாக கீதாசாஸ்த்ரத்தை யவதரிப்பித்தருளினதாக ஸ்ரீ பகவத் ராமாநுஜனடியார்களான நாம் நம்பியிருக்கிறோம். ஸ்வாமியிட்டருளின கீதாபாஷ்யத்தின் அவதாரிகையிலும் மேலே பலச்லோகங்களின் பாஷ்யத்திலும் இந்த நம்பிக்கையே நமக்கு ஊர்ஜிதமாக்கப்படுகின்றது. ஸ்ரீமத் சங்கராசார்யஸ்வாமிகளியற்றிய பாஷ்யத்தின் ப்ரக்ரியை இதற்கு மாறாகவுள்ளது. அவர் தம்முடைய பாஷ்ய அவதாரிகையில் "भगवान्···स्वमायया देहवानिव जात इव च लोकानुग्रहं कुर्वन् लक्ष्यते" [பகவாந் ...ஸ்வமாயயா தேஹவாநிவ ஜாத இவ ச லோகாநுக்ரஹம் குர்வந் லக்ஷ்யதே] என்றெழுதிவைத்திருக்கக் காண்கிறோம். இதனால், பகவான் உண்மையில் தேஹபரிக்ரஹம் செய்தருளவில்லையென்றும், உண்மையான அவதாரம் செய்தருளவில்லையென்றும், மாயையினால் ஏதோ ஜனங்களை மயக்கிக் காட்டினதாகவும் சங்கராசாரியர் அபிப்ராயப் படுவதாக விளங்குகின்றது. இப்படி இவர் அபிப்ராயப்படுவதற்கு ஒரு காரணாபாஸமுண்டு; அதாவதென்னென்னில்; மேலே நான்காமத்யாயத்திலே பகவான் தானே தன்னுடைய அவதாரத்தைப்பற்றிப் பேசிவருகையில் (4-6) "अजोऽपि सन्नव्ययात्मा भूतानामीश्वरोऽपि सन्। प्रकृतिं स्वामधिष्ठाय संभवाम्यात्ममायया ॥" என்றதில் 'ஆத்ம மாயயா ஸம்பவாமி' என்றுள்ளது. இதற்கு உண்மையான பொருள் எதுவோ அது பகவத் ராமாநுஜ பாஷ்யத்தில் ப்ரமாண ப்ரதர்சக புரஸ்ஸரமாக நிரூபிக்கப்பட்டிருக்கின்றது. "आत्ममायया— आत्मीयया मायया। *माया वयुनं ज्ञानम्* इति ज्ञानपर्यायोऽत्र मायाशब्दः। तथा चाभियुक्तप्रयोगः— *मायया सततं वेत्ति प्राणिनां च शुभाशुभम्* इति।

आत्मीयेन ज्ञानेन— आत्मसंकल्पेनेत्यर्थः ॥" என்பனை கீதாபாஷ்யத்தில் அங்கு ஸ்வாமியருளிச் செய்துள்ள ஸ்ரீஸூக்திகள். வைதிககிகண்டுவையும் அதையநுஸரித்த அபியுக்த ப்ரயோகத்தையும் காட்டி ஸங்கல்பரூபஜ்ஞானமே இங்கு மாயா சப்தார்த்தமென்று ஸ்வாமி நிர்ணயித்திருக்கிறார். இதுதான் மஹர்ஷிகளின் அபிப்ராயத்திற்கு மிகவு மிணங்கிய ப்ராமாணிகமான பொருள். ஸ்ரீ விஷ்ணுபுராணத்தில் (6–5–84) * इच्छा-गृहीताभिमतोरुदेहः– இச்சாக்ருஹீதாபிமதோரு தேஹ: * என்று, மாயாசப்தஸ்தானத்தில் இச்சாசப்தத்தை நிஸ்ஸந்தேஹமாக இட்டு, பகவான் தன்னுடைய இச்சையினாலே தனக்கு அபிமதமான பல திவ்யமங்கல விக்ரஹங்களைப் பரிக்ரஹித்துக்கொண்டு அவதரிப்பதாகச் சொல்லப்பட்டுள்ளது.

18. இங்கு சங்கராசார்யர் "संभवामि— देहवानिव भवामि ; जात इव, आत्ममायया— आत्मनो मायया, न परमार्थतः लोकवत्" என்று எழுதியுள்ளார். கானலானது தன்னிடத்தில் தண்ணீர் இல்லாமலிருக்கச் செய்தேயும் அது இருப்பதுபோல் காட்டுகிறதல்லவா? அப்படியே பகவானும் தான் உண்மையில் தேஹபரிக்ரஹம் பண்ணாதவனாகையாலே தன்னிடத்தில் தேஹமில்லாதிருக்கச் செய்தேயும் இருப்பதுபோல் மாயையினால் காட்டிக் கொண்டு நிற்கிறான் என்பது சங்கராசார்யருடைய அபிப்ராயம். மாயா என்னுஞ் சொல்லுக்கு பொய்யென்பதே இவர் கொண்ட பொருளாகும். அந்த நாலாவது அத்யாயத்திலேயே மேல் ஒன்பதாவது ச்லோகத்தில் * जन्म कर्म च मे दिव्यमेवं यो वेत्ति तत्त्वतः । त्यक्त्वा देहं पुनर्जन्म नैति मामेति सोऽर्जुन ॥ * [ஜந்ம கர்ம ச மே திவ்யம் ஏவம் யோ வேத்தி தத்த்வத:, த்யக்த்வா தேஹம் புநர்ஜந்ம நைதி மாமேதி ஸோர்ஜுந.] என்பதில் பகவான் தானே தன்னுடைய அவதாரத்தையும் அவதார சேஷ்டிதத்தையும் ஸத்யமாக எவன் அறிகிறானோ அவன் வர்த்தமாந தேஹத்தை விட்டொழிந்து மறுபிறவியடையாமல் தன்னையே யடைவதாகச் சொல்லியிருக்கின்றான். 'மே ஜந்ம கர்ம ச ய: தத்த்வத: வேத்தி' என்றிருப்பதை ஸ்வமதப்ரதிகூலமாக நினைத்த சங்கராசார்யர் வெகு சாதுர்யமாய் வேறுவிதமாக அந்வயம் காட்டியுள்ளார். தத்த்வத: என்பதை 'யோ வேத்தி' என்பதில் கூட்டாமல் 'தத்த்வத: தேஹம் த்யக்த்வா' என்று உத்தரார்த்தத்திலே அந்வயித்துப் பொருளுரைத்தார். அவர் இவ்வளவு ச்ரமம் எதற்காகப் படுகிறாரென்றால், 'ஸம்பவாமி ஆத்மமாயயா' என்றுள்ள விடத்தில் மாயா சப்தத்திற்குத் தாம் கொண்ட பொருளே பொருளென்கிற வொரு அபிநிவேசத்தினால் தான்.

20. ப்ராமாணிகர்கள் இங்கு மத்யஸ்த நிலையில் நின்று ஒன்று குறிக்கொள்ள வேண்டும். தைத்திரீய யஜுர்ப்ராஹ்மணத்தில் காடக (काठक) ச்ருதியில் மூன்றாம் ப்ரச்நத்தில் "यावन्तः पांसवो भूमेः संख्याता देवमायया" என்று ஓதப்பட்டிருக்கின்றது. பூமியிலுள்ள மண்துகள்களெல்லாம் தேவர்களின் மாயையினால் கணக்கிடப் பெற்றவையாக இதில் சொல்லப்படுகிறது. இங்கு மாயையென்பதற்கு பிறர் கூறும் பொருள் பொருந்தமாட்டாதென்பது வெளிப்படை. பூமியிலுள்ள மண்துகள்கள் மனிதர்களின் ஞானத்தினால் கணக்கிட முடியாதவையாயினும் தேவர்களின் ஞானத்தினால் கணக்கிடக்கூடியவையே யாதலால் இங்கு 'தேவமாயயா' என்றதற்கு 'தேவர்களின் ஞானத்தாலே' என்பதுதான் பொருளென்று யாவரும் நிராக்ஷேபமாக இசை

யத்தக்கதாகும். வித்யாரண்யர் முதலான வேதபாஷ்யகாரர்களும் இப்படித்தான் இங்குப் பொருள் வரைந்துள்ளார்கள். ஆகவே (माया) என்பதற்கு 'மித்யா' என்று பொருள்கொள்வது பொருத்தமற்றதென்று தெளியக்கடவது.

21. அஸுரராக்ஷஸாதிகள் செய்கிற செயல்களை மாயை யென்று சொல்லுவதுண்டு. அங்கும் மித்யா என்கிற அர்த்தம் கிடையாது. ஆச்சர்யகரம் என்பதுபற்றியே அங்கு மாயாசப்த ப்ரயோகம் பண்ணுவது. பிள்ளை லோகாசார்யர் தத்வத்ரயத்தில் அசித் ப்ரகரணத்தில் (10) "மாயையென்கிறது விசித்ரஸ்ருஷ்டியைப் பண்ணுகையாலே" என்றருளிச் செய்த விடத்து வியாக்யானத்தில் மணவாள மாமுனிகள் "அஸுரராக்ஷஸாதி க்ரியைகளை ஆச்சர்யகரத்வத்தைப் பற்ற மாயாசப்தத்தாலே சொல்லுகிறப்போலே இத்தையும் [ப்ரக்ருதியையும்] மாயை யென்கிறது விசித்ர ஸ்ருஷ்டியைப் பண்ணுகையாலே. அதாவது, ஒன்றுபோலொன்றன்றிக்கே விஸ்மயநீயங்களான கார்யங்களை ஜனிப்பிக்கை" என்றருளிச் செய்ததும் இங்கே அநுஸந்தேயம். "தைவீ ஹ்யேஷா குணமயீ மம மாயா துரத்யயா" (7–14) என்ற கீதா ச்லோகத்தின் பாஷ்யத்தில் ஸ்வாமி வெகு விசதமாக நிரூபித்தருளுகிறார். "अस्या मायाशब्दवाच्यत्वम् आसुरराक्षसास्त्रादीनामिव विचित्रकार्यकरत्वेन ··· अतो मायाशब्दो न मिथ्यार्थवाची । ऐन्द्रजालिकादिष्वपि केनचिन्मन्त्रौषधादिना मिथ्यार्थविषयायाः पारमार्थिक्या एव बुद्धेरुत्पादकत्वेन मायावीति प्रयोगः । तथा मन्त्रौषधादिरेव च तत्र माया" இத்யாதி திவ்யஸூக்திகள் அங்கு ஸேவிக்கத்தக்கவை. மாயாசப்தத்தின் உண்மைப் பொருளையுணராதே தவறான பொருளைக் கொண்டதன் பயனாகவே மாயாவாதிகளின் வாதங்கள் மிக மிக வளர்ந்துவிட்டன.

22. கண்ணபிரான் அவதரித்ததும் பொய், தேஹபரிக்ரஹம் பண்ணினதும் பொய் என்று சொல்லும் பக்ஷத்தில் கீதாசாஸ்த்ரம் அவதரித்ததும் பொய்யென்றே சொன்னதாகத் தேறிவிடும். பொய்யான சாஸ்த்ரம் நம்முடைய உஜ்ஜீவனத்திற்கு எப்படி ஸாதனமாகும். வேங்கடாத்வரி இயற்றிய விச்வகுணாதர்சத்தில் வேதாந்தி வர்ணனத்தில் "दृश्यं मिथ्या दृष्टिकर्ता च मिथ्या दोषो मिथ्येत्येव या धीरमीषाम् । साऽधिष्ठानांशेऽपि किं नेति चिन्ता साधिष्ठानं पण्डितानामुदेति ॥" என்றொரு ச்லோகம் வெகு அற்புதமாகக் காண்கிறது. 'பார்க்கப்படுகிற பொருள்களெல்லாம் பொய், பார்க்கிறவனும் பொய், அவித்யையாகிற தோஷமும் பொய் என்று கொள்ளுகிற இந்த மாயாவாதிகள், இவற்றுக்கு ஆச்ரய பூதமான ப்ரஹ்மமும் பொய்யென்று முடித்திருக்கலாமே; ஏன் அதை மாத்திரம் ஸத்யமென்று கொண்டார்களோ தெரியவில்லை—என்பதே இந்த ச்லோகத்தின் கருத்து. பொய்யன் சொல்லுகிற வார்த்தைகளும் பொய்யாகுமாகையாலே தம்மைப் பொய்யரென்று நிலைநாட்டிக் கொள்ளுகின்ற இந்த மாயாவாதிகள் சொல்லுமதெல்லாம் பொய்யே என்பது இவர்கள் தம்மாலேயே ஸ்தாபிக்கப்பட்டுத் தீருவதனால் இவர்களைக் கண்டிக்க நாம் சிறிதும் ப்ரயாஸம் கொள்ள வேண்டியதில்லை யென்றும் ஒரு ரஸிக பண்டிதர் எழுதிவைத்திருக்கக் காண்கிறோம்.

23. கீதையின் இரண்டாமத்யாயத்தின் பன்னிரண்டாவது ச்லோகத்திலிருந்தே சாஸ்த்ராரம்பமென்று சொல்லலாம். அதற்குக் கீழுள்ள பாகங்களெல்லாம் அவதாரிகையாக நிற்கிறது. அந்த பன்னிரண்டாவது ச்லோகம் எவ்விதமாகவுள்ள

தென்று பார்க்கவேணும். "न त्वेवाहं जातु नासं न त्वं नेमे जनाधिपाः। न चैव न भविष्यामः सर्वे वयमतः परम्" [ந த்வேவாஹம் ஜாது நாஸம் ந த்வம் நேமே ஜநாதிபா:, ந சைவ ந பவிஷ்யாம: ஸர்வே வயமத: பரம்] என்பதே அந்த ச்லோகம். இதன் பொருள் யாதெனில், ஸர்வேச்வரனுகிய நானும் இதற்கு முன்கழிந்த அநாதிகாலத்திலும் இருந்தவனே; அர்ஜுநா! நீயும் இந்த அரசர்களுமான க்ஷேத்ரஜ்ஞர்களுங்கூட முன்பும் இருந்தவர்களே. முன்பு இருந்தது மாத்திரமேயன்றிக்கே மேலுள்ள காலமுமெல்லாம் நானும் நீங்களும் இருக்கப்போகிறவர்களே என்பதாம். ஸர்வேச்வரனும் பரமாத்மாவுமான நான் நித்யன் என்பதில் எப்படி ஸந்தேஹமில்லையோ, அப்படியே க்ஷேத்ரஜ்ஞர்களாய் ஜீவாத்மாக்களான நீங்களும் நித்யர்களென்பதில் ஸந்தேஹமில்லையென்று பகவான்தானே சோதிவாய்திறந்து பணித்துளன். இதனால் ஸர்வேச்வரனான பகவானிற்காட்டிலும் ஜீவாத்மாக்களுக்குண்டான பேதமும், அந்த ஜீவாத்மாக்களுக்குப் பரஸ்பரமுண்டான பேதமும் பாரமார்த்திகமென்று பகவான்தானே வ்யக்தமாகத் தெரிவித்ததாய்த் தேறுகிறது. இந்த ச்லோகம் விசிஷ்டாத்வைத ஸித்தாந்தத்திற்கு அடிப்படையாக வுள்ளதென்று நன்குணரலாம். நமது பாஷ்யகாரர் இந்த ச்லோகத்திற்கு இட்டருளியிருக்கின்ற பாஷ்யம் மிகவும் விபுலமாக வுள்ளது.

24. கீழே அர்ஜுநன் (2-7.) "पृच्छामि त्वां धर्मसंमूढचेताः। यच्छ्रेयः स्यान्निश्चितं ब्रूहि तन्मे शिष्यस्तेऽहं शाधि मां त्वां प्रपन्नम्" என்று, தத்வார்த்தம் தெரியாமையினாலே தான் குழம்பியிருப்பதாகவும் தன்னுடைய கலக்கம் தீர தத்வார்த்தத்தை அறுதியிட்டு அருளிச்செய்யவேணுமென்றும் சொல்லித் திருவடிகளில் விழுந்து யாசித்திருக்கிறான். அப்படிப்பட்டவனுக்கு தத்வோபதேசம் செய்யவே இந்த கீதாசாஸ்த்ரம் அவதரித்தது. கீதாசார்யன், கலங்கினவனுக்குச் சொல்லும்போது தெளிவான பொருளைச் சொல்லுவனே யல்லது கலங்கின பொருளையே சொல்லமாட்டானன்றே. ஆகவே இந்த சாஸ்த்ரத்தில் கூறப்படும் பொருள்கள் யாவும் ஸர்வாத்மநா பாரமார்த்திகமென்றே வைதிகர்கள் கொள்ளக்கடவர்கள். அதிலும் ஆரம்ப ச்லோகமான இதனில் கூறப்படும் விஷயம் உபநிஷதாதிகளில் வடிக்கட்டின பொருளாகவே யிருக்கத்தகும். இதில் ஜீவாத்ம பரமாத்மபேதம் முதலியன தெரிவிக்கப்படுமவை அபாரமார்த்திகமாக இருக்கச் சிறிதும் ஔசித்யமில்லை. ஆக இந்த நிரூபணங்களினால் ஸ்வாமி யெம்பெருமானார் உபநிஷத்து, ப்ரஹ்மஸூத்ரம், கீதை முதலானவற்றின் பொருள்களை ஆர்ஜவத்துடன் அறிந்து அறுதியிடுபவர் என்பது நிஷ்பக்ஷபாதர்களுக்குக் கையிலங்கு நெல்லிக்கனியாகும். இப்பெருமை பொலியவே யதிராஜஸப்ததியில் "यथाभूतस्वार्था यतिनृपतिसूक्तिर्विजयते—யதாபூதஸ்வார்த்தா யதிந்ருபதிஸூக்திர் விஜயதே" என்று பொருத்தமாகப் பேசப்பட்டது.

25. இனி ப்ரக்ருதத்திலே செல்லுவோம்; "ந த்வேவாஹம் ஜாது நாஸம்" என்கிற ச்லோகத்திலே ஜீவாத்ம பரமாத்ம பேதமும் ஜீவர்களுக்குப் பரஸ்பரபேதமுமாகிற இவை காட்டப்பட்டது போல அதற்கடுத்த (13) ச்லோகத்தில் "देहिनोऽस्मिन् यथा देहे कौमारं यौवनं जरा। तथा देहान्तरप्राप्तिः धीरस्तत्र न मुह्यति" என்பதில் ப்ரக்ருத்யாத்ம விவேகமும் காட்டப்பட்டது. அசேதநம் வேறு, சேதநன் வேறு என்கிற பகுத்துணர்வே ப்ரக்ருத்யாத்ம விவேகமெனப்படும். நிர்விசேஷ சின்மாத்ரமான ப்ரஹ்ம

மொன்று தவிர வேறு சேதநா சேதநங்கள் உண்மையில் கிடையா என்கிறவாதம் இங்கு நிராகரிக்கப்பட்டதாகிறது. "अन्तवन्त इमे देहाः" न जायते म्रियते वा कदाचित्" वासांसि जीर्णानि यथा विहाय" இத்யாதிகளான ச்லோகங்களினால் ஆத்மா நித்யனென்றும், தேஹம் அநித்யமென்றும் பரக்கச் சொல்லுகிற முகத்தாலும் சேதநா சேதநங்களின் ஸத்பாவம் பாரமார்த்திகமாகவே ஸமர்த்திக்கப்பட்டதாகிறது. ஆக, கீதாசாஸ்த்ரம் விசிஷ்டாத்வைதிகளுக்கே நிதியானதென்றும் மற்றையோர்க்கு இது கொண்டு பணியில்லையென்றும் சொல்லிற்றாயிற்று. இனி அத்யாயக்ரமேண சில விசேஷார்த்தங்களை விளக்குவோம்.

26. (2-27.) "जातस्य हि ध्रुवो मृत्युः ध्रुवं जन्म मृतस्य च। तस्मादपरिहार्येऽर्थे न त्वं शोचितुमर्हसि॥" உத்பந்நனுக்கு மரணம் நிச்சயம்; மரணமடைந்தவனுக்கு புநர் ஜன்மம் நிச்சயம்; ஆகவே பரிஹாரமற்ற இவ்விஷயத்தில் நீ சோகிக்கக்கடவையல்லை-என்று இந்த ச்லோகத்தினால் சொல்லப்படுவதாகக் கொண்டு சிலர் சங்கிப்பதொன்றுண்டு; அதாவது, உத்பந்நனுக்கு மரணம் நிச்சயம் என்பது நிராக்ஷேபமான விஷயந்தான்; ஆயினும் உடனே "த்ருவம் ஜந்ம ம்ருதஸ்ய ச" என்றிருக்கிறதே, இது எப்படி பொருந்தும்? மரணமடைந்தவனெல்லாம் மறுபடியும் பிறந்தே தீருகிறானென்று சொன்னால் அபுநராவ்ருத்தி லக்ஷணமான மோக்ஷம் இல்லையென்று தேறிவிடுமல்லவா? "त्यक्त्वा देहं पुनर्जन्म नैति मामेति सोऽर्जुन!—த்யக்த்வா தேஹம் புநர் ஜந்ம நைதி மாமேதி ஸோர்ஜுந!" இத்யாதிகளான பல ச்லோகங்களாலே கீதையில் பலகால் சொல்லப்படுவதும், "மீட்சி யின்றி வைகுந்தமாநகர் மற்றது கையதுவே" இத்யாதிகளான பல பாசுரங்களும் பழுதாமே என்று சங்கிக்க நேர்கின்றது. இந்த சங்கை சிறிதும் யுக்தமன்று. 'ஜாதஸ்ய ஹி த்ருவோ ம்ருத்யு:' என்றதும் ஆத்மாவைப்பற்றினதன்று; 'த்ருவம் ஜந்ம ம்ருதஸ்ய ச' என்றதும் ஆத்மாவைப் பற்றினதன்று. ஆத்மாவுக்கு உத்பத்தி விநாசங்களிரண்டும் இல்லையென்று பலகால் சொல்லப்பட்டிருக்கிறது. (2—20) "न जायते म्रियते वा कदाचिन्नायं भूत्वा भविता वा न भूयः। अजो नित्यः शाश्वतोऽयं पुराणो न हन्यते हन्यमाने शरीरे॥" என்கிற ச்லோகத்தினால் ஜநநமரணாதிகளெல்லாம் அசேதநமான தேஹத்தின் தருமங்களே யொழிய நித்யனாய் அபரிணாமியாயிருக்கிற ஆத்மாவின் தருமங்களல்லவென்று அறுதியிடப்பட்டிருக்கிறது. ஆகவே, 'ஜாதஸ்ய ஹி த்ருவோ ம்ருத்யு:' என்றதும் அசேதநமான தேஹத்திற்கே; 'த்ருவம் ஜந்ம ம்ருதஸ்ய ச' என்றதும் அதற்கே. ஆதலால் முன் சொன்ன சங்கைக்கு இடமில்லை.

27. "த்ருவம் ஜந்ம ம்ருதஸ்ய ச" என்றதில் மற்றொரு சங்கை தோன்றும். நஷ்டமாய்ப்போனது மறுபடியும் எப்படி உத்பத்தியை யடைய முடியும்? நம்முடைய சரீரமானது ச்மசானத்தில் கொளுத்தப்பட்டு நீறாகி யொழிகின்றது. அது மறுபடியும் உத்பத்தியடைகின்றதென்றால் இது எப்படி ஸம்பாவிதமாகும்? என்று சங்கிக்க நேரும். இதற்குச் சொல்லுகிறோம். உத்பத்தியாவது என்ன? விநாசமாவது என்ன? என்பதை முதலில் நன்கு தெரிந்துகொள்ளவேண்டும். புதிதாக ஒரு வஸ்து உண்டாவதும் கிடையாது, உள்ளவஸ்து அடியோடு நசித்துப்போவதும் கிடையாது. ஸத்தான த்ரவ்யத்திற்கு அவஸ்தாவிசேஷங்களே உத்பத்தி விநாசங்

கனாகும். தேஹம் உண்டாயிற்றென்றால் என்ன? ப்ருதிவி அப்பு தேஜஸ்ஸு வாயு ஆகாசம் என்கிற பஞ்சபூதங்களின் அம்சங்கள் ஒன்று சேர்ந்து ஒருவிதமான அவஸ்தையையடைந்ததென்றபடி. "மண்ணாய் நீ ரெரிகால் மஞ்சுலாவுமாகாசமுமாம் புண்ணாராக்கை" என்றும், "மஞ்சுசேர் வானெரி நீர் நிலம் காலிவை மயங்கிநின்ற அஞ்சுசேராக்கை" என்றும் திருமங்கையாழ்வாரருளிச் செய்தபடியே பாஞ்சபௌதிக பிண்டமான தேஹம் புதிதாக ஆகாசத்திலின்றும் குதித்து விட்டதன்றே. ஸூக்ஷ்மாவஸ்தையை விட்டு ஸ்தூலாவஸ்தையை பஜிப்பதுதான் உத்பத்தியாகும். மறுபடியும் ஸ்தூலாவஸ்தையை விட்டு ஸூக்ஷ்மாவஸ்தையை பஜிப்பதுதான் விநாசமாகும். வஸ்த்ரம் என்கிற ஒரு வஸ்துவை யெடுத்துக் கொள்வோம். நூல் முதலான சில த்ரவ்யங்கள் ஏற்கனவே இருந்தவைகளே ரசநாவிசேஷத்தாலே வஸ்த்ரமென்னும் பெயரையடைகின்றன. இங்கு நூற்களின் சேர்க்கை தவிர வேறொரு த்ரவ்யம் உள்ளதாவென்று பார்க்கவேணும். பார்க்குமிடத்து வேறொரு த்ரவ்யம் காண்பரிது. "उत्पत्तिविनाशादयः सतो द्रव्यस्य अवस्थाविशेषाः" என்கிற கீதாபாஷ்ய ஸ்ரீஸூக்தியை இங்கே அநுஸந்திப்பது. தென்மொழியால் 'உள்ளது, இல்லது' என்றும், வடமொழியால் 'ஸத், அஸத்' என்றும் வ்யவஹரிக்கப்படுவன—ஸ்தூலாவஸ்தையைப் பற்றவும் ஸூக்ஷ்மாவஸ்தையைப் பற்றவுமே யென்று உணர்க. வேதாந்திகளுக்கு ஸத்கார்யவாதிகளென்று பெயர். "सदेव नीयते व्यक्तिम्— ஸதேவ நீயதே வ்யக்திம்" என்கிற ப்ரமாணத்தைத் திடமாகக் கொள்க.

28. (2-45) "त्रैगुण्यविषया वेदाः निस्त्रैगुण्यो भवार्जुन!" [த்ரைகுண்யவிஷயா வேதா: நிஸ்த்ரைகுண்யோ பவார்ஜுந!] இங்கு சங்கராசார்யருடைய பாஷ்யத்தில், த்ரைகுண்யமாவது ஸம்ஸாரம் என்றும், 'நிஸ்த்ரைகுண்யோ பவ' என்பதற்கு (நிஷ்காமோ பவ) என்று பொருளென்றும் எழுதப்பட்டிருக்கிறது. ஸ்ரீராமாநுஜ பாஷ்யத்தில் மிக விளக்கமும் விரிவுமுள்ளது. ஸத்வம் ரஜஸ் தமஸ் என்கிற முக்குணங்கள் மலிந்த புருஷர்கள் இங்கு த்ரைகுண்ய சப்தத்தினால் சொல்லப்படுகிறார்கள். அன்னவர்களைப்பற்றியவை வேதங்கள் என்றபடி. வேதங்களானவை கேவலம் ஸாத்விகர்களுக்கே வழிகாட்டுகின்றனவென்றில்லை. உலகிலுள்ள சேதநர்கள் சிலர் ஸாத்விகர்களாயும் பலர் ராஜஸர்களாயும் தாமஸர்களாயுமிருக்கக் காண்கிறோம்; வேதங்கள் எல்லார்க்கும் வழிகாட்டியாக வேண்டும். பல சரக்குக் கடைகளில் சர்க்கரை வெல்லம் குங்குமப்பூ கடுகு மிளகு சீரகம் முதலிய எல்லாப் பொருள்களும் (சேர்வாளமுட்பட) விற்கப்படுவது போல, வேதங்கள் முமுக்ஷுக்களுக்கும் வழிகாட்டுகின்றன; புபுக்ஷுக்களுக்கும் வழிகாட்டுகின்றன; பரஹிம்ஸைக்குரிய உபாயங்களையும் காட்டுகின்றன. ஆனால் வேதம் காட்டுகின்றவற்றை யெல்லாம் நாம் கொள்ள வேணுமென்பது கிடையாது. கடையில் விற்கப்படுகிற விஷத்தையுமா நாம் வாங்கிக்கொள்ளுகிறோம்; இல்லையே. அதுபோல, ராஜஸர்களுக்கும் தாமஸர்

களுக்கும் வேதம் காட்டுகிற வழிகளை நாம் பற்றலாகாது. [நிஸ்த்ரைகுண்யோ பவ அர்ஜுந!] இதற்கு ஸ்வாமியினுடைய பாஷ்யம் அற்புதமானது. "इदानीं सत्त्वप्रचुरस्त्वं तदेव वर्धय। नान्योन्यसंकीर्णगुणत्रयप्रचुरो भव। न तत्प्राचुर्यं वर्धयेत्यर्थः।" என்பது பாஷ்ய ஸூக்தி. 'நிஸ்த்ரைகுண்யோ பவ' என்கிற மூலத்தை நோக்கும்போது 'ஸத்வ குணமுட்பட ஒரு குணத்தையும் நீ கைக் கொள்ளாதே' என்று கண்ணபிரானருளிச் செய்வதாகத் தோன்றும். "முக்குணத் திரண்டவை யகற்றி, ஒன்றினி லொன்றி நின்று" என்று திருமங்கையாழ்வார் திருவெழுகூற்றிருக்கையிலருளிச் செய்தபடியே ரஜஸ்தமோ குணங்களை விட்டு ஸத்வகுண மொன்றிலேயே ஊன்றியிருக்கக்கடவாய்—என்று ஸ்வாமி பாஷ்ய மருளிச் செய்வதற்கு மூலத்தில் ஆதாரமில்லை போல் தோன்றும். மேலே உத்தரார்த்தத்தில் 'நித்ய ஸத்வஸ்த:' என்று ஸ்பஷ்டமாகச் சொல்லியிருப்பதற்குச் சேரவே ஸ்வாமி உரைத்தருளினரென்று கொள்ளவேணும். ஆனாலும் 'நிஸ்த்ரைகுண்ய:' என்பதற்கு முக்குணங்களுமில்லாதவனென்று தானே பொருள்படும்; ஸத்வகுண ப்ரசுரன் என்று பொருள்பட வழியுண்டோ வென்று கேள்வி தோன்றும். கேண்மின். (நிஸ்த்ரைகுண்ய:) என்பதற்கு மூன்று குணங்களும் பிசிறியிருக்கப் பெறாதவன் என்பதே அக்ஷரலப்யமான பொருள். 'अन्योन्यसंकीर्णगुणत्रय-प्रचुरो न भव' என்று ஸ்வாமியருளிச் செய்தது பொருத்தமானதே. வேதங்களில் ராஜஸதாமஸர்களுக்குக் காட்டியுள்ள உபாயங்களில் கண்வையாதே ஸாத்விகர்களுக்குக் காட்டியுள்ள உபாயங்களில் மாத்ரமே நீ கண்வைக்கக் கடவாய் என்றதாகத் தேறுகின்றது.

29. (2—47.) "कर्मण्येवाधिकारस्ते मा फलेषु कदाचन॥" [கர்மண்யேவாதிகாரஸ்தே மா பலேஷு கதாசந.] நித்யம் நைமித்திகம் காம்யம் என்று சொல்லப்படுகிற கருமங்களைச் செய்வதில் மாத்திரம் நீ அதிகரிக்கலாமே யல்லது அவற்றின் பலனில் அதிகரிக்கலாகாது-என்பதாக. இதற்குப் பொருள், பலனை விரும்பக்கூடாதென்று சொல்லப்படுகிறதா? அன்றி, பலன்கிடைத்தாலும் அதனை அநுபவிக்கலாகாதென்று சொல்லப்படுகிறதா வென்று இங்கு விமர்சிக்க நேர்கின்றது. "प्रयोजनमनुद्दिश्य न मन्दोऽपि प्रवर्तते— ப்ரயோஜந மநுத்திச்ய ந மந்தோபி ப்ரவர்த்ததே" என்று, பலனை விரும்பாமல் மூடன்கூட ஒரு காரியத்தில் கைவைக்க மாட்டானென்று சாஸ்த்ரமே சொல்லுகையாலே பலனை விரும்பக் கூடாதென்கை பொருந்தாது. பலன் கிடைத்தால் அதையநுபவியாமல் விட்டுவிடுவது புருஷதந்த்ரமன்றே. ஸுகமோ துக்கமோ எது நேர்ந்தாலும் அநுபவித்துக்கொண்டு தானே யிருக்கிறோம். அநுபவிப்பதும் விட்டிடுவதும் நம்மிஷ்டமன்றே. ஆகவே, பலன் கிடைத்தாலும் அதனை யநுபவிக்கலாகாதென்று சொல்லப்படுவதாகக் கொள்வதற்கும் ஔசித்யமில்லை. பின்னை யாது பொருளென்னில்; செய்கிற காரியங்களுக்குப் பலன் கிடைத்தே தீரும்; பலனை நீ கோலாதே. உன்னுடைய அற்பபுத்தியினால் நீ கோலுவாயாகில் க்ஷுத்ரபலனுக்கு மேற்பட உத்தம பலனைக் கோலுவதற்கு உனக்குத் தெரியாது.

அந்தப் பொறுப்பை என்னிடமே விட்டுவிடுவாயானால் என் கருத்தால் உத்தமமான பலனை உனக்குக் கொடுக்கப்படும்— என்று இங்ஙனம் திருவுள்ளம்பற்றியே "मा फलेषु कदाचन" என்றருளிச் செய்ததாகக் கொள்க.

30. "या निशा सर्वभूतानां तस्यां जागर्ति संयमी । यस्यां जाग्रति भूतानि सा निशा पश्यतो मुनेः— யா நிசா ஸர்வபூதாநாம் தஸ்யாம் ஜாகர்த்தி ஸம்யமீ, யஸ்யாம் ஜாக்ரதி பூதாநி ஸா நிசா பச்யதோ முநே:" (2–69.) என்னுமிந்த ச்லோகம் புதிர் போலுள்ளது. ஸர்வப்ராணிகளுக்கும் எது இரவோ அவ்விரவில் ஜிதேந்த்ரியனானவன் விழித்துக் கொண்டிருக்கிறான்; ஸர்வப்ராணிகளும் கண்விழித்துக் கொண்டிருக்கும்படியான பகலானது ஜிதேந்த்ரியனுக்கு இரவாகிறது, என்பது இந்த ச்லோகத்தின் கருத்து. நாம் கண்ணெடுத்துப் பார்க்க விரும்பாமல் வெறுத்திருக்கும் விஷயத்தை ஜிதேந்த்ரியர்கள் விரும்பிப் பார்க்கிறார்களென்றும், நாம் விரும்பிப்பார்க்கும் விஷயங்களை அவர்கள் காணவில்லாமல் வெறுத்திருக்கிறார்களென்றும் சொல்லப்பட்டதாகிறது. பகவத் பாகவத விஷயங்களை நாம் விரும்பிப் பாராமல் வெறுப்புக் கொண்டிருக்கிறோம்; அவ்விஷயங்களையே ஸாதுக்கள் விரும்பிப் பார்க்கிறார்கள். லௌகிக விநோதங்களை நாம் விரும்பிப் பார்க்கிறோம்; அவற்றைக் காணக் கண்கூசியிருக்கிறார்கள் ஸாதுக்கள். நம்முடைய பகல் ஸாதுக்களுக்கு இரவாகிறது; ஸாதுக்களின் பகல் நமக்கு இரவாகிறது. ஸ்வரூபாநுரூபங்களான விஷயங்களில் கண்ணோட்டம் செலுத்தாமல் ஸ்வரூபநாசகங்களான விஷயங்களிலேயே நாம் கண்ணோட்டம் செலுத்தியிருப்பது வர்ஜிக்கத் தக்கது என்னுமிடம் இதனால் சிக்ஷிதமாகிறதென்று கொள்க.

31. யாவரும் நினைப்படியாக தேவதாராதனம் செய்து நிவேதனம் செய்து தச்சேஷத்தைக் கொண்டே தேஹதாரணம் பண்ணவேணுமென்பது ஸகல சாஸ்த்ரங்களின் கொள்கை. இவ்வர்த்தம் மூன்றாமத்யாயத்தில் பலச்லோகங்களில் தெரிவிக்கப்படுகின்றது. 10, 11, 12 ச்லோகங்கள் இவற்றுள் மிக முக்கியமானவை. (10) *सहयज्ञैः प्रजास्सृष्ट्वा पुरोवाच प्रजापतिः । अनेन प्रसविष्यध्वम् एष वोऽस्त्विष्टकामधुक्— ஸஹ யஜ்ஞை: ப்ரஜாஸ் ஸ்ருஷ்ட்வா புரோவாச ப்ரஜாபதி:, அநேந ப்ரஸவிஷ்யத்வம் ஏஷ வோஸ்த்விஷ்டகாமதுக்.* இந்த ச்லோகத்தில் "ஸஹயஜ்ஞா: ப்ரஜா:" என்று சங்கரபாஷ்ய பாடம். அப்பாடத்தில் 'ஸஹயஜ்ஞா:' என்பது ஏகபதம். 'யஜ்ஞஸஹிதா: ப்ரஜா:' என்று சங்கரபாஷ்யம். "सहयज्ञा इति शंकरयादवप्रकाशीयपाठस्तु अप्रसिद्धेरनादृतः" என்பது தாத்பர்ய சந்த்ரிகாஸூக்தி. அன்றியும் (ப்ரஜாபதி:) என்பதற்கு நான்முகனை பொருளாக சங்கரபாஷ்யம் காட்டுகிறது. ஸர்வேச்வரனை நிருபாதிக ப்ரஜாபதியாகையால் ஸ்ரீமந் நாராயணனை இங்கு ப்ரஜாபதி சப்தார்த்தமென்று பகவத் ராமாநுஜ பாஷ்யமுள்ளது. இதில் ஸ்வாரஸ்யமேதென்னில்; இங்குச் சொல்லப்படுகிற அர்த்தம் நான்முகனுட்பட ஸம்ஸாரவசவர்த்திகளான ஸகல ப்ராணிகளையும் நோக்கியது. அவர்களையும் நோக்கியே இக்கட்டளை இடப்படுகிறபடியால் நான்முகனை ஆஜ்ஞாபக கோடியில் சேர்ப்பது உசிதமன்று; ஆஜ்ஞாப்ய கோடியில் சேர்ப்பதுதான் உசிதம் என்று ஸ்வாமியின் திருவுள்ளம். நான்முகனையும் இங்கு ப்ரஜைகளின் கோடியிலே சேர்த்துப் பொருள் செய்வதுதான் பொருத்தமானது. ப்ரளயத்திற்கடுத்தபடியாக ஸ்ருஷ்டிகாலத்தில் பகவான் யஜ்ஞங்களோடு

கூடவே ப்ரஜைகளைப் படைத்து இங்ஙனே சொன்னான்—இந்த யஜ்ஞத்தைக் கொண்டே நீங்கள் அபிவிருத்தியடையக் கடவீர்கள் ; இந்த யஜ்ஞமானது உங்களுக்குப் பரம புருஷார்த்தமான மோக்ஷமென்கிற காமத்தையும் அதற்குச் சார்பான மற்ற காமங்களையும் பூர்த்திசெய்யக் கடவது-என்று ச்லோகத்திற்குப்பொருள். * யஜ—தேவபூஜாயாம் * என்று தாதுவாகையாலே பகவதாராதனந்தான் யஜ்ஞமெனப்படுகிறது. பகவதாராதனம் செய்தே அவரவர்கள் அபிவிருத்தியடைய முடியுமென்றும், பகவதாராதனத்தினால்தான் அபீஷ்டகாமங்கள் நிறைவேறுமென்றும் சொல்லிற்றாயிற்று. இது தன்னை அடுத்த ச்லோகம் விளக்கிறது ; (11) * देवान् भावयताऽनेन ते देवा भावयन्तु वः । परस्परं भावयन्तः श्रेयः परमवाप्स्यथ— தேவாந் பாவயதாநேந தே தேவா பாவயந்து வ:, பரஸ்பரம் பாவயந்த: ச்ரேய: பரம் அவாப்ஸ்யத. * பகவதாராதநமான இந்த யஜ்ஞத்தினாலே எனக்கு சரீர பூதர்களான தேவர்களை ஆராதியுங்கள் ; அப்படி ஆராதிக்கப்பட்ட அந்த தேவர்கள் மேன் மேலும் தங்களுடைய ஆராதனைக்கு வேண்டிய பொருள்களினால் உங்களைப் போஷிக்கக் கடவர்கள். இப்படி பரஸ்பரம் த்ருப்தி பெறுவித்துக் கொண்டு சிறந்த ச்ரேயஸ்ஸான மோக்ஷத்தை அடைவீர்கள்-என்பது இந்த ச்லோகத்தின் கருத்து. இதில் பூர்வார்த்தம் இப்படியிருக்கலாமோ? வேறு விதமாக இருக்கவேண்டாவா? 'நீங்கள் என்னை ஆராதியுங்கள் ; நான் உங்களை த்ருப்தி செய்விக்கிறேன்' என்று சொல்லவேண்டியிருக்க, தன்னிற்காட்டில் நீசர்களான தேவதைகளை ஆராதிக்கும்படி நியமிப்பதும், அந்த தேவதைகள் உங்களுக்குப்பலன் கொடுப்பர்களென்று சொல்லுவதும் எதற்காக? என்று சங்கை தோன்றும். கேண்மின். விஷயங்களைப் படிப்படியாகத் தானே சொல்ல வேண்டியிருக்கிறது. மேலே ஒன்பதாமத்யாயத்தில் (22) * அநந்யாச் சிந்தயந்தோ மாம் யே ஜநா: பர்யுபாஸதே * என்கிற ச்லோகத்தினால் தன்னையே உபாஸிக்கும்படி சொல்லி, அதற்கடுத்த (23) ச்லோகத்தில் * ये त्वन्यदेवता भक्ता यजन्ते श्रद्धयाऽन्विताः । तेऽपि मामेव कौन्तेय ! यजन्त्यविधिपूर्वकम्— யே த்வந்யதேவதா பக்தா யஜந்தே ச்ரத்தயாந்விதா:, தேபி மாமேவ கௌந்தேய யஜந்த்யவிதிபூர்வகம் * என்று, இதரதேவதைகளை பஜிப்பவர்களும் ஒருவாறு தன்னையே பஜித்து ஆராதனை செய்கிறார்களென்று சொல்லி, அதற்கடுத்த (24) ச்லோகத்தில்— * अहं हि सर्वयज्ञानां भोक्ता च प्रभुरेव च— அஹம் ஹி ஸர்வயஜ்ஞாநாம் போக்தா ச ப்ரபுரேவ ச * என்று, எந்த தேவதையை நோக்கி எந்த ஆராதனம் செய்தாலும் அதெல்லாம் தன்னையே சேருகிறதென்றும் அதற்குப் பலனும் தானே (ஸத்வாரகமாகக்) கொடுப்பதாகவும் சொல்லியிருப்பதால் "देवान् भावयतानेन ते देवा भावयन्तु वः" என்றவிதில் யாதொரு குறையுமில்லையென்றுணர்க.

32. இனி ப்ரக்ருத விஷயத்திற் செல்வோம். (3—12.) * इष्टान् भोगान् हि वो देवा दास्यन्ते यज्ञभाविताः । तैर्दत्तानप्रदायैभ्यो यो भुङ्क्ते स्तेन एव सः— இஷ்டாந் போகாந் ஹி வோ தேவா தாஸ்யந்தே யஜ்ஞபாவிதா:, தைர்தத்தாந் அப்ரதாயைப்யோ யோ புங்க்தே ஸ்தேந ஏவ ஸ: * இந்த ச்லோகத்தின் கருத்தாவது—உங்களுடைய யஜ்ஞங்களாலே ஆராதிக்கப்பட்டவர்களும் என்னுடைய சரீர பூதர்களுமான தேவர்கள் உங்களுக்கு அபேக்ஷிதங்களான போகங்களைக் கொடுப்பர்கள். ஆராதநோபகரணங்களாக உங்களிடமுள்ள பொருள்களெல்லாம் அந்த தேவர்களாலேயே கொடுக்கப்பட்டவைகளாத

லால் அவற்றை அவர்களுக்கு அர்ப்பணம் செய்யாமல் புஜிப்பவன் கள்வனேயாவன், நரகமேயவனுக்குப் பலிக்கும்—என்றபடி. இதில் [தைர் தத்தாந்] என்றது குறிக்கொள்ளத்தக்கது. தைத்திரீயஸம்ஹிதையில் மூன்றாவது காண்டத்தில் இரண்டாவது ப்ரச்நத்தில் "इतः प्रदानं देवा उपजीवन्ति अमुतः प्रदानं मनुष्याः" என்று ஓதப்பட்டுள்ளது. இதன் கருத்தாவது, தேவதைகளுக்கு ஆகவேண்டிய உணவு இங்கிருந்து செல்லுகிறது; மனிதர்களான நமக்கு ஆகவேண்டிய உணவு அங்கிருந்து வருகிறது என்பதாம். * முந்திவானம் மழைபொழியு மூவாவுருவின் மறையாளர், அந்திமூன்று மனலோம்புமணியார்வீதி யழுந்தூரே * என்று திருமங்கையாழ்வாரருளிச் செய்தபடியே இங்கிருக்கும் நாம் யஜ்ஞபாகங்களைச் செய்து தேவர்களை ஸந்த்ருப்தி பண்ணிவைத்தால் திருப்தர்களான அவர்கள் அங்கிருந்து மழையையனுப்பி நம்மை ஜீவிக்கச் செய்கிறார்களென்கை. ஆகவே நாம் தேவதாராதனம் பண்ணாமல் வெறுமனே வயிற்றை வளர்த்தால் ஜீவிப்பதும் அரிதாம் என்றதாயிற்று. பலபேர்கள் தேவதாஸத்பாவத்தையே அங்கீகரியாதவர்களாயும் அவர்களுக்கு ஆராதனம் செய்யாதவர்களாயும் உண்டுடுத்துத் திரியவில்லையா? அவர்கள் சுகமாக ஜீவிக்கவில்லையா? என்கிற ஆக்ஷேபத்தை இங்குச் சிலர் செய்யக்கூடும். அவர்கள் "अधर्मेणैधते तावत् ततो भद्राणि पश्यति । शनैरावर्तमानस्तु कर्तुर्मूलानि कृन्तति ॥" என்கிற மநுமஹர்ஷிவசனத்தை நோக்கித் தெளியக்கடவர்கள். அதர்மம் செய்பவர்கள் மேன்மேலும் க்ஷேமங்களை யடைவதாக உலகில் நாம் காண நேர்ந்தாலும், அதர்மம் உடனே ஹாநியை விளைத்திடாமல் நாளடைவில் மூலஹாநியை விளைத்திடுமென்று கொள்ளவேணும். இதை மநுமஹர்ஷி பல ச்லோகங்களால் விரிவாகச் சொல்லியிருக்கிறார்.

33. இனி (3—21) * यद्यदाचरति श्रेष्ठः तत्तदेवेतरो जनः । स यत्प्रमाणं कुरुते लोकस्तदनुवर्तते— யத் யதாசரதி ச்ரேஷ்டஸ் தத் ததேவேதரோ ஜந:, ஸ யத்ப்ரமாணம் குருதே லோகஸ் ததநுவர்த்ததே. * என்னும் ச்லோகம் சிஷ்டாசாரத்தின் சிறப்பைத் தெரிவிப்பது. ஸம்ஸ்க்ருதஜ்ஞர்களுக்கு அஸாதாரணமாகப் பொருள்படக்கூடிய ச்லோகமிது. இதன் உத்தரார்த்தத்திற்கு பாஷ்யமிட்ட சங்கராசார்ய ஸ்வாமிகள் "सः श्रेष्ठः यत् प्रमाणं कुरुते- लौकिकं वैदिकं वा; लोकः तत् अनुवर्तते- तदेव प्रमाणीकरोतीत्यर्थः" என்றுரைத்தார். ச்ரேஷ்டராயிருப்பவர் யாதொன்றை ப்ரமாணமாகக் கொள்ளுகிறார்களோ, அது தன்னையே லோகமும் ப்ரமாணமாகக் கொள்ளுகிறது என்பதாகப் பொருள் காட்டப்பட்டதாயிற்று. மத்வாசார்யரான ஆனந்ததீர்த்த ஸ்வாமிகளும் இவ்வண்ணமாகவே பொருளுரைத்தார். "स यद्वाक्यादिकं प्रमाणीकुरुते- यदुक्तप्रकारेण तिष्ठतीत्यर्थः" என்பது அவருடைய பாஷ்யபங்க்தி. ஆக இவற்றால் 'யத்ப்ரமாணம்" என்றவிடத்தில் பதச்சேதம் இவர்களுக்கு விவக்ஷிதம் என்று தேறிற்று. யத் என்பது தனிப்பதமென்று முடிந்தது. இனி நம் ஸ்வாமியின் பாஷ்ய ப்ரக்ரியையைப் பார்ப்போம். அவர் இங்கு இரண்டு பதங்களாகத் திருவுள்ளம் பற்றாமல் (யத்ப்ரமாணம்) என்று பஹுவ்ரீஹி ஸமாஸங் கொண்ட ஓரே பதமாகத் திருவுள்ளம் பற்றி பாஷ்யமிட்டருளியுள்ளார். பூர்வார்த்தத்தில் "ச்ரேஷ்ட: யத்யத் ஆசரதி" என்றதற்கு— ச்ரேஷ்டராயிருப்பார் எந்தெந்த கருமத்தை யநுஷ்டிக்கிறாரோ என்பதாகப் பொருளாதலால் அந்த கர்மத்தைப் பற்றியே உத்தரார்த்தமும் சொல்லு

கிறதென்று ஸ்வாமியின் திருவுள்ளம். சிஷ்டர்கள் தாங்களனுஷ்டிக்கிற கருமத்திற்கு எவ்வளவு அவதி வைத்துக் கொள்ளுகிறார்களோ அவ்வளவு அவதியையே பிறரும் வைத்துக்கொள்ளுகிறார்கள் என்றபடி. இதை தாத்பர்யசந்த்ரிகையில் வேதாந்த தேசிகன் விவரித்துள்ளார். 'பெரியோர்கள் அனுஷ்டிக்கிற கருமத்தையே பிறரும் அனுஷ்டிக்கிறார்கள்' என்று இவ்வளவு மாத்திரமே சொன்னால் போதாது. அவர்கள் அக்கருமத்தை எந்த விதமாக அநுஷ்டிக்கிறார்களோ அந்த விதமாகவே பிறரும் அநுஷ்டிக்கிறார்கள் என்றும் சொல்லவேண்டியது இங்கு ஆவச்யகமாதலால் அதற்குச் சேர ஸ்வாமியின் பாஷ்யம் மிகப் பொருத்தமாக அவதரித்துள்ளது. பெரியார் எதை ப்ரமாணமாகக்கொள்ளுகிறாரோ அதையே பிறரும் ப்ரமாணமாகக் கொள்ளுகிறாரென்பது ப்ரக்ருதத்தில் அபேக்ஷிதமாதலால் இதர பாஷ்யகாரர்கள் நம் ஸ்வாமிபோல் சொல்லவில்லை. 'யத் ப்ரமாணம் குருதே' என்றதற்கு இங்ஙனே பொருள் கொண்டால் "லோகஸ் தத்நுவர்த்ததே" என்ற மேல் வாக்யத்தில் தத் என்றது ஸ்வாரஸ்யமாகப் பொருள் தருமோவென்று ஒரு சங்கை தோன்றும். இதற்குத் தாத்பர்ய சந்த்ரிகையிலேயே தகுந்த பரிஹாரமுள்ளது, கண்டு கொள்க. இதர பாஷ்யகாரர்களுக்குத் தோன்றாத அர்த்தம் இங்கு நம் ஸ்வாமிக்குத் தோன்றினது எதனாலென்னில்; திருப்பாவை ஜீயரென்று ப்ரஸித்தி பெற்றிருந்ததனாலேயே என்னலாம். திருப்பாவையில் * மாலே மணிவண்ணா * என்கிற பாசுரத்தில் "மேலையார் செய்வனகள் வேண்டுவன கேட்டியேல்" என்றுள்ளது. இங்கு "மேலையார் செய்வனகள் கேட்டியேல்" என்னுமளவே போதுமாயிருக்க இடையில் 'வேண்டுவன' என்று ப்ரயோகித்தது குறிக்கொள்ளத் தக்கது.

34. இதற்கடுத்த ச்லோகம் (3–22) *न मे पार्थास्ति कर्तव्यं त्रिषु लोकेषु किञ्चन। नानवाप्तमवाप्तव्यं वर्त एव च कर्मणि— ந மே பார்த்தாஸ்தி கர்த்தவ்யம் த்ரிஷு லோகேஷு கிஞ்சந, நாநவாப்தமவாப்தவ்யம் வர்த்த ஏவ ச கர்மணி * என்பது. இதில் பகவான் தானும் கர்மாநுஷ்டானத்தில் ஊன்றியிருப்பதாக வற்புறுத்திச் சொல்லப்பட்டுள்ளது. க்ருஷ்ணாவதாரத்திற்கு முந்தின அவதாரமான ஸ்ரீ ராமாவதாரத்தில் இது தன்னை ஸுஸ்பஷ்டமாகக் காணலாம். விச்வாமித்ர முனிவன் தசரத மன்னவனிடம் வந்து * அஹம் வேத்மி மஹாத்மாநம் * இத்யாதிகளைச் சொல்லி ஸ்ரீராமபிரானைக் கொண்டு சென்றான். * ஊந ஷோடச வர்ஷோ மே ராமோ ராஜீவ லோசந: என்று சக்ரவர்த்தி சொன்னபடி இராமன் செந்தாமரைக் கண்ணனாகையாலே ஸூர்யன் அஸ்தமித்தவாறே தாமரை முகுளிதமாகும் கணக்கிலே இராமனும் கண்மூடினான். பிறகு ஸுப்ரபாத காலத்திலே முனிவன் "கௌஸல்யா ஸுப்ரஜா ராம! பூர்வா ஸந்த்யா ப்ரவர்த்ததே" என்று சொல்லித் துயிலுணர்த்துகிறான். "இராமா! எழுந்திரு; நாம் சீக்கிரமாக ஆச்ரமம் சென்று சேர்ந்து யாகம் தொடங்கவேணும்' என்று சொல்லவேண்டியிருக்க, அங்ஙனே சொல்லாதே "உத்திஷ்ட நரசார்தூல! கர்த்தவ்யம் தைவமாஹ்நிகம்" என்றான் முனிவன். ப்ராதஸ் ஸந்த்யாநுஷ்டானம் வழுவாமற் செய்யவேண்டுமே, அதற்காக எழுந்திராய் என்று சொன்னவிதனால் எம்பெருமானுடைய அவதாரம் முக்கியமாக தர்மாநுஷ்டானத்திற்காகவே யென்பது நன்கு விளங்கும். மேலே பிராட்டியைப் பிரிந்து வருந்திக் கிடக்கிற காலங்களிலும்

பெருமான் ஸந்த்யாகாலங்களில் தவறாது ஸந்த்யாவந்தனம் அனுஷ்டித்தபடியை வால்மீகி பகவான் அழகாகக் கூறியிருக்கின்றார். ஆகவே பகவான் "वर्त एव च कर्मणि" என்று சொன்னது மிகப்பொருந்தும்.

35. இனி நான்காமத்யாயத்தைப் பற்றிச் சிறிது விரிவாக வரைக்க விரும்புகிறோம். கீதையில் 'अर्जुन उवाच, भगवानुवाच' என்னுமிவை மாறி மாறி வருவதைக் காணலாம். அர்ஜுனன் கேள்வி கேட்பான்; அதற்குக் கண்ணபிரான் விடை கூறுவன். வினாவுக்குப் பிறகு விடை, விடைக்குப் பிறகு வினா—என்றிப்படி மாறி மாறி நடந்து செல்லும். மூன்றாமத்யாயத் தொடக்கத்தில் 1, 2 ச்லோகங்கள் அர்ஜுனனுடைய வினா. அதன் பிறகு 3 முதல் 35 ச்லோகம் வரை பகவானுடைய விடை. அதன் பிறகு முப்பத்தாறாவது ச்லோகமொன்று அர்ஜுனனுடைய வினா. பிறகு 37 முதல் 43 வரை அத்யாயம் பூர்த்தியாக பகவானுடைய விடை. அவ்வளவோடு அத்யாயம் முடிந்திருக்கிறது. இனி, மேல் விஷயம் நடைபெற வேணுமானால் நான்காமத்யாயத்தின் தொடக்கத்தில் [अर्जुन उवाच] என்று அர்ஜுனனுடைய வினா ஆரம்பமாகவேணும். மேலே பகவானுடைய விடை முடிந்திருப்பதால் அதற்குமேல் அர்ஜுனன் வினவினால் பகவான் விடை கூறவேணும். அபேக்ஷிதார்த்தமாகச் சொல்லத்தகாதன்றோ. அர்ஜுனனொன்றும் கேட்டிலன். அப்படியிருக்கும் நான்காமத்யாயம் [श्रीभगवानुवाच] என்றே தொடங்குகிறது. இதை ஆழ்ந்து விமர்சிக்குமளவில் ஒன்று தோன்றுகிறது. கீழ் கர்மயோகத்தைப்பற்றி விரிவாகச் சொல்லக் கேட்ட அர்ஜுனனுக்குக் கவலையுண்டாயிற்றுப் போலும். அதனைக் கீதை கேட்டது போது மென்றெண்ணித் தலைகுனிந்து வாளா விருந்தான்; 'நாம் ஏதாவது கேட்டால் தானே கண்ணன் வாய்திறக்கப்போகிறான், நாம் வாய்மூடிக் கிடந்தோமாகில் தானே நிற்கிறான்; கீதையும் ஸமாப்தமாகிறது' என்று நினைத்தான் போலும் அர்ஜுனன். இன்னுமெவ்வளவோ அர்த்தவிசேஷங்களைச் சொல்ல நினைத்திருக்கிற கண்ணபிரான் எங்ஙனம் வாய்மூடி நிற்பன்? இவ்வளவோடு கீதையை எப்படி முடித்திடுவன்? "चातकस्त्रिचतुरान् पयःकणान् याचते जलधरं पिपासया। सोऽपि पूरयति विश्वमम्भसा हन्त हन्त! महतामुदारता॥" என்கிறான் பண்டிதராஜன். கேட்பவர்கள் சிறிது கேட்டாலும் மஹோதாரர்கள் தாராளமாகவன்றோ கொடுப்பவர்கள். அதுபோல் கண்ணபிரானும் "यच्छ्रेयः स्यान्निश्चितं ब्रूहि तन्मे शिष्यस्तेऽहं शाधि मां त्वां प्रपन्नम्" என்று முந்துற முன்னம் அர்ஜுனன் பிரார்த்தித்ததையே குவலாகக் கொண்டு இடையிடையே அவனுடைய அபேக்ஷையை ப்ரதீக்ஷியாமல் திருவுள்ளத்தில் தோன்றுகிற அரும்பொருள்களை யெல்லாம் தானே ப்ரஸக்தியிட்டுக்கொண்டு வெளியிடுகிறானாயிற்று. இப்படி மேலும் பல விடங்களிற் காணலாம். அர்ஜுனன் கேளாமலிருக்க பகவான் தானாகவே அடியிட்டுச் சொல்லுகிற அத்யாயங்கள் மேலேயும் பலவுள.

36. இப்போது நான்காமத்யாயத் தொடக்கத்தில் "इमं विवस्वते योगं प्रोक्तवानहमव्ययम्। विवस्वान्मनवे प्राह मनुरिक्ष्वाकवेऽब्रवीत्॥ एवं परम्पराप्राप्तमिमं राजर्षयो विदुः। स कालेनेह महता योगो नष्टः परन्तप। स एवायं मया तेऽद्य योगः प्रोक्तः पुरातनः। भक्तोऽसि मे सखा चेति रहस्यं ह्येतदुत्तमम्॥" என்று பகவான் சொன்னான். எப்படியாவது அர்ஜுனன் வாய்திறக்கு

கேள்வி கேட்கும்படி செய்யவேணுமென்றே கண்ணன் இது கூறினன். இந்த ச்லோகங்களின் பொருள் யாதெனில்; அப்பா அர்ஜுநா! இப்போது நான் உனக்குக் கர்மயோகத்தைப்பற்றி விரிவாகச் சொன்னேனே. இது கேவலம் யுத்தப்ரோத்ஸாஹநத்திற்காக இப்போது புதிதாய்ச் சொல்லப்பட்டதென்று நினையாதே; மந்வந்தரத்தின் ஆதியிலேயே ஸகல ஜகதுத்தாரணார்த்தமாக பரம புருஷார்த்தமான மோக்ஷத்திற்கு ஸாதகமாய் இந்த யோகத்தை நானே விவஸ்வானுக்குச் சொன்னேன்; விவஸ்வான் மனுவுக்குச் சொன்னார்; மநு இக்ஷ்வாகுவுக்குச் சொன்னார்; இப்படியாக ஸம்ப்ரதாய பரம்பரயா ப்ராப்தமான இந்த யோகத்தை பூருவர்களான ராஜர்ஷிகள் உபதேசமுறையில் தெரிந்து கொண்டார்கள்; அப்படிப்பட்ட யோகம் இடையில் நெடுங்காலம் தகுந்த அதிகாரிகளில்லாமையாலே விநஷ்டப்ராயமாயிருந்தது; அந்த புராதந யோகமே தான் இப்போது உன்னுடைய பக்தியும் நேசமும் காரணமாக உனக்கு என்னால் உபதேசிக்கப்பட்டது. இதை நான் தவிர வேறொருவரும் தெரிந்து கொள்ளவும் சொல்லவும் முடியாது; இது வேதாந்தோதிதமான உத்தமரஹஸ்யமன்றோ—என்பதாம். பகவான் இப்படி சொன்னதில் எவ்விதமான அநுபபத்தியுமில்லை; உண்மையான இவ்விஷயத்தில் எவ்விதமான ஆக்ஷேபமும் ஆஸ்திகர்கள் செய்ய ப்ரஸக்தியில்லை. ஆனாலும் அர்ஜுநன் இதில் ப்ரபலமான ஆக்ஷேபம் செய்திருக்கிறான். அது அடுத்த ச்லோகத்தில் தெரிவிக்கப்படுகிறது— "अवरं भवतो जन्म परं जन्म विवस्वतः। कथमेतद्विजानीयां त्वमादौ प्रोक्तवानिति॥" என்று. இதன் பொருள் யாதெனில்; கண்ணா! நீயோ என்னோடு ஸமகாலத்தில் ஜனித்து என்னைப்போலவே சிறு வயதுடையவனாயிராநின்றாய்; எந்த விவஸ்வானுக்கு நீ உபதேசித்ததாகச் சொல்லுகிறாயோ, அந்த விவஸ்வான் இருபத்தெட்டு சதுர்யுகங்களுக்கு முன்னேயிருந்தவனாதலால் மிகமிக முற்பட்டவன். அவனுக்கு நீ உபதேசித்தாயென்பது அஸம்பாவிதமாகவன்றோவுள்ளது. இதை நான் எப்படி நம்புவது? என்பதாம்.

37. மேலே யெடுத்த " அவரம் பவதோ ஜந்ம " என்கிற அர்ஜுந ப்ரச்நமான ச்லோகத்திற்கு பாஷ்யம் செய்யாநின்ற சங்கராசார்யரும் மத்வாசார்யரும் வாளா சென்றார்கள். நம் ஸ்வாமி யெம்பெருமானார் இங்கு தமது பாஷ்யத்தில் விசேஷ சர்ச்சை செய்தருளுகிறார். கண்ணபிரானை நோக்கி அர்ஜுநன் இப்படி கேள்வி கேட்டிருக்கிறானே, இது ஸம்பாவிதமான கேள்வியாக இல்லை. ஏனெனில்; அர்ஜுநனானவன் கண்ணபிரானை வெறும் இடைப்பிள்ளையாக நினைத்திருக்கிறானா? அல்லது ஸாக்ஷாத் பரமபுருஷனாக நினைத்திருக்கிறானா? என்பதை முன்னம் விமர்சித்து முடிக்க வேண்டும். கேவலம் இடைப்பிள்ளையாகவே நினைத்திருந்தானாகில் இங்ஙனம் கேள்வி கேட்க ஔசித்யமுண்டு. ஸாக்ஷாத் பரம புருஷனாகவே நினைத்திருக்கிறானென்று தேறுமாகில் இங்ஙனம் கேள்வி கேட்க இடமே கிடையாது. பரமபுருஷன் எப்போதுமுள்ளவனாகையாலே அவன் விவஸ்வானுக்கு உபதேசிப்பதில் அஸம்பவமொன்றுமில்லையாகையாலே 'அவரம் பவதோ ஜந்ம பரம் ஜந்ம விவஸ்வத:' என்று வாய்திறக்கவே வழியில்லை. ஆகவே அர்ஜுநன் கண்ணனை கேவலம் இடைப்பிள்ளையாகவே கொண்டு இங்ஙனம் கேள்வி கேட்டிருக்கிறானென்று கொள்ளவேணும். இது முன்பின் ஸந்தர்ப்பங்களுக்கு அடியோடு ஒவ்வாது. தர்மபுத்ரருடைய ராஜஸூயாதிகளில்

பீஷ்மர்போல்வாரிடத்தில் "कृष्ण एव हि लोकानामुत्पत्तिरपि चाप्ययः। कृष्णस्य हि कृते भूतमिदं विश्वं चराचरम्॥" இத்யாதிகள் பலவும் கேட்டிருக்கிறானர்ஜுனன். மேலே பத்தாவது அத்யாயத்தில் இவ்வர்ஜுனன் தானே கண்ணபிரானை நோக்கி "परं ब्रह्म परं धाम पवित्रं परमं भवान्। पुरुषं शाश्वतं दिव्यमादिदेवमजं विभुम्॥ आहुस्त्वामृषयस्सर्वे देवर्षिर्नारदस्तथा। असितो देवलो व्यासः स्वयं चैव ब्रवीषि मे॥" என்று கூறுகிறான். கண்ணன் பரமபுருஷனென்பதைப் பலரிடத்தில் பலகால் தான் கேட்டிருப்பதாக ஸ்பஷ்டமாகக் கூறியுள்ளான். இப்படியிருக்கும்போது 'அபரம் பவதோ ஜந்ம' என்கிற கேள்வி உதிக்க ப்ரஸக்தியே கிடையாது என்பதை ஸ்வாமி உபபாதித்துக் காட்டியுள்ளார். அஸம்பாவிதமான ப்ரச்நம் எப்படி தோன்றிற்று? என்னில்; இதற்கு ஸமாதானமும் ஸ்வாமி வெகு பொருத்தமாக அருளிச் செய்துள்ளார்; அதை உபபாதிக்கிறோம் கேண்மின்.

38. இங்கு ஸ்வாமியின் கீதாபாஷ்ய ஸூக்தி பாராயணக்ரமமாகையாலே கண்டபாடம் செய்து தரிக்கப்படவேண்டுமென்பதற்காக அதை அப்படியே எடுத்துக் காட்டுகிறோம் :— "अत्रोच्यते। जानात्येवायं भगवन्तं वसुदेवसूनुं पार्थः। जानतोऽपि अजानत इव पृच्छतः अयमाशयः; निखिलहेयप्रत्यनीककल्याणैकतानस्य सर्वेश्वरस्य सर्वज्ञस्य सत्यसंकल्पस्य अवाप्तसमस्तकामस्य कर्मपरवशदेवमनुष्यादिसजातीयं जन्म किमिन्द्रजालादिवन्मिथ्या? उत सत्यम्? सत्यत्वे च कथं जन्मप्रकारः? किमात्मकोऽयं देहः? कश्च जन्महेतुः? कदा च जन्म? किमर्थं च जन्म? इति परिहारप्रकारेण प्रश्नार्थो विज्ञायते॥"

என்பன கீதாபாஷ்ய பங்க்திகள். இவற்றின் ஸாரமான கருத்து என்னவென்றால் அர்ஜுநன் கண்ணபிரானை ஸாக்ஷாத் பரமபுருஷனாகவே தான் உறுதி கொண்டிருக்கிறான். அப்படியிருக்கும் அவனது பெருமையை அறியாதவன்போல் கேள்வி கேட்டிருப்பது ஏனென்னில், மேலே கண்ணபிரான் இவனுக்கு விடை கூறுகின்ற ப்ரகாரங்களை நோக்குமிடத்து, அர்ஜுநன் என்ன அபிப்ராயங்கொண்டு இக்கேள்வி கேட்டிருக்கிறானென்பதை எளிதாக நிர்ணயிக்கலாம். மேலே பகவான் நாலைந்து ச்லோகங்களாலே விடை கூறுமிடத்து, தன்னுடைய அவதாரம் இந்த்ர ஜாலங்கள் போலே அஸத்யமன்று, ஸத்யமேயென்பதையும், தன்னுடைய அவதாரப்ரகாரத்தையும் திவ்யமங்கள விக்ரஹத் தன்மையையும் அவதார ஹேதுவையும் அவதாரகாலத்தையும் அவதார ப்ரயோஜநத்தையும் அருளிச் செய்திருக்கிறான். இவையெல்லாம் அப்ரஸ்துதமாகக் கூடாது. அர்ஜுநன் கேளாத அம்சங்களுக்குக் கண்ணன் விடை கூறுவதாகத் தேறினால் அது மிகவும் அஸமஞ்ஜஸமாகும். இக்கேள்வியும் அர்ஜுநனுடைய உள்ளத்திலுறைந்தவை; அவன் கேள்வி கேட்கத் தொடங்கின போதே இவ்வளவும் இவன் கேட்க நினைத்திருக்கிறானென்று கண்ணபிரான் தெரிந்துகொண்டு அவனை வாயடக்கி தாம் விரிவாக விடையளிக்கிறார். இல்லையாகில் "பஹூநி மே வ்யதீதாநி ஜந்மாநி" என்ற அடுத்த வாக்யமொன்றோடே கண்ணன் தன் விடையை முடித்திருக்கவேண்டுமே. 'அப்பா அர்ஜுநா! நீ நினைக்கிறபடி நான் இப்போதாகப் பிறந்தவனல்லேன்; அநாதிகாலமாகப் பல பிறப்பும் பிறந்துகொண்டிருக்கிறேன்; ஆகவே முன்னொரு பிறப்பில் விவஸ்வானுக்கு உபதேசித்தேனென்பது அஸம்பாவிதமன்று காண்' என்று இவ்வளவேயன்றோ சொல்லி முடித்திருக்கவேண்டும். அப்படியில்லையே. இதற்கு மேலுள்ள விஷயங்களைச் சொல்லுவதற்கு என்ன ப்ரஸக்தி

யென்று பார்க்கவேணுமே. பார்க்குமளவில், அர்ஜுநன் இவ்வளவையும் அறிந்து கொள்ள விரும்பியே அக் கேள்வி கேட்கத் தொடங்கினானென்பது அநாயாஸஸித்த மாகும்—என்பது எம்பெருமானார் திருவுள்ளம்.

39. மேல் ச்லோகமானது (4-5.) *बहूनि मे व्यतीतानि जन्मानि तव चार्जुन* என்றுள்ளது. இதனால் பகவானுடைய அவதாரம் இந்த்ரஜாலாதிகளைப் போல் அஸத்யமன்று, ஸத்யந்தா னென்பது தெரிவிக்கப்பட்டதாகிறது. இங்கே தேசிகனுடைய தாத்பர்யசந்த்ரிகையில் நன்கு விளக்கமுள்ளது. ''सत्यत्वे हि बहुत्वादीनि स्वरसानि। जन्मानीति चोक्तम्, न जन्मप्रतिभासा इति। तव चेति अपूर्वस्यार्थस्योपादानमपि एतत्सत्यत्वदृष्टान्ताभिप्राय-मन्तरेण न घटते। न ह्यर्जुनस्य जन्म मिथ्या ... ...'' இத்யாதி தாத்பர்ய சந்த்ரிகா ஸூக்திகள் காண்க. இதில் முக்கியமான விஷயம்- 'அர்ஜுநா! எனக்கும் உனக்கும் பல ஜன்மங்கள் கடந்திருக்கின்றன' என்கிறான் கண்ணன். ஜன்மங்கள் என்று சொல்லப்பட்டிருக்கிறதே யொழிய ஜன்மப்ரதிபாஸங்களென்று சொல்லப்பட்டிருக்கவில்லை. தவிரவும், அர்ஜுநனுடைய ஜன்மத்தைப் பற்றி ப்ரஸ்தாவிக்க வேண்டுவது அப்ரஸக்தமாயிருக்க 'तव चार्जुन' என்று அவனுடைய பிறப்புகள் த்ருஷ்டாந்தமாக எடுத்துக் காட்டப்பட்டிருக்கின்றன. 'அப்பா! உன் பிறப்பு எப்படி ஸத்யமோ அப்படியே என் பிறப்பும் ஸத்யங்காண்' என்று தெரிவிக்கப்பட்டதாகத் தேறுகின்றது. இதற்கடுத்த (4-6.) *अजोऽपि सन्नव्ययात्मा भूतानामीश्वरोऽपि सन्। प्रकृतिं स्वामधिष्ठाय संभवाम्यात्ममायया* என்கிற ச்லோகத்தினால்- அவதார ப்ரகாரமும், அவதாரங்களில் பரிக்ரஹிக்கிற திவ்யமங்கள விக்ரஹத்தின் உண்மைத் தன்மையும் அவதார ஹேதுவுமாகிற மூன்று விஷயங்கள் தெரிவிக்கப்படுகின்றன. அஜத்வம் அவ்யயத்வம் ஸர்வேச்வரத்வம் ஆகிற இந்த பரமேச்வரத தன்மையை விடாமலே பிறக்கிறேனென்கையாலே அவதாரப்ரகாரம் சொல்லிற்று. ''ப்ரக்ருதிம் ஸ்வாம் அதிஷ்டாய ஸம்பவாமி'' என்று, அப்ராக்ருத திவ்யமங்கள விக்ரஹத்தையே கொண்டு அவதரிப்பதாகச் சொல்லுகையாலே திவ்யமங்களவிக்ரஹத்தின் உண்மைத்தன்மை சொல்லிற்று. இவ் 'ஆத்மமாயயா' என்றதைப்பற்றிக் கீழேயே மிக விரிவாக நிரூபணம் செய்திருக்கிறோம். என்னுடைய ஸங்கல்பத்தினாலேயே அவதரிக்கிறேனென்று பொருளாகையாலே இச்சைதான் அவதாரஹேது வென்று சொல்லிற்றாயிற்று. இதற்கடுத்த (4-7.) *यदा यदा हि धर्मस्य ग्लानिर्भवति भारत। अभ्युत्थानमधर्मस्य तदात्मानं सृजाम्यहम्* என்கிற ச்லோகத்தினால் அவதாரகாலம் சொல்லிற்று.

40. இந்த ச்லோகத்தில் ''ததா ஆத்மாநம் ஸ்ருஜாம்யஹம்'' என்ற விடத்தில் ரஸ்யமும் ரஹஸ்யமுமான ஒரு விசேஷார்த்தமுண்டு. மேலே ஸப்தமாத்யாயத்தில் ''ஜ்ஞாநீ த்வாத்மைவ மே மதம்'' (18) என்று கீதாசார்யன் தானே ஜ்ஞாநிகளைத் தனக்கு ஆத்மாவாகச் சொல்லுகையாலே இங்கு ''ஆத்மாநம் ஸ்ருஜாமி'' என்றதற்கு ஜ்ஞாநிகளை அவதரிப்பிக்கிறேன் என்பதும் அந்தரங்கமான பொருளாகும். அதர்மம் தலையெடுத்து தர்மம் தலைமடிந்து நிற்கும் காலங்களில் பகவான் தான் வந்து அவதரிப்பதிற்காட்டிலும் ஜ்ஞாநிகள் அவதரிப்பதில் ப்ரயோஜநாதிசயமுண்டு. இராமாநுச நூற்றந்தாதியில் (41) *மண்மிசை யோனிகள் தோறும் பிறந்து எங்கள் மாதவனே கண்ணுற நிற்கிலும் காணகில்லா வுலகோர்களெல்லாம் அண்ணலிராமாநுசன்

வந்துதோன்றிய வப்பொழுதே நண்ணரு ஞானம் தலைக்கொண்டு நாரணற்காயினரே * என்றுள்ள பாசுரம் இங்குப் பொருத்தமாக அநுஸந்திக்கத்தகும். அன்றியும் இந்த நான்காமத்யாயத்திலேயே மேல் (34) * तद्विद्धि प्रणिपातेन परिप्रश्नेन सेवया । उपदेक्ष्यन्ति ते ज्ञानं ज्ञानिनस्तत्त्वदर्शिनः ॥ * என்கிற ச்லோகத்தில் ஞானிகளின் உபதேசப் பெருமை நன்கு கூறப்பட்டிருக்கிறது. ‘தத்வமாகிய நான் சொல்லுவதைக் காட்டிலும், தத்வமாகிய என்னை ஸாக்ஷாத்கரித்து தத்வதர்சிகளென்று பேர் பெற்ற ஞானிகள் உபதேசிப்பது மிகச்சிறந்திருக்கும், அவர்களை மடிபணிந்தும் பலகால் அநுவர்த்தித்துக் கேட்டும் தெரிந்துகொள்’ என்று அந்த ச்லோகத்தில் சொல்லப்படுகிறது. அப்படியுபதேசித்துத் திருத்திப் பணிகொள்ள வல்ல ஞானிகளை ஸமய விசேஷங்களில் நானே அவதரிக்கச் செய்கிறேன் என்கிறானிங்கு. தன்னுடைய அவதாரத்தைப் பற்றிச் சொல்ல ப்ராப்தமான இந்த ப்ரகரணத்தில் ஞானிகளின் அவதாரத்தைப்பற்றிச் சொல்வதற்கு என்ன ப்ரஸக்தி யென்று நினைக்கவேண்டா; * பீதகவாடைப் பிரானார் பரமகுருவாகிவந்து * என்கிற பெரியாழ்வார் திருமொழிப்படியும் * साक्षान्नारायणो देवः कृत्वा मर्त्यमयीं तनुम् । मग्नानुद्धरते लोकान् कारुण्याच्छास्त्रपाणिना * என்கிற ப்ரமாணப்படியும் ஞானிகளின் அவதாரமும் பகவதவதார விசேஷமேயாகையாலே. * சேமம் குருகையோ செய்ய திருப்பாற்கடலோ, நாமம் பராங்குசமோ நாரணமோ?— தாமம் துளவோ வகுளமோ தோளிரண்டோ நான்கு முளவோ பெருமானுக்கு * என்று நம்மாழ்வாரை நோக்கி ஒரு பரமபக்தர் பணித்த பாசுரமும் இங்கு அநுஸந்திக்கப் பொருந்தும். ப்ராஸங்கிகமான விது நிற்க.

41. இனி அவதார ப்ரயோஜநம் சொல்லுகிற (4–8) * परित्राणाय साधूनां विनाशाय च दुष्कृताम् धर्मसंस्थापनार्थाय संभवामि युगेयुगे * என்கிற ச்லோகத்தைப்பற்றி யாராய்வோம். * துயரில் மலியும் மனிசர் பிறவியில் தோன்றிக் கண்காண வந்து * என்றும் * காட்டில் பிறந்து படாதன பட்டு மனிசர்க்காய் * என்றும் சொல்லுகிறபடியே கர்மவச்யர்களான ஸம்ஸாரிகளும் படாத கஷ்டங்களைப் பட்டு இந்நிலவுலகில் எம்பெருமான் வந்து அவதரிக்க வேணுமோ? ஸத்யஸங்கல்பனான தான் தன்னுடைய ஸங்கல்பசக்தியைக் கொண்டே எதுவும் செய்யலாமன்றோ? எத்தனை ஸாதுக்களை ரக்ஷிக்க வேணுமானாலும் எத்தனை துஷ்டர்களை சிக்ஷிக்கவேணுமானாலும் தன்னுடைய அவ்யாஹத சக்திகமான ஸங்கல்பத்தினாலே செய்து தலைக்கட்ட என்ன தடை? ஸாதுபரித்ராணத்திற்காகவும் துஷ்க்ருத் விநாசத்திற்காவும் தர்மஸ்தாபனத்திற்காகவும் அவ்வப்போதுகளில் நானே வந்து பிறக்கிறேனென்கிறானே, எதற்காகப் பிறக்கவேணும்? என்று பிரபலமான ஆக்ஷேபம் தோன்றக்கூடியது இங்கு. இதற்கு சங்கர பாஷ்யத்தில் யாதொரு பரிஹாரமும் கிடையாது. மத்வபாஷ்யத்தில் மூலத்திற்கு ஸம்பந்த மின்றிக்கே ஏதோ எழுதப் பட்டுள்ளது; அதாவது, “न जन्मनैव परित्राणादि कार्यमिति नियमः; तथाऽपि लीलया स्वभावेनच यथेष्टचारी ... * लोकवत्तु लीलाकैवल्यम्··· ” என்று எழுதப்பட்டிருக்கின்றது. ‘பகவான் ஸாதுபரித்ராணாதிகளை அவதரித்தே செய்தாகவேணுமென்கிற நிர்ப்பந்தமில்லை; ஆனாலும் விளையாட்டாக அவதரிக்கிறான். ப்ரஹ்ம ஸூத்ரத்திலும் * லோகவத் து லீலா கைவல்யம் * என்று சொல்லப்பட்டிருக்கிறதன்றோ’ என்பது மத்வபாஷ்ய பங்க்தியின் பொருள். ஸாதுபரித்ராணாதிகளுக்காக நான் வந்து பிறக்கிறேனென்று மூலத்

தில் ஸ்பஷ்டமாகச் சொல்லியிருக்க, அதற்குக் கண்டனம் செய்கிற முறையில் இந்த பாஷ்யம் அவதரித்திருக்கின்றது. * லோகவத் து லீலாகைவல்யம் * என்கிற ப்ரஹ்ம ஸூத்ரமானது பகவான் செய்கிற ஜகத்ஸ்ருஷ்டியைப்பற்றினதே யொழிய பகவதவதாரத்தைப்பற்றியதன்றென்பது நிர்விவாதம். அதை இங்கெடுத்தெழுதுவது ஸாதராம் அப்ரஸக்தம். இது கிடக்கட்டும். நம் ஸ்வாமியின் பாஷ்யத்திலுள்ள இன்சுவைப் பொருள்களை யநுபவிப்போம். அந்தரதிகரண ஸ்ரீபாஷ்யத்தில் * अन्तस्तद्धर्मोपदेशात् * (1-1-21,) என்கிற ஸூத்ரத்தின் பாஷ்யத்தில் 'பரித்ராணாய ஸாதூநாம்' என்கிற இந்த ச்லோகத்தை ப்ரஸக்தாநுப்ரஸக்தமாக வுதாஹரித்து "साधवो हि उपासकाः ; तत्परित्राणमेवोद्देश्यम् ; आनुषङ्गिकस्तु दुष्कृतां विनाशः, संकल्पमात्रेणापि तदुपपत्तेः" என்றருளிச் செய்யப்பட்டிருக்கிறது. ஸாதுபரித்ராணத்திற்காகவே முக்கியமாக அவதாரம் செய்தருளிற்றென்றும், துஷ்டநிரஸநமானது ஸங்கல்பத்தாலுங்கூட ஸாத்யமாகக் கூடியதாதலால் அவதாரத்திற்கு அது ப்ரதாநோத்தேச்யமன்று என்றும் மேலெடுத்த ஸ்ரீபாஷ்ய ஸ்ரீஸூக்தியினால் தெரிவிக்கப்படுகிறது. ஸாதுபரித்ராணம் மாத்திரம் ஏன் ஸங்கல்பத்தினாலாகக் கூடாது? 'साधवः परित्राता भवन्तु' என்று ஸங்கல்பித்தால் ஆகமாட்டாதோ? என்று ஆக்ஷேபமுதிக்கக்கூடும். இதற்குப் பரிஹாரம் கீதாபாஷ்யத்தில் நன்கு உள்ளது. அதை விவரிக்கிறோம்.

42. 'ஸாதூநாம் பரித்ராணாய' என்றதில் ஸாதுக்களாவார் இன்னாரென்பதை விவரிக்கிற முகத்தால் அவர்களுடைய பரித்ராணம் ஸங்கல்பஸாத்யமாகாதென்றும் கண்காண வந்து தோன்றியே செய்யத்தக்கதாமென்றும் தெளிவித்தருளுகிறார் ஸ்வாமி.

"साधवः उक्तलक्षणधर्मशीलावैष्णवाग्रेसराः मत्समाश्रयणे प्रवृत्ताः मन्नामकर्मस्वरूपाणां वाङ्मनसागोचरतया मद्दर्शनाद्विनास्वात्मधारणपोषणादिकमलभमानाः क्षणमात्रकालं कल्पसहस्रं मन्वानाः प्रशिथिलसर्वगात्रा भवेयुरिति मत्स्वरूपचेष्टितावलोकनालापादिदानेन तेषां परित्राणाय" என்பன ஸ்ரீ கீதா பாஷ்ய ஸ்ரீ ஸூக்திகள். இப்பங்க்திகளின் காம்பீர்யம் வாசாமகோசரம். ஸ்ரீவைஷ்ணவாக்ரேஸரர்களான நம்மாழ்வார் போன்ற பரமபக்தர்களையே திருவுள்ளத்திற்கொண்டு இப்பங்க்திகள் அருளிச் செய்யப்பட்டிருக்கின்றன. * எங்கே காண்கேன் ஈன்துழாயம்மான் தன்னை யானென்றென்று * என்றும் * காணவாராயென்றென்று கண்ணும் வாயும் துவர்ந்து * என்றும் * கூராராழி வெண்சங்கேந்திக் கொடியேன்பால் வாராயொருநாள் * என்றும் * தாமரைக்கண் வாசத்தடம்போல் வருவானே! ஒருநாள் காணவாராயே * என்றும் கதறுகின்றவர்களாய் * ஒரு பகலாயிர மூழியாலோ * என்றும் * தெய்வங்காளென் செய்கேன் ஓரிரவு ஏழூழியாய் * என்றும் * ஊழியில் பெரிதால் நாழிகையென்னும் * என்றும் ஒரு கொடிப்பொழுதை கல்பஸஹஸ்ரமாக நினைப்பவர்களாய், * காலுமெழா கண்ணநீரும் நில்லா உடல் சோர்ந்து நடுங்கிக் குரல்மேலு மெழா மயிர் கூச்சுமறா * என்றும், * காலாழும் நெஞ்சழியும் கண் சுழலும் * என்றும் * உள்ளெலா முருகிக் குரல்தழுத் தொழிந்து உடம்பெலாம் கண்ணநீர் சோர * என்றும் ஸர்வாவயவ சைதில்யமுடையவர்களாயிருப்பவர்கள் ஆழ்வார்களைத் தவிர்த்து வேறு யாருமிலரே. அவர்களின் ஸ்ரீ ஸூக்திகளையேயன்றோ ஸ்வாமி ஸம்ஸ்க்ருதத்தில் மொழிபெயர்த்திருக்கிறார், அவர்கள்

தன்னைக்காணவேணுமென்றும் தன்னோடு பேசவேணுமென்றும் தன்னைத் தழுவவேணுமென்றும் காதலித்தால் எம்பெருமான் நேராக வந்தாலொழிய அவர்களின் காதல் நிறைவேறுதன்றே. ஸங்கல்பம் இங்கு என்ன பண்ணக்கூடும்? *மழுங்காத வைநுதிய சக்கர நல் வலத்தையாய் தொழுங்காதல் களிறளிப்பான் புள்ளூர்ந்து தோன்றினையே, மழுங்காத ஞானமே படையாக மலருலகில், தொழும் பாயார்க்களித்தால் உன் சுடர்ச்சோதி மறையாதே* (3—1—9) என்ற திருவாய்மொழிப் பாசுரத்தையே ஸ்வாமி ஸூக்தியாகக் கொண்டு பாஷ்யம் செய்தருளியிருக்கிறார். ஆக 'பரித்ராணாய ஸாதூநாம்' என்றவிடத்தில் ஸாது சப்த விவக்ஷிதர்கள் ஆழ்வார்கள் போன்றவர்களென்றும், அவர்கள் எம்பெருமானை நேரில் கண்டாலல்லது தீராத காதலையுடையவர்களாகையாலே அவர்களுக்காக வந்து, தோன்றியேயாகவேணுமென்றும், அவர்களுடைய காதல் ஸங்கல்பத்தினால் ஒருகாலும் தீர்க்கமுடியாதென்றும் காட்டி, சங்காபரிஹாரம் நன்கு செய்தருளினாராயிற்று. இனி ஐந்தாமத்யாயத்தில் செல்வோம்.

43. (5—18) *विद्याविनयसंपन्ने ब्राह्मणे गवि हस्तिनि । शुनि चैव श्वपाके च पण्डिताः समदर्शिनः ॥* இதில் 'வித்யாவிநயஸம்பந்நே' என்பதை விசேஷணமாகக் கொண்டு 'ப்ராஹ்மணே' என்கிற விசேஷ்யத்தில் இதை அந்வயித்து, வித்யா விநயங்களோடு கூடியிருக்கிற உத்தம ப்ராஹ்மணனிடத்தில் என்பதாகப் பொருள் விவரித்தார் சங்கராசாரியர். ஒரு விதமான அர்த்தமும் செய்திலர் மத்வாசாரியர். நம் ஸ்வாமியோ வென்னில், 'வித்யாவிநயஸம்பந்நே' என்பதைத் தனி விசேஷ்யமாகவும் 'ப்ராஹ்மணே' என்பதைத் தனி விசேஷ்யமாகவுங்கொண்டு பாஷ்யமிட்டருளினார். வித்யாவிநய ஸம்பந்நனான உத்தம ப்ராஹ்மணனொருவன்; அவனிடத்திலும். அவையொன்றுமில்லாத கேவல ப்ராஹ்மணனொருவன்; அவனிடத்திலும்— என்று இரண்டு வார்த்தையாக ஸ்வாமி திருவுள்ளம்பற்றினபடி. இதுதான் மிகவும் உசிதமானதென்று தாத்பர்ய சந்த்ரிகையில் நன்கு காட்டப்பட்டிருக்கிறது. எங்ஙனேயென்னில், கவி, ஹஸ்திநி, சுநி, ச்வபாகே என்று மேலுள்ளவற்றில் ஒரு விசேஷணமுமிடப்படவில்லை. அப்படியிருக்க ப்ராஹ்மணே விசேஷணாகாங்க்ஷையில்லை. அன்றியும், வித்யாவிநயஸம்பந்ந ப்ராஹ்மணனைச் சொல்லி இவனுக்கு எதிரிடையானவரை நிர்தேசியாமலிருப்பது குறையுமாகும். ஆகவே வித்யா விநய ஸம்பந்நனிடத்திலும் கேவல ப்ராஹ்மணனிடத்திலும் என்றுதான் பொருள் கொள்ளப் பொருந்தும் என்று. இந்த ச்லோகத்தில் "பண்டிதாஸ் ஸமதர்சிந:" என்றிருப்பது கொண்டு, 'ஜாதிபேதம் முதலானவற்றை விட்டு ஏற்றத்தாழ்வு காண்பவர்கள் பண்டிதர்களல்லர், பாமரர்களே' என்கிற அபார்த்தம் நவீந ஸம்ஸ்காரகர்களின் வாக்கில் உலாவி வருகிறது. அது சிறிதும் பொருந்தாது. "पण्डिताः आत्मयाथात्म्यविदः ; ज्ञानैकाकारतया सर्वत्र समदर्शिनः । विषमाकारस्तु प्रकृतेः नात्मनः । आत्मा तु सर्वत्रज्ञानैकाकारतया सम इति पश्यन्तीत्यर्थः" என்பது பாஷ்யஸூக்தி. பசுவினுலாகிற காரியம் யானையினாலாகாது, யானையினாலாகிற காரியம் பசுவினாலாகாது. பால்வேண்டும் போது பசுவைத் தேடுவதும் மஹோத்ஸவங்களுக்கு யானையைத் தேடுவதும் யாவரிடத்தும் கண்டவியல்பு. गवि हस्तिनि समदर्शनम् லோகவ்யவஹார ரீதியில் எங்ஙனே பண்ணமுடியும்? 'ஸர்வத்ர ஸமதர்சிந:' என்றதற்கு நவீனர்கள் சொல்லுகிற பொருள் பொருந்தவேணு

மாகில், யானைக்குச் செய்கிற அலங்காரங்களை நாய்க்குச் செய்யவேண்டும்; நாய்க்குச் செய்யுமவற்றைக் குதிரைக்குச் செய்யவேண்டும். இப்படிப்பட்ட ஆபத்திகளைப் பரிஹரிக்கைக்காக 'ஸர்வத்ர ஸமதர்சிந:' என்பதற்குப் பொருத்தமான பொருள் காணவேண்டும். அதுதான் பாஷ்யத்தில் காண்பது. அன்றியும், இதற்கு மேல் மூன்றாவது ச்லோகத்தில் (5-20) *न प्रहृष्येत्प्रियं प्राप्य नोद्विजेत् प्राप्य चाप्रियम्* என்று சொல்லப்பட்டிருக்கின்றது. ப்ரியமானது கிடைத்தால் ஸந்தோஷிக்கக் கூடாது; அப்ரியமானது கிடைத்தால் வெறுப்புக்கொள்ளலாகாது என்று இதற்குப் பொருள். இப்படியிருக்கவல்லவனுக்குத்தான் ஸர்வத்ர ஸமதர்சந ரூபமான ஜ்ஞாந விபாக முண்டாகுமென்று பாஷ்யகாரர் அருளிச் செய்கிறார். அப்படிப்பட்ட ஓர் அதிகாரி தேறுவனாகில் அவனுடைய ஸர்வத்ரஸமதர்சித்வம் எப்படிப்பட்டதென்று நேராகக் கண்டு கொள்ளலாம்.

41. (6-5.) *उद्धरेदात्मनात्मानं नात्मानमवसादयेत् । आत्मैव ह्यात्मनो बन्धुरात्मैव रिपुरात्मनः = உத்தரேதாத்மநாத்மாநம் நாத்மாநமவஸாதயேத். ஆத்மைவ ஹ்யாத்மநோ பந்து: ஆத்மைவ ரிபுராத்மந:* என்கிற இந்த ச்லோகம் ஒவ்வொருவருடைய நெஞ்சிலும் அநவரதமும் ஊன்றியிருக்கத்தக்கது. தன்னைக்கொண்டே தான் கடைத்தேறவேணுமென்றும், தன்னைத்தானே கெடுத்துக் கொள்ளலாகாதென்றும், தனக்குத் தானே உறவு, தனக்குத்தானே பகைவன் என்றும் இந்த ச்லோகத்தில் சொல்லப்படுகிறது. ஒருவன் கடைத்தேறுவதற்குப் பல பல ஸாதனங்கள் வேண்டியிருக்கின்றன. ஸத்ஸஹவாஸம் வேணும், ஆசார்யோபஸேவை வேணும், பிராட்டியை முன்னிட்டு எம்பெருமான் திருவடிகளைத் தஞ்சமாகப் பற்றுதல்வேணும் ....என்றிப்படியாக உஜ்ஜீவனத்திற்கு வேண்டியவை பல இருந்தாலும் இவற்றுள் மிக முக்கியமான ஸாதனம் மனம் ஒன்றேயாம். அதை விஷயாந்தரங்களில் யதேஷ்டமாகச் செல்லவிட்டு வைத்தால் அது தன்னைத்தானே மாய்த்துக் கொண்டபடியாகும். மனத்தை விஷயக்ராமங்களில் புகவிடாமல் ஆத்மோஜ்ஜீவனத்திற்கு அபிமுகமாக்குமளவில் அந்த மனத்தைக்கொண்டு தான் வாழ்ந்தவனாவன். ஆகவே, மனமானது உறவாயுமிருக்கும், பகையாயுமிருக்கும். உறவாகக்கொண்டு வாழ்வதே விவேகிகளின் பணி; பகையாகக்கொண்டு பாழாய்ப் போக வேண்டாமென்று கீதாசார்யன் வெகு பொருத்தமாக உபதேசித்தருளுகின்றான். ஆனதுபற்றியே ஆழ்வார்கள் அடிக்கடி நெஞ்சைக்கொண்டாடுகிறார்கள்; *நெஞ்சமே! நல்லை நல்லை உன்னைப் பெற்றால் என் செய்யோம், இனி யென்ன குறைவினம்?* என்றும், *ஊனில்வாழுயிரே! நல்லை போவுன்னைப் பெற்று* என்றும், *முயற்றி சுமந்தெழுந்து முந்துற்ற நெஞ்சே! இயற்றுவாயெம்மொடு நீ கூடி* என்றும் நம்மாழ்வாரருளிச் செய்கிறார். ஆனால் நெஞ்சை அநுகூலமாக்கிக் கொள்வதென்பது மிகவும் அரிதான செயல். *நின்றவாநில்லா நெஞ்சினையுடையேன் என்செய்கேன்* என்கிறார் திருமங்கையாழ்வார். அதிருக்க, ஜிதேந்த்ரியரில் தலைவனான அர்ஜுநனே மனத்தை வசப்படுத்த வேணுமென்று அடிக்கடி கூறுகின்ற கண்ணபிரானை நோக்கிச் சொல்லுகிறான்- (6-34.) *चञ्चलं हि मनः कृष्ण ! प्रमाथि बलवद्दृढम् । तस्याहं निग्रहं मन्ये वायोरिव सुदुष्करम्— சஞ்சலம் ஹி மந: க்ருஷ்ண! ப்ரமாதி பலவத் த்ருடம், தஸ்யாஹம் நிக்ரஹம் மந்யே வாயோரிவ ஸுதுஷ்கரம்* என்கிறான். கண்ணா! காற்றைப் பிடித்துக் கரகத்தி

னுள்ளே அடைக்கவேணுமென்னுமாபோலே மனத்தைப் பிடித்து நிலை நிறுத்த வேணுமென்கிறாய் நீ; மனமோ இயற்கையாகவே சஞ்சலமானது. ஒரு நொடிப் பொழுதுகூட ஒரு விஷயத்தில் ஏகாக்ரமாக ஒருவராலும் நிலைநிறுத்த முடியாது; விஷயாந்தரங்களிலுங்கூட ஒன்றில் ஒன்றிலிருக்க மாட்டாத நெஞ்சை ஒருவிஷயத்தில் ஒன்றவைப்பதென்பது மிகவுமரிது என்று நான் நினைக்கிறேன்; மநோநிக்ரஹத்திற்குரிய உபாயத்தை உரைக்கவேணும் என்றான் அர்ஜுனன். இதற்குக் கண்ணபிரான் கூறிய மறுமொழி என்னவென்று பார்க்கலாமோ, (6–35) * असंशयं महाबाहो! मनो दुर्निग्रहं चलम् । अभ्यासेन तु कौन्तेय! वैराग्येण च गृह्यते ॥ — அஸம்சயம் மஹாபாஹோ! மநோ துர்நிக்ரஹம் சலம், அப்யாஸேந து கௌந்தேய! வைராக்யேண ச க்ருஹ்யதே.* என்பதுதான் கண்ணனுடைய மறுமாற்றம். மனத்திற்கு சஞ்சலத்வம் இயற்கைக் குணமாதலால் அதைப் போக்கி அதனை ஒன்றில் ஒன்றவைப்பதென்பது முடியாத காரியந்தான்; இதில் ஸந்தேஹமேயில்லை; ஆனாலும் விஷயதோஷங்களைக் காணக் காண வைராக்யமுண்டாகக் கூடுமாதலால் மனத்தை யடக்கப் பழக்கம் செய்து நாளடைவில் வசீகரிக்கவேணும்—என்பது கண்ணனுடைய பதில். இவ்விடத்தில் "அஸம்சயம்" என்பதற்கு சங்கரபாஷ்யம்—"नास्ति संशयो हि महाबाहो! मनो दुर्निग्रहं चलमित्यत्र।" என்றுள்ளது; அப்படியன்றிக்கே தாத்பர்ய சந்திரிகையில் "असंशयमित्येतत् सत्यमितिवत् अर्धाङ्गीकारपरम्" என்றுள்ளது ரஸிக்கத்தக்கது.

15. இனி ஏழாவது அத்யாயத்திற் செல்வோம். இவ்வத்யாயத்தை யிட்டு கீதைக்கு ஒரு ஆக்யாயிகை விளங்கியிருப்பதுண்டு; ஊரில் ஒரு பண்டிதர் கீதா ப்ரவசனம் செய்து கொண்டிருந்தாராம். பலர் கேட்டுக்கொண்டிருந்தார்கள். ஒருவர் மாத்திரம் அந்த கோஷ்டியில் அந்வயிப்பதில்லை. ஆப்தர்கள் அவரை வெகு நிர்ப்பந்தித்து ஒருநாள் கீதாகாலக்ஷேபகோஷ்டியில் அந்வயிப்பித்தார்கள். அவர் வந்து சேர்ந்த தினத்தில் ஏழாமத்யாயத்தில் பதினைந்தாம் ச்லோகம் ஆரம்பிக்கப்பட்டதாம். அதாவது— * न मां दुष्कृतिनो मूढाः प्रपद्यन्ते नराधमाः । माययापहृतज्ञाना आसुरं भावमाश्रिताः — ந மாம் துஷ்க்ருதிநோ மூடா: ப்ரபத்யந்தே நராதமா:, மாயயாபஹ்ருதஜ்ஞாநா: ஆஸுரம் பாவமாச்ரிதா:* என்பது. இந்த ச்லோகம் முழுவதும் நிந்தையே நிறைந்திருப்பதால் பாஷ்யாதிகளையும் அநுஸரித்து அந்த நிந்தைகளை வெகு விரிவாக உபந்யஸித்தார் ப்ரவசனகாரர். அன்றே புதிதாகக் கேட்க வந்தவர் இந்த கீதையில் இப்படிப்பட்ட நிந்தைகள்தாம் நிறைந்திருப்பன போலும் என்றெண்ணி மிகவும் வெறுப்படைந்தாராம். மறுநாளும் 'இன்றைக்கு விஷயம் எப்படி யிருக்கிறது பார்ப்போம்' என்று பரீக்ஷார்த்தமாகக் காலக்ஷேப கோஷ்டிக்கு வந்தாராம்; அன்று அதற்கடுத்த ச்லோகம்—(7-16.) * चतुर्विधा भजन्ते मां जनाः सुकृतिनोऽर्जुन । आर्तो जिज्ञासुरर्थार्थी ज्ञानी च भरतर्षभ ॥ சதுர்விதா பஜந்தே மாம் ஜநா: ஸுக்ருதிநோர்ஜுந. ஆர்த்தோ ஜிஜ்ஞாஸுரர்த்தார்த்தீ ஜ்ஞாநீ ச பரதர்ஷப. * என்பது விரிவாக உபந்யஸிக்கப்பட்டதாம். முன் ச்லோகத்தில் நிந்தை நிறைந்தது; இந்த ச்லோகத்தில் ஸ்துதி நிறைந்தது. இரண்டும் பிசகுதானே. அதனால் அந்த ச்ரோதா 'கீதையில் நிந்தையும் ஸ்துதியும் தவிர வேறு கிடையாது' என்று முடிவு செய்யலாகாது மூன்றாநாள் தொடங்கிக் காலக்ஷேபத்திற்கு வருவதை நிறுத்திக் கொண்ட

ஏன் வருவதில்லை யென்று கேட்பவர்களுக்கு "கீதையில் என்ன இருக்கிறது; பரீக்ஷை பத்தத்யாயம்; ஆத்மஸ்துதி ஆறத்யாயம்; இன்னும் மேதாவது விஷயங்கள் இரண்டத்யாய மிருக்கும்." என்றாராம். இது இவருடைய மருள் இருந்தபடி. திருவாய்மொழியில் (3-5) * மொய்ம்மாம்பூம்பொழிற் பொய்கைப் பதிகமும் இந்த ஏழாமத்யாயமும் ஒரு சேராக சேர்க்கப்படலாம். அப்பதிகத்தின் ஸாரத்தை நூற்றந்தாதியிலருளிச் செய்த மணவாள மாமுனிகள் "அன்பாளர் செய்பவரை யாதரித்தும், அன்பிலா மூடரை நிந்தித்தும் மொழிந்தருளும் மாறன்பால்" என்கிறார். நிந்திக்க வேண்டியவர்களை நிந்திப்பதும ஸ்துதிக்க வேண்டியவர்களை ஸ்துதிப்பதும் ப்ராப்தந்தானே. அது நிற்க. "சதுர்விதா பஜந்தே மாம்" என்கிற ச்லோகத்தில் ஆர்த்த:, ஜிஜ்ஞாஸு:, அர்த்தார்த்தீ, ஜ்ஞாநீ என்று நால்வகை யதிகாரிகள் கூறப்படுகிறார்கள். இவர்களை விவரிக்கின்ற சங்கராசார்யர் தமது பாஷ்யத்தில் "आर्तः– तस्करव्याघ्ररोगादिना अभिभूतः आपन्नः; जिज्ञासुः— भगवत्तत्त्वं ज्ञातुमिच्छति यः; अर्थार्थी– धनकामः; ज्ञानी— विष्णोस्तत्त्ववित्" என்று எழுதியுள்ளார். மத்வபாஷ்யகாரரான ஆனந்த தீர்த்தர் ஒரு விவரணமு மெழுதவில்லை. சங்கராசார்யர்–திருடர் புலி பிணி முதலியவற்றால் துன்பமடைந்தவனை ஆர்த்தனென்றும், பகவானை யறிய விரும்புகிறவனை ஜிஜ்ஞாஸுவென்றும், தனம் பெற விரும்புமவனை அர்த்தார்த்தி யென்றும், விஷ்ணுதத்வமறிந்தவனை ஜ்ஞானி யென்றும் விவரித்திருக்கின்றார். நமது பாஷ்யகாரரான ஸ்வாமி யெம்பெருமானார்–ப்ரஷ்டைச்வர்ய காமனை ஆர்த்த னென்றும், அபூர்வைச்வர்யகாமனை அர்த்தார்த்தி யென்றும், கைவல்ய காமனை ஜிஜ்ஞாஸு வென்றும், ஸ்வஸ்வரூபமுணர்ந்தவனை ஜ்ஞானியென்றும் விவரித்தருளுகிறார். இவற்றுள் எந்த விவரணத்தில் பொருத்தமுள்ளதென்பதைப்பற்றி நாம் இங்கு விமர்சிக்க விரும்பவில்லை. இங்ஙனே விலக்ஷணமான விவரணத்தை நம் ஸ்வாமி செய்தருளியதற்கு மூலமென்னவோ? என்று விமர்சிக்க ப்ராப்தம். இதை விமர்சிக்குமளவில், ஆழ்வார்களின் ஸ்ரீஸூக்தியை அடியொற்றிப் பேசவேணு மென்று ஸ்வாமி கொண்டிருந்த உறுதிதான் இதற்கு மூலமென்று நன்கு புலப்படும். திருப்பல்லாண்டில், * வாழாட்பட்டு நின்றீருள்ளீரேல் * என்கிறபாசுரத்தினால் ஜ்ஞானிகளை யழைத்தும், * ஏடுநிலத்திலிடுவதன் முன்னமென்கிற பாசுரத்தினால் கைவல்யார்த்திகளை யழைத்தும், * அண்டக்குலத்துக் கதிபதியாகி யென்கிற பாசுரத்தினால் அபூர்வைச்வர்ய காமர்களையும் ப்ரஷ்டைச்வர்ய காமர்களையு மழைத்தும் உபதேசம் தந்தருளியிருப்பது ஸுஸ்பஷ்டம். இதுவன்றியும் திருவாய்மொழியில் * ஒருநாயகமாய் * என்கிற பதிகத்தில் இந்நால்வகை யதிகாரிகளும் தெரிவிக்கப்பட்டிருப்பதும் ப்ரஸித்தம். கீதையிலுள்ள * சதுர்விதா பஜந்தே மாம் * என்னுமிந்த ச்லோகத்தை யடியொற்றியே அந்தப் பாசுரங்கள் திருவவதரித்தனவாக ஸம்ப்ரதாய மாகையாலே * மாறனுரை செய்ததமிழ் மறை வளர்த்தவரான ஸ்வாமி யெம்பெருமானார் திவ்யப்ரபந்தச் சாயையிலேயே அருளிச்செய்தாரென்பது இங்குக் குறிக்கொள்ள வேண்டிய ரமார்த்தம்.

[illegible]று மொரு விசேஷமிங்கு நெஞ்சிற் பதிய வைத்துக் கொள்ளத்தக்கதுண்டு. "ஸ்ரீபூஷணத்தில் (73) "அஹமர்த்தத்துக்கு ஜ்ஞாநாநந்தங்கள் தடஸ்தமென்றிஸ்யாமிறே அந்தரங்க நிரூபகம்" என்ற சூர்ணையின் வியாக்கியானத்தில்–

"திருக்கோட்டியூர் நம்பி ஸ்ரீபாதத்திலே ஆழ்வான் ஆறுமாஸம் ஸேவித்து நின்று மஹாநிதியாகப் பெற்ற அர்த்த விசேஷம்" என்று மணவாள மாமுனிகள் அருளிச் செய்கிறார். எம்பெருமானார் கோஷ்டியில் ஒருநாள் 'ஜீவாத்மாவுக்கு அந்தரங்க நிரூபகம் ஜ்ஞாத்ருத்வமா? சேஷத்வமா?' என்று விசாரமுண்டாக, எம்பெருமானார் கூரத்தாழ்வானைத் திருக்கோட்டியூர் நம்பி பக்கலில் விடை கொண்டு இதையறிந்து வருமாறு நியமித்தருள, ஆழ்வான் அப்படியே விடை கொண்டு ஆறுமாஸம் ஸேவித்திருந்து சேஷத்வமே அந்தரங்க நிரூபகமென்று தெளிந்து மீண்டதாக ஐதிஹ்யமுள்ளது. அப்படி மஹாநிதியாகப் பெற்ற அந்த மஹார்த்தத்தை ஸ்வாமி எம்பெருமானார் எவ்விடத்திலாவது பதிய வைத்திருப்பதுண்டோ வென்று சிலர் கேட்பதுண்டு. அவர்களுக்குச் சொல்லுவோம்; "சதுர்விதா பஜந்தே மாம்" என்கிற இந்த கீதா ச்லோகத்தின் பாஷ்யத்தில் ஜ்ஞாநீ என்பதற்கு அர்த்தம் செய்தருளுமிடத்து "ज्ञानी च—"इतस्त्वन्यां प्रकृतिं विद्धि मे पराम्" इत्यादिनाऽभिहितभगवच्छेषतैकरसात्मस्वरूपवित्" என்றருளியுள்ளார். விஷ்ணுதத்த்வத்தை யறிந்தவனே ஜ்ஞாநி யென்றார் சங்கராசாரியர்; ஜீவாத்மஸ்வரூபத்தை யறிந்தவனே ஜ்ஞாநியென்கிறார் நம் ஸ்வாமி. அந்த ஜீவாத்மாவுக்கு விசேஷணமிடுகிறார் [பகவச்சேஷதைகரஸ] என்று. ப்ரஹ்மஸூத்ரகாரர் "ज्ञोऽत एव" என்கிற ஸூத்ரத்தினால் ஆத்மாவுக்கு ஜ்ஞாத்ருத்வத்தை ஸ்தாபித்திருக்கிறார். ஜ்ஞாதா என்பதற்கு 'அறிபவன்' என்று பொருள். எதை அறிபவன்? என்று கேள்வி வரின், தான் பகவச்சேஷபூதன் என்பதை யறிபவன் என்று பொருள் சொல்லவேண்டு மென்பது ஸ்வாமி திருவுள்ளம் போலும். "भगवच्छेषतैकरसात्मस्वरूप" என்னும் சொற்றொடர் இதரர்களின் க்ரந்தங்களொன்றிலும் லேசமும் தேடினாலும் கிடைக்கமாட்டாது. இப்படி விலக்ஷணமான ஸ்ரீஸூக்தியை அலங்கரித்தருளிச் செய்திருக்கின்ற நம் ஸ்வாமி, திருக்கோட்டியூர் நம்பி பக்கலில் நின்றும் ஆழ்வான் கொணர்ந்த நிதியைப் பெற்றவரென்பதில் ஸந்தேஹமுண்டோ?

இதற்கடுத்த (7—17.) "தேஷாம் ஜ்ஞாநீ நித்யயுக்த:" என்னும் ச்லோகத்தின் உத்தரார்த்தம் "ப்ரியோ ஹி ஜ்ஞாநிநோऽத்யர்த்தமஹம் ஸ ச மம ப்ரிய:" என்றுள்ளது. இங்கு நம் ஸ்வாமி "ஜ்ஞாநிந: அஹம் அத்யர்த்தம் ப்ரிய:" என்று க்ரமாந்வயத்தையே திருவுள்ளம்பற்றி பாஷ்யமிட்டருளினார். இவ்வந்வயக்ரமத்தில்—ஜ்ஞாநிக்குத் தன்னிடத்தில் ப்ரீதி அதிகம் என்றதாக விளங்குகிறது. உண்மையில், பகவானிடத்தில் ஜ்ஞாநி வைத்திருக்கிற ப்ரீதி அதிகமா? ஜ்ஞாநியினிடத்தில் பகவான் வைத்திருக்கிற ப்ரீதி அதிகமா? என்று ஆராய்ந்து பார்க்குமளவில் ஜ்ஞாநியினிடத்தில் பகவான் வைத்திருக்கிற ப்ரீதிதான் அதிகமென்னத் தகும். ஆகவே இந்த ச்லோகத்தின் [अत्यर्थम्] என்பதை 'அஹம் ப்ரிய:' என்பதிலே கூட்டுவதைவிட 'மம ப்ரிய:' என்பதிலே கூட்டுவதுதான் ரஸவத்தரமென்று திருவுள்ளம் பற்றின ஸ்வாமி ஸ்ரீபாஷ்யத்தில் சரமஸூத்ரமான "அநாவ்ருத்தி ஸூத்ரத்தின் பாஷ்யத்தில் "अत्यर्थप्रियं ज्ञानिनं लब्ध्वा" என்கிற அநர்க்கமான வாக்யத்தினால் அந்த அந்வய க்ரமத்தைக் காட்டியருளினார். அந்த ஸ்ரீபாஷ்ய ஸூக்தியின்படி ப்ரக்ருத கீதாச்லோகத்தை எப்படி கொள்ளவேணுமென்னில்; "ஜ்ஞாநிந: அஹம் ப்ரிய:; ஸ ச மம அத்யர்த்தம் ப்ரிய:" என்றிங்ஙனே கொள்ளவேணும்.

46. இனி எட்டாமத்யாயத்தில் ஒரு மஹாநிதி காட்டுவோம். ஸம்ஸாரிகளின் விஷயோபபோக ப்ரவ்ருத்தியானது நிஷித்த விஷயபோகமென்றும் விஹித விஷய போகமென்றும் இரண்டாகப் பிரிக்கப்படுகிறது. சாஸ்த்ரங்களில் கர்ஹிக்கப்பட்ட பரதார போகமானது நிஷித்தவிஷய போகமாகவும், சாஸ்த்ர ஸம்மதமான ஸ்வதார போகமானது விஹித விஷய போகமாகவும் கூறப்படுகிறது. விஹித விஷயபோகமானது க்ருஹஸ்தாச்ரம தர்மமாகையாலே ப்ராப்தமென்று கொள்ளப்படுகிறது. ஆனால், அநந்யார்ஹ சேஷத்வ அநந்ய சரணத்வங்களோடு கூட அநந்ய போக்யத்வமென்கிற விலக்ஷணமான தன்மையையும் பெற்றிருக்கின்ற விசேஷாதிகாரிக்கு இந்த விஹித விஷயபோகம் அருவருக்கத்தக்கதாய் த்யாஜ்யமேயாகுமென்பது ஸத்ஸம்ப்ரதாய நிஷ்டர்களின் ஸித்தாந்தம். சாஸ்த்ரங்களில் ஸ்வதார போகம் நியமமாக விதிக்கப்பட்டு, அது தவிர்ந்தால் தோஷமும் ப்ரதிபாதிக்கப்பட்டிருக்கையாலே விஹித விஷய நிவ்ருத்தி அசாஸ்த்ரீயமென்று பிறருடைய கொள்கை காண்கிறது. ஸ்ரீ வசந பூஷணத்தில் இரண்டு மூன்றிடங்களில் உத்தமாதிகாரிக்கு விஹிதவிஷய நிவ்ருத்தியைத் தன்னேற்றமாக வருளிச் செய்கிறார் பிள்ளை லோகாசார்யர். அவ்விஷயம் கீதையில் (8-3) ச்லோகத்தின் பாஷ்யத்தில் ஸ்பஷ்டமாக அருளிச் செய்யப்படுகிறது. அதனை விவரிப்போமிங்கு ;—

கீழ் ஏழாவது அத்யாயத்தின் முடிவில் கண்ணபிரான் * ஜராமரண மோக்ஷாய * என்கிற இருபத்தொன்பதாம் ச்லோகத்தில் * ते ब्रह्म तद्विदुः कृत्स्नमध्यात्मं कर्म चाखिलं * என்று ஒருவார்த்தை சொன்னான். அதுகேட்ட அர்ஜுநன் அந்த வார்த்தைக்கு உண்மையான பொருளைத் தெரிந்து கொள்ள வேண்டிக் கண்ணனையே கேள்வி கேட்கிறான் எட்டாம் அத்யாயத்தின் 1, 2-ச்லோகங்களினால். * किं तद्ब्रह्म किमध्यात्मं किं कर्म पुरुषोत्तम–, கிம் தத் ப்ரஹ்ம கிமத்யாத்மம் கிம் கர்ம புருஷோத்தம * என்று தொடங்கிக் கேள்விகள் உள்ளன. மூன்றாவது ச்லோகம் தொடங்கிக் கண்ணபிரானுடைய விடை வெளிவருகின்றது. கிம் கர்ம என்ற கேள்விக்குக் கண்ணனுடைய விடை * भूतभावोद्भवकरो विसर्गः कर्मसंज्ञितः— பூதபாவோத்பவகரோ விஸர்க்க: கர்மஸம்ஜ்ஞித: * என்பது. இங்கு விஷயமென்னவென்றால், கேண்மின்.

சிலவற்றை அறியவேண்டும் என்று பகவான் நியமித்துவருகையில் கருமத்தை அறியவேண்டும் என்று சொல்லியிருக்கதனால் கருமமென்றால் எது? என்று அர்ஜுநன் கேட்க நேர்ந்தது. அதற்கு பகவான் விடை கூறியுள்ளார். ஒருவன் ஒன்றை யறிவதானது, பற்றுவதற்காகவும் ஆகலாம், விடுவதற்காகவும் ஆகலாம். நல்லதாயிருந்தால் பற்றுவது, கெட்டதாயிருந்தால் விடுவது. ஆகவே நல்லதையும் தெரிந்து கொள்ள வேண்டும் கெட்டதையும் தெரிந்துகொள்ள வேண்டும். இங்கே தெரிந்து கொள்ளவேண்டியதாகக் கூறப்பட்ட கருமம் நல்லதன்று, கெட்டது— என்பதாக வானுடைய விடையினால் தெரிகின்றது. * பூதபாவோத்பவகரோ விஸர்க்க: கர்ம ஸம்ஜ்ஞித: * என்பதற்கு நம்முடைய ஸ்ரீ பாஷ்யகாரர் அருளிச் செய்திருக்கிற அர்த்தம் வருமாறு :—

"भूतभावः— मनुष्यादिभावः ; तदुद्भवकरो यो विसर्गः * पञ्चम्यामाहुतावापः पुरुषवचसो तिसिद्धो योषित्संबन्धजः ; स कर्मसंज्ञितः । तच्चाखिलं सानुबन्धम् उद्वेजनीयतया परिहरणीयतया

च मुमुक्षुभिः ज्ञातव्यम् । परिहरणीयता च अनन्तरमेव वक्ष्यते * यदिच्छन्तो ब्रह्मचर्यं चरन्तीति ॥" என்பது கீதா பாஷ்ய ஸ்ரீஸூக்தி. இதன் கருத்தாவது—ஸ்த்ரீ புருஷஸம்யோக மென்பதுதான் இங்கே கருமமென்கிறது. இது மிகவும் அருவருக்கத் தக்கதாகையால் விடத் தக்கதாக இதனை யறியவேண்டும். இதை விடவேண்டுமென்பது மேலே பதினோராவது ச்லோகத்திலும் காட்டப்படுகிறது என்பதாம். இதனால் நாம் தெரிந்து கொள்வது, க்ருஹஸ்தாச்ரம தருமமாக விஹித விஷயபோகம் ப்ராப்தமே யானாலும் அது விசிஷ்டாதிகாரிக்கு ஜுகுப்ஸையமேயென்று. ஆகவே இவ்விஷயத்தில் ஸ்ரீவசநபூஷண ஸித்தாந்தம் நிரவத்யமென்றுணர்க. இவ்விடத்தில் சங்கர பாஷ்யத்திலோ மத்வபாஷ்யத்திலோ இவ்வர்த்தம் காண ப்ரஸக்தியேயில்லை.

47. இனி ஒன்பதாமத்யாயத்தில் ஸாராம்சத்தைச் சிறிது அநுபவிப்போம் — * पत्रं पुष्पं फलं तोयं यो मे भक्त्या प्रयच्छति । तदहं भक्त्युपहृतमश्नामि प्रयतात्मनः — பத்ரம் புஷ்பம் பலம் தோயம் யோ மே பக்த்யா ப்ரயச்சதி, ததஹம் பக்த்யுபஹ்ருதமச்நாமி ப்ரயதாத்மந: * (9–26.) என்கிற ச்லோகத்தினால் கண்ணபிரான் தான் ஆராதனைக் கெளியன் என்னுமிடத்தை வெகு அழகாக அருளிச் செய்கிறான். இதர தெய்வங்களிற் காட்டில் எம்பெருமான் எத்தனையோ விதங்களால் கெடுவாசி பெற்றிருப்பது போல இவ்வகையாலும் கெடுவாசி பெற்றிருக்கிறான். 'ஆடு பலி கொடு, கோழி பலி கொடு' என்று அருந்தேவைகளையிட்டு மஹாபரிச்ரம ஸாத்யங்களான ஆராதனைகளை அபேக்ஷிக்கிருக்கும் தேவதாந்தரங்கள். எம்பெருமான்படியோ அப்படியன்று. நாம் இட்டது கொண்டு த்ருப்தியடைவதே அவனது ஸ்வரூபம். எம்பெருமானுக்கு நாம் சில பொருள்களை ஸமர்ப்பிப்பதானது அவனுக்கு ஏற்கெனவே யில்லாததொரு பூர்த்தியை யுண்டாக்குவதற்காகவா? நாம் ஸத்தை பெறுவதற்காகவா? என்று ஆராயவேண்டும். அவனோ அவாப்த ஸமஸ்தகாமன்; அன்னவன் குறையற்றிருக்க நாமிட்டது கொண்டு பூர்த்தியடைகிறானென்பது அஸம்பாவிதம். கடலிலே மேகம் வர்ஷிப்பது கடல் நிரம்புவதற்காக வன்றே. * वर्षबिन्दोरिवाब्धौ संबन्धात् स्वात्मलाभः — வர்ஷபிந்தோரிவாப்தௌ ஸம்பந்தாத் ஸ்வாத்மலாப: * என்று (ஸ்ரீரங்கராஜஸ்தவே) பட்டர் அருளிச் செய்தபடியே மேகம் தான் ஸத்தை பெறுவதற்காகவே கடலிலும் வர்ஷிக்கின்றதென்பது பரமார்த்தம். அது போலவே ஸ்வத: பரிபூர்ணனான பரமபுருஷன் திறத்தில் நாம் சில பொருள்களை ஸமர்ப்பிப்பது நமது ஸ்வரூபம் நிறம்பெறுவதற்கேயன்றி அவனை நிரப்புவதற்கன்று என்பது வெளிப்படை. ஆகவே நாம் சிறந்த பெரும் பொருள்களைத் தேடி யிடவேணுமென்பதில்லை. இடுகிற பொருள் எதுவாயினும் இடுவது ப்ரேம பூர்வமாக வேணுமென்பதிதான் றிலேயே பேசியுள்ளது. திருமங்கையாழ்வார் * கள்ளார் துழாயும் கணவலரும் கூவிளையும் முள்ளார் முளரியுமாம்பலும் முன் கண்டக்கால் புள்ளாய் ஓரேனமாய்ப் புக்கிடந்தான் பொன்னடிக் கென்று, உள்ளாதாருள்ளத்தை யுள்ளமாக் கொள்ளோமே * என்று பெரிய திருமொழியில் (11—7—6) அருளிச் செய்கிறார். திருத்துழாய் முதலிய எந்த வஸ்துவைக் கண்டாலும் 'இது எம்பெருமானுக்குச் சாத்தத் தக்கது' என்று அத்யவஸாயங் கொள்ளாதாருடைய நெஞ்சை நெஞ்சாகக் கொள்ள மாட்டோம் [நஞ்சாகவே கொள்ளுவோம்] என்று உரைக்கின்ற இப்பாட்டில், பெருமானுக்கே உரித்தான திருத்துழாயோடு விஜாதீய வஸ்துக்களும் கூட

கப்பட்டிருத்தலால், எம்பெருமானுக்கு ஸமர்ப்பிக்கவேணு மென்கிற சுத்தபாவத்துடனே கொள்ளுகிற புஷ்பம் எதுவாயிருந்தாலும் குற்றமில்லை; * செண்பக மல்லிகையோடு செங்கழுநீரிருவாட்சி * என்று சிறப்பித்துச் சொல்லப்படுகிற புஷ்பங்களாகவே யிருக்கவேணு மென்கிற நியதியில்லை, ஏதேனுமொரு புஷ்பமாக இருக்கலா மென்பதும், பக்திப் பெருங்காதலே முக்கியமான தென்பதும் தோற்றுவிக்கப்பட்டன. * பத்ரம் புஷ்பம் * என்று மேலே யெடுத்த கீதா ச்லோகமும்—' இடுகிற பொருளில் வாசி பார்ப்பதில்லை; இடுகிறவன் னெஞ்சில் ஈரமுள்ளதா என்பதொன்றையே பார்ப்பேன், என்று ஸ்பஷ்டமாகக் காட்டுகின்றது. பூர்வார்த்தத்தில் 'யோ மே பக்த்யா ப்ரயச்சதி' என்று சொல்லிவைத்து உத்தரார்த்தத்திலும் 'தத் பக்த்யுபஹ்ருதம்' என்று மீண்டும் சொல்லியிருக்கிறதல்லவோ? தத் என்றுலே போதுமாயிருக்க 'பக்த்யுபஹ்ருதம்' என்றது அநாவச்யகமே யன்றோ. தாத்பர்யசந்த்ரிகையில் இஃது எடுத்துக் காட்டப்படுகிறது—" भक्त्युपहृतमिति पुनः कीर्तनम् भगवदादरणीयत्वे हेतुरयमेवेति ज्ञापनार्थम् तथा च स्वयमेवाह—※ अण्वप्युपहृतं भक्तैर्मम भोगाय कल्पते। भूर्यप्यभक्तोपहृतं न मे भोगाय जायते ※ इति ॥" என்று.

48. இனி, பத்து பதினொன்று ஆகிய இரண்டத்யாயங்களின் ஸாரங்களைச் சேர்த்து அநுபவிப்போம். பத்தாவது அத்யாயத்திற்கு விபூத்யத்யாயமென்று பெயர்; பதினோராமத்யாயத்திற்கு விச்வரூபாத்யாய மென்று பெயர்; பத்தாமத்யாயத்திற்கு ஸ்வாமி யெம்பெருமானாருடைய அவதாரிகை வருமாறு:— கீழே பக்தியோகம் ஸாங்கமாக விவரித்துரைக்கப்பட்டது; இப்பொழுது, பக்தியுண்டாவதற்காகவும் அது வளருவதற்காகவும் எம்பெருமானுடைய [தன்னுடைய] நிகரற்ற ஐச்வர்யம் முதலிய திருக்கல்யாணகுணங்களின் திரள் அளவு கடந்திருக்கிறபடியையும், உலகமெல்லாம் தனக்கு சரீரமாயிருக்கையாலே அவனுருவாய் அவன் வசச் செல்லும்படியாயிருக்கின்றமையும் விஸ்தரித்துச் சொல்லப்படுகின்றன—என்று. இடையிடையில் அர்ஜுநன் கேள்வி கேட்டால் அதற்குமேல் கண்ணன் விடை கூறுவது என்கிற முறையை இவ்விடத்தில் வைத்துக்கொள்ளாமல் தானாகவே ※ भूय एव महाबाहो! शृणु मे परमं वचः—பூய ஏவ மஹாபாஹோ! ச்ருணு மே பரமம் வச: ※ (10-1) என்று, மீண்டும் நான் சொல்லுவதைக் கேளப்பா! என்று ஆரம்பித்துச் சொல்லுகிறான்; இப்படி அப்ருஷ்டோத்தரமாகச் சொல்லுவது கூடுமோ வென்று சங்கிக்க இடமில்லாதபடி உத்தரார்த்தத்தில் * यत्तेऽहं प्रीयमाणाय वक्ष्यामि हितकाम्यया—யத் தேஹம் ப்ரீயமாணாய வக்ஷ்யாமி ஹிதகாம்யயா * என்று, ச்ரோதாவான அர்ஜுநனுடைய முகத்தில் ப்ரீதி விசேஷத்தைக்கண்டு இவனுக்கு இன்னமும் விரிவாகச் சொல்லியே யாகவேண்டு மென்று திருவுள்ளம்பற்றிச் சொல்லுவதாகக் காட்டப்படுகிறது. விஷயம் கேட்கிறவன் சிறிது வெறுப்போடிருப்பதாகத் தெரியவந்தாலும் வக்தாவுக்கு மேன்மேலும் சொல்ல வாயெழும்பாது; ச்ரோதா ப்ரஸந்நமுகனாகத் தென்பட்டால் ஸர்வமான விஷயங்களும் 'என்னைக்கொள் என்னைக்கொள்' என்று முற்பட்டு வாவுக்கு வந்து நிற்கும். அவற்றை யெல்லாம் சொல்லியே தீரவேண்டியதாகும். ...க்கு 10, 11. ஆகிய இரண்டத்யாயங்களிலும் சொல்லப்புகுகிற விஷயங்கள் கீதா சாஸ்த்ரத்திலுள் ஸாரங்களாயிருப்பதால் இவற்றைச் சொல்லத் தொடங்கும்போதே ...ன் தன்னுடைய அவாவை அதிகமாகக் காட்டினனென்பது "ப்ரீயமாணாய

நே" என்பதனால் விளக்கப்படுகிறது. அவன் ப்ரீதனைத் தென்படாமற் போனாலும் கூட அவனுடைய ஹிதத்தை யுத்தேசித்துத் தான் சொல்லப் போகிறதாகக் காட்டப்படுகிறது "வக்ஷ்யாமி ஹிதகாம்யயா" என்பதனால். ஆக, இவ்விரண்டத்யாயங்களிலும் தெரிவிக்கப்படுகிற அர்த்தங்கள் ப்ரியங்களுமாய் ஹிதங்களுமாயிருக்குமென்று ஆரம்பத்திலேயே அறிவிக்கப்பட்டதாயிற்று. (10—19.) * हन्त ! ते कथयिष्यामि विभूतीरात्मनः शुभाः– प्राधान्यतः कुरुश्रेष्ठ ! नास्त्यन्तो विस्तरस्य मे– ஹந்த தே கதயிஷ்யாமி விபூதிராத்மனச் சுபா:, ப்ராதாந்யத: குருச்ரேஷ்ட ! நாஸ்த்யந்தோ விஸ்தரஸ்ய மே * என்று, அர்ஜுனா ! என்னுடைய மிகவழகிய விபூதிகளை உனக்குச் சொல்லுகிறேன் ; எல்லாவற்றையும் சொல்லுவதென்றால் அவற்றுக்கு முடிவே இல்லையாகையாலே சொல்லப் போகாது ; உன்னால் கேட்கவும் போகாது ; ஆகையாலே முக்கியமாகச் சிலவற்றைச் சொல்லுகிறேன் கேளாய் என்று சொல்லி, (21) * आदित्यानामहं विष्णुः– ஆதித்யானாமஹம் விஷ்ணு: * என்று தொடங்கி முப்பத்தொன்பதாவது ச்லோகமளவும் சொன்னான். இவையெல்லாம் கேட்ட அர்ஜுனன் (11—1ல்) * यत्त्वयोक्तं वचस्तेन मोहोऽयं विगतो मम– யத் த்வயோக்தம் வசஸ் தேந மோஹோயம் விகதோ மம * என்று, கண்ணா ! நீ சொன்னவற்றையெல்லாம் கேட்டு என்னுடைய மோஹமெல்லாம் தொலைந்தது என்று சொல்லி, (11-3ல்) * द्रष्टुमिच्छामि ते रूपमैश्वरं पुरुषोत्तम– த்ரஷ்டுமிச்சாமி தே ரூபமைச்வரம் புருஷோத்தம * என்று பகவானுடைய அஸாதாரண ரூபத்தைக் காண்பதிலே தனக்கு விருப்பமிருப்பதாக வெளியிட்டான். அவனுக்குக் கண்ணபிரான் விச்வரூபம் காட்டியருளத் திருவுள்ளம்பற்றி அதை ஊனக்கண்ணாலே காண முடியாதாகையால் அதுகாண்கைக்காக திவ்ய சக்ஷுஸ்ஸைக் கொடுத்தருள விரும்பி, * दिव्यं ददामि ते चक्षुः पश्य मे योगमैश्वरम्– திவ்யம் ததாமி தே சக்ஷு: பச்ய மே யோகமைச்வரம் * என்று சொல்லி திவ்ய சக்ஷுஸ்ஸைக் கொடுத்து விச்வரூபத்தை அற்புதமாகக் காட்டியருளினான். ஆக, பத்தாமத்யாயத்தில் விபூதி விஸ்தாரத்தைப் பேசி, பதினோராமத்யாயத்தில் விச்வரூபத்தைக் காட்டியருளினானாயிற்று. இவையெல்லாம் எம்பெருமானுடைய உடைமைகள். இவை அஸத்யமென்பது அத்வைதிகளின் கருத்து. உண்மையாக அஸத்யமாகில், இவற்றைக் கண்ட அர்ஜுனன் முடிவாகச் சொல்லுகிற வார்த்தை அப்படியிருக்கமுடியாது. அந்த வார்த்தை ஏதென்னில் ; (11-40) * अनन्तवीर्यामितविक्रमस्त्वं सर्वं समाप्नोषि ततोऽसि सर्वः– அநந்த வீர்யாமிதவிக்ரமஸ் த்வம் ஸர்வம் ஸமாப்நோஷி ததோஸி ஸர்வ: * என்பது. இவ்விடத்திலே நம் ஸ்வாமியினுடைய பாஷ்யத்திலுள்ள ஸ்ரீஸூக்தியை மேலே யெடுத்துக் காட்டுவோம் ; அந்த ஸ்ரீஸூக்தியிருக்கட்டும் ; மூலத்தை மாத்திரமே பார்ப்போம் ; பார்க்குமளவில் * सर्वं खल्विदं ब्रह्म * ऐतदात्म्यमिदं सर्वम् * तत्त्वमसि श्वेतकेतो * என்பன முதலான உபநிஷத்வாக்யங்களை விசிஷ்டாத்வைதிகள் எவ்விதமாக நிர்வஹிக்கிறார்களோ அவ்விதமாகத் தான் நிர்வஹிக்கவேண்டுமென்பது கீதாசார்ய ஸம்மதமாகத் தேறுகின்றது. மேலே குறித்த ச்ருதிவாக்யங்களை நம்மவர்கள் நிர்வஹிக்கும் ப்ரகாரத்தை பட்டர் ஸ்ரீ ராஜஸ்தவ–உத்தரசதகத்தில் (23) * स्थित्युत्पत्तिप्रवृत्ति– ஸ்தித்யுத்பத்தி ப்ரவ்ருத்தி * இச்லோகத்தில் சுருக்கக் காட்டியுள்ளார். அங்கு எம்முடைய வியாக்கியானத்தில் விரிவு காணலாம். அந்தச்லோகத்தின் உத்தரார்த்தத்தில் மேலே குறித்த உபநிஷத் வாக்யங்கள் மூன்றையும் அடைவே யெடுத்துக்காட்டி " एषमाया व्याख्याता रज्जु

त्रिजयिभिर्वैदिकैस्सार्वभौमैः" என்று தலைக்கட்டியுள்ளார். ப்ரக்ருத கீதா ச்லோகத்தில் "ஸர்வம் ஸமாப்நோஷி ததோஸி ஸர்வ:" என்றதற்குப் பொருள் யாதெனில்; பகவானே! உலகிலுள்ள ஸகல பதார்த்தங்களையும் நீயேயாக வேதங்களிற் சொல்லியிருப்பதற்குக் காரணம் எல்லாவற்றிலும் நீ ஆத்மாவாக வியாபித்திருப்பதுதான்—என்பதாம். இங்கு கீதாபாஷ்ய ஸ்ரீஸூக்தி வருமாறு— "......वायुर्यमोऽग्निरित्यादि सर्वसामानाधिकरण्यनिर्देशस्य आत्मतया व्याप्तिरेव हेतुरिति सुव्यक्तमुक्तम्..." என்று கண்ணபிரான் சொன்ன விபூதி விஸ்தாரங்களைக் கேட்டும், காட்டின விச்வரூபத்தைக் கண்டும் நின்ற அர்ஜுநன் "கண்ணா! உண்மையில் இல்லாதவற்றையெல்லாம் எடுத்துச் சொல்லுகிறாயே, உண்மையாக இல்லாதவற்றையெல்லாம் எதிரிட்டுக் காட்டுகிறாயே!" என்று சொல்லியிருக்கவேண்டும் அத்வைதிகளின் கொள்கை உண்மையாயின். அர்ஜுநன் அப்படிச் சொல்லாமல் (ச்லோ. 38ல்) "त्वया ततं विश्वमनन्तरूप– த்வயா ததம் விச்வமநந்தரூப" என்றும். "सर्वं समाप्नोषि ततोऽसि सर्वः– ஸர்வம் ஸமாப்நோஷி ததோஸி ஸர்வ:" என்றும் சொல்லியிருக்கையாலே ப்ரபஞ்சமெல்லாம் ஸத்யமென்றும் ஒன்றுகூட பொய்யல்லவென்றும் நிஸ்ஸந்தேஹமாகத் தேறுகின்றது. ஆக இவ்வத்யாயங்களிரண்டும் அத்வைதிகளின் வாதத்தை நிராதாரமென்று நிரூபிக்கப் போதும்.

49. இனி பன்னிரண்டாமத்யாயத்திற் சிறிது அநுபவிப்போம். இதில் 18, 19 ச்லோகங்கள் ஸாரமானவை. அவையாவன— "समः शत्रौ च मित्रे च तथा मानापमानयोः। शीतोष्णसुखदुःखेषु समः सङ्गविवर्जितः॥ तुल्यनिन्दास्तुतिर्मौनी सन्तुष्टो येन केनचित्। अनिकेतः स्थिरमतिः भक्तिमान्मे प्रियो नरः– ஸம: சத்ரௌ ச மித்ரே ச ததா மாநாவமாநயோ:, சீதோஷ்ண ஸுக துக்கேஷு ஸம: ஸங்கவிவர்ஜித:, துல்ய நிந்தாஸ்துதிர் மௌநீ ஸந்துஷ்டோ யேந கேநசித், அநிகேத: ஸ்திரமதிர் பக்திமாந் மே ப்ரியோ நர:." என்பன. பகைவனிடத்திலும் நண்பனிடத்திலும் ஒரேவிதமான பாவனையுள்ளவனும், பஹுமானம் சேர்ந்தாலும் அவமானம் சேர்ந்தாலும் அவற்றையும் துல்யமாகவே பாவிப்பவனும், சீதோஷ்ணங்களையும் ஸுகதுக்கங்களையும் ஸமமாக நினைப்பவனும், எதிலும் பற்றில்லாமலிருப்பவனும், பிறர் நிந்திப்பதையும் துதிப்பதையும் துல்யமாக நினைப்பவனும், ஒருவரோடும் பேசாமலிருப்பவனும், ஏதேனுமொன்றினால் ஸந்துஷ்டசித்தனாயிருப்பவனும் உறுதியும் பக்தியுமுடையவனுமானவன் எனக்குப் பரம ப்ரியபாத்ர பூதன் என்று சொல்லுகிறான் கண்ணபிரான். இப்படிப்பட்ட அதிகாரி உலகில் மிகவும் துர்லபனேயாயினும் இப்படியிருக்க ஆசைப்படவேணுமென்பதற்காகவே இஃது அருளிச் செய்தபடி.

50. இனி பதின்மூன்றாமத்யாயத்திற்குச் செல்வோம். இதில் முதல் ச்லோகமும் இரண்டாம் ச்லோகமும் சிறிது விபரீதவுணர்ச்சியை உண்டாக்குவது போலுள்ளது. இங்கு ஸ்வாமியினுடைய பாஷ்யமும் அதற்கு உரையான தாத்பர்ய சந்த்ரிகையும் மிகமிக விரிவாக அமைந்திருக்கின்றது. மூல ச்லோகங்களாவன— "इदं शरीरं कौन्तेय! क्षेत्रमित्यभिधीयते। एतद्यो वेत्ति तं प्राहुः क्षेत्रज्ञ इति तद्विदः॥- இதம் சரீரம் கௌந்தேய க்ஷேத்ரமித்யபிதீயதே, ஏதத் யோ வேத்தி தம் ப்ராஹு: க்ஷேத்ரஜ்ஞ இதி தத்வித:" என்பது முதல் ச்லோகம். இனி இரண்டாவது ச்லோகமாவது- क्षेत्रज्ञं चापि मां विद्धि सर्वक्षेत्रेषु भारत। क्षेत्रक्षेत्रज्ञयोर्ज्ञानं यत्तज्ज्ञानं मतं मम– க்ஷேத்ரஜ்ஞம் சாபி மாம்

வித்தி ஸர்வக்ஷேத்ரேஷு பாரத!, க்ஷேத்ரக்ஷேத்ரஜ்ஞயோர் ஜ்ஞாநம் யத் தத் ஜ்ஞாநம் மதம் மம" என்பது. இங்கு (ஆபாதப்ரதீதியில்) மேல்நோக்கில் என்ன தோற்றுகிறதென்றால், க்ஷேத்ரமென்னப்படுகிற அசேதநமும், க்ஷேத்ரஜ்ஞனென்னப்படுகிற சேதநனும் ஆகிய இரண்டையும் அர்ஜுநா! நானாக அறிந்துகொள் என்னப்படுகிறது பூர்வார்த்தத்தில்; க்ஷேத்ரக்ஷேத்ரஜ்ஞர்களாகிற சேதநாசேதநங்களை யறிந்துகொள்வதென்பது யாதொன்றுண்டோ, அதுதான் என்னையறிந்து கொள்வதாகும் என்கிறது உத்தரார்த்தத்தில். இவற்றால் அத்வைதவாதம் ஸித்திக்கிறதென்று கருதிய சங்கராசாரியர் தமது பாஷ்யத்தில் அக்கருத்தை விளக்கியிருக்கின்றார். அதற்கு விரிவான மறுப்பு ஸ்வாமியின் கீதாபாஷ்யத்திலுள்ளது; மிகமிக விரிவான மறுப்பு தாத்பர்யசந்த்ரிகையிலுள்ளது. அதன் ஸாரத்தை மிகவும் சுருக்கமாகத் தெரிவிக்கிறோமிங்கு. தேஹத்திற்காட்டிலும் ஆத்மா வேறுபட்டவன் என்பது தெரிந்திருக்கச்செய்தேயும் 'தேவோஹம் மநுஷ்யோஹம்' என்று வ்யவஹாரம் செய்துவருகிறோம். அஹம் என்பதற்கு ஆத்மா அர்த்தமேயொழிய தேஹம் அர்த்தமன்று; தேவத்வமோ மநுஷ்யத்வமோ சரீரத்திலுள்ளதேயன்றி அஹமர்த்தமான ஆத்மாவிலுள்ளதன்று. அப்படியிருந்தும் 'தேவ: அஹம், மநுஷ்ய: அஹம்' என்று ஸமாநாதிகரணமாக ப்ரயோகிப்பது எப்படி பொருந்துகிறதென்றால் கேண்மின். ஆத்மாவும் சரீரமும் ஒன்றைவிட்டொன்று தனித்து நிற்பனவல்ல. தேஹமானது ஆத்மாவுக்கு அப்ருதக்ஸித்தவிசேஷணமாய்க்கொண்டேயிருப்பதால் இந்தச் சேர்த்தியைவிட்டு 'தேவ: அஹம், மநுஷ்ய: அஹம்' என்று வ்யவஹரிக்கப்பட்டு வருகிறது. இதற்கு அர்த்தம் என்னவென்றால், தேவசரீரக: அஹம், மநுஷ்யசரீரக: அஹம்—என்பதேயாம். ஏவஞ்ச, சரீராத்மபாவரூபமான ஸம்பந்தத்தைக்கொண்டு பொருத்தப்பட்டதாயிற்று. இவ்வண்ணமாகவே "क्षेत्रज्ञं चापि मां विद्धि—க்ஷேத்ரஜ்ஞஞ்சாபி மாம் வித்தி" என்றதும் சரீராத்மபாவ ஸம்பந்த நிபந்தமாகவே பொருந்தக் குறையில்லை. அசேதநமான தேஹமானது ஜீவாத்மாவுக்கு சரீரமாயிருப்பது போல, இவ்விரண்டும் சேர்ந்து பரமாத்மாவுக்கு சரீரமாயிருக்கும் விஷயம் ஸுபாலோபநிஷத்து முதலானவற்றில் ஸுப்ரஸித்தமாயிருப்பதால் க்ஷேத்ரத்தையும் க்ஷேத்ரஜ்ஞனையும் பரமாத்மாவாக நினைப்பதென்பது "क्षेत्रक्षेत्रज्ञशरीरकः परमात्मा—க்ஷேத்ரத்தையும் க்ஷேத்ரஜ்ஞனையும் சரீரமாகக் கொண்டவன் பரமாத்மா" என்று நினைப்பதாகவே முடிந்து நிற்கும். இவ்விஷயம் பலபல உபபத்திகளுடன் ஸ்வாமி பாஷ்யத்தில் விரித்துரைக்கப் பட்டிருப்பது காண்க.

51. பதினான்காமத்யாயத்தில் (24, 25ல்) "गुणातीतस्स उच्यते—குணாதீதஸ் ஸ உச்யதே" என்று ஓர் உத்தமாதிகாரி சொல்லப்படுகிறான். இவனுக்கு குணாதீதனென்று பெயர். குணங்களைக் கடந்தவனென்று பொருள். ஸகல குணங்களுக்கும் கொள்கலமாக இருப்பவனன்றோ உத்தமாதிகாரி; குணங்களைக் கடந்தவன் எப்படி உத்தமாதிகாரியாவான்? என்று கேள்வி பிறக்கக்கூடும். இங்கு விவக்ஷிக்கப்படுகிற குணங்கள் சமதமாதிகுணங்களல்ல; ஸத்வ ரஜஸ் தமோகுணங்கள். "முக்குணத்து வாணியத்திரண்டிலொன்று நீசர்கள்" என்று திருமழிசைப்பிரானும், "முக்குணத்திரண்டவகற்றி, ஒன்றினி லொன்றி நின்று" என்று திருமங்கையாழ்வாரும் அருளிச்செய்தபடி ரஜஸ் தமோகுணங்களிரண்டுதானே த்யாஜ்யங்கள்; ஸத்வகுணம் உபாதே

தானே; அதுவுங்கூட ஹேயமென்று தோன்றும்படியுள்ளதேயென்று நினைக்க வேண்டா; சுத்தஸத்வம் என்பது உபாதேயமே. ரஜஸ் தமஸ்ஸுக்களோடு கலசின ஸத்வம் உபாதேயமன்று, அது ஹேயமே. ஆக, தமோகுணமும் ரஜோகுணமும் ரஜஸ்தமோமிச்ரஸத்வகுணமுமாகிய முக்குணங்களையுங் கடந்தவன் குணாதீதனெனப் படுவான். இவனை நாம் எப்படித் தெரிந்துகொள்வதென்றால் அவனுடைய நிலைமையைக் கொண்டு தெரிந்துகொள்ளலாம். அந்த நிலைமை தெரிவிக்கப்படுகிறது இரண்டு ச்லோகங்களினால். "समदुःखसुखः स्वस्थः समलोष्टाश्मकाञ्चनः। तुल्यप्रियाप्रियो धीरस्तुल्यनिन्दात्मसंस्तुतिः॥ मानापमानयोस्तुल्यस्तुल्यो मित्रारिपक्षयोः। सर्वारम्भपरित्यागी गुणातीतः स उच्यते—ஸமதுக்கஸுகஸ் ஸ்வஸ்த: ஸமலோஷ்டாச்ம காஞ்சந:, துல்யப்ரியாப்ரியோ தீரஸ் துல்யநிந்தாத்ம ஸம்ஸ்துதி:; மாநாவமாநயோஸ் துல்யஸ் துல்யோ மித்ராரிபக்ஷயோ:, ஸர்வாரம்பபரித்யாகீ குணாதீதஸ் ஸ உச்யதே" என்னும் இவ்விரண்டு ச்லோகங்களும் அநவரதம் கண்டபாடம் செய்யத்தக்கன. ஸுகம் வந்தாலும் துக்கம் வந்தாலும் அவிகாரமான சித்தவ்ருத்தியையுடையனாயிருக்கவேணுமென்கிறது 'ஸமதுக்கஸுக:' என்பதனால். அதன்மேல் [ஸ்வஸ்த:] என்கிறது. இதற்கு இவ்விடத்தில் அபூர்வமான வ்யுத்பத்தியைக் காட்டியருளுகிறார் ஸ்வாமி எம்பெருமானார். 'स्वस्मिन् स्थितः स्वस्थः' (தன்னிடத்திலேயே யிருப்பவன்) என்கிறார். உடனே அதை விவரிக்கிறார்—"स्वात्मैकप्रियत्वेन तद्व्यतिरिक्त पुत्रादिजन्ममरणादि सुखदुःखयोः समचित्त इत्यर्थः" என்று. இங்கு ஸுகதுக்கம், ப்ரியாப்ரியம் என்னும் சப்தங்கள் விசேஷமான பொருள்வாசியையுடையன அல்ல; பர்யாயசப்தங்கள் போலவேயாகிலும். ஆனாலும் விஷய பேதத்தாலே பொருள் பேதித்திருக்கும். ஸ்வஸ்த: என்பதற்கு "स्वात्मनि स्थितः प्रसन्नः" என்பது சங்கரபாஷ்யம். அதையே நன்கு விவரித்துக் காட்டுகிறது ராமாநுஜபாஷ்யம். இதற்குமேல் "ஸமலோஷ்டாச்மகாஞ்சன:" என்கிறது. லோஷ்டத்தையும் கல்லையும் பொன்னையும் ஸமமாக நினைப்பவன். இப்படியாக மேன்மேலும் சொல்லப்படுகிற தன்மைகள் இக்காலத்தில் நம் போன்ற பாமரர்களுக்கு எவ்வளவு முயற்சி செய்தாலும் வாய்க்கக்கூடியவையல்ல. இத்தகைய நலம் வாய்ந்தவர்கள் பூலோகம் முழுவதற்குமொன்றும் ஒருவரிருவர் தேறுவதும் அருமையென்னலாம். ஆயினும் இப்படிப்பட்ட ச்லோகங்களை நாம் மனனம் செய்துகொண்டேயிருந்தால் பெரிதும் பயன்படும் என்றிவ்வளவே சொல்லலாம்.

52. இனி பதினைந்தாமத்யாயத்திற் புகுவோம். இதில் விமர்சநோதாரணையில் தெரிவிக்கும் ஸாரமான விஷயமொன்றைக் குறிக்கொண்மின். நமது ஸ்ரீபாஷ்யகாரர் பெரும்பாலும் ஆழ்வார்களுடைய ஸ்ரீஸூக்திகளைத் தழுவியே ஸ்ரீபாஷ்யம் கீதாபாஷ்யம் முதலியவற்றை அருளிச்செய்ததாக நம் முன்னோர்கள் திருவுள்ளம்பற்றியிருக்கிறார்கள். 'பாஷ்யகாரர் இதுகொண்டு ஸூத்ரவாக்யங்களொருங்கவிடுவர்' என்று ஆசார்யஹ்ருதயத்தில் ஸ்பஷ்டமாகவும் பணிக்கப்பட்டுள்ளது. இதற்குச் ...ன்றாக நாம் பலவிடங்கள் காட்டியிருக்கிறோம். இப்போது இவ்வத்யாயத்தில் ஒரு ...ட்டம் காட்டுகிறோம். இங்கு (15—18) "யஸ்மாத் க்ஷரமதீதோஹம்" என்கிற ச்லோ...ல் "அதோஸ்மி லோகே வேதே ச ப்ரதித: புருஷோத்தம:" என்றுள்ளது. இங்கு "லோகே வேதே ச" என்றதற்கு லோகத்திலும் சாஸ்த்ரத்திலும் என்று பொருள் ...ரணமாக எல்லார்க்கும் தோன்றக்கூடியது. இதர பாஷ்யகாரர்கள் இப்படித்

தான் அர்த்தம் செய்திருக்கக் காண்கிறோமில்லை. ஸ்வாமி யெம்பெருமானாரோ வென்னில், தமது பாஷ்யத்தில் அங்ஙனம் பொருள் பணிக்கவில்லை. "वेदार्थावलोकनात् लोक इति स्मृतिरिहोच्यते ; श्रुतौ स्मृतौ चेत्यर्थः— வேதார்த்தாவலோகநாத் லோக இதி ஸ்ம்ருதிரிஹோச்யதே; ச்ருதௌ ஸ்ம்ருதௌ ச இத்யர்த்த:" என்பது கீதாபாஷ்ய ஸ்ரீஸூக்தி. லோகம் என்பதற்கு கரணவ்யுத்பத்தியினால் சாஸ்த்ரமென்றே பொருள் கொள்ளப் பட்டிருக்கிறது. இப்படித்தான் கொள்ளவேணுமென்று தாத்பர்ய சந்த்ரிகையில் வேதாந்த தேசிகனும் உபபாதநம் செய்தருளியிருக்கிறார். லோகமென்னும் சொல்லுக்கு இப்படி சாஸ்த்ரமென்கிற பொருளைக் கொண்டவர்கள் வேறு யாருமில்லை. லோக சப்தத்திற்கு சாஸ்த்ரமென்று அர்த்தமுள்ளதாக கோசங்களிலும் காணப்பட வில்லை. "लोकस्तु भुवने जने— லோகஸ்து புவநே ஜநே" என்று தான் அமரகோசத்திலுள்ளது. இதர கோசங்களிலும் இங்ஙனமே காண்கிறது. இப்படியிருக்க நம் ஸ்வாமி பாஷ்யகாரர் லோக பதத்தை சாஸ்த்ர பர்யாயமாகக் கொண்டு பொருளருளிச் செய்ததற்கு நிதானமென்ன? என்று பராமர்சிக்க வேணும். நம்மாழ்வாருடைய வொரு ஸ்ரீஸூக்தியே இதற்கு மூலகாரண மென்கிற தத்துவத்தை இங்கு நாம் நிரூபிக்க விரும்புகிறோம்.

53. நம்மாழ்வார் திருவாய்மொழியில் *ஒன்றுந் தேவு முலகு முயிரு மென்று தொடங்கும் பதிகத்தில் (4-10-6) *போற்றி மற்றோர் தெய்வமென்னும் பாசுரத்தில் *எல்லீரும் வீடுபெற்றால் உலகில்லை யென்றே* என்றருளிச் செய்துள்ளார். இப் பதிகத்தில் ஸ்ரீமந்நாராயணனுடைய பரத்வத்தை உபபாதித்து வந்த ஆழ்வாரை நோக்கி 'ஸ்ரீமந்நாராயணனே ஸர்வேச்வரனாகில் அவன் தன்னையே ஆச்ரயிக்கும்படி எங்களைப் பண்ணாமல் இதர தெய்வங்களைத் தொழுமாறு எங்களைச் செய்து வைத்தது ஏன்?' என்று சிலர் கேட்பதாகக் கொண்டு அவர்களுக்கு விடை கூறுவதாக இப் பாசுரமமைக்கப் பட்டுள்ளது. இப்பாசுரத்தில் "எல்லீரும் வீடுபெற்றால் உலகில்லை யென்றே" என்பது தான் உயிராக வுள்ளது. எல்லாரும் ஸ்ரீமந்நாராயணனையே தொழப் பெற்றால் எல்லாருமே வீடு பெறுவார்கள்; அப்படி எல்லாரும் வீடுபெற்று விட்டால் உலகு இல்லையாய் விடும்; (அதாவது லீலாவிபூதி அடியற்றுப் போய் விடும்;) அங்ஙனம் ஆகாமைக்காகவே எம்பெருமான் உங்களை இதர தேவதாபஜனம் பண்ணி ஸம்ஸாரிகளாய்த் தொலைந்து போம்படி செய்து வைத்தான் — என்பதாக இப்பாசுரத்திற்கு ஆபாத ப்ரதீதியில் பொருள் தோன்றக் கூடும். தமிழோபநிஷத் பாஷ்யகாரரான ரங்கராமாநுஜ ஸ்வாமி வடமொழியில் (திருவாய்மொழிக்குத்) தாம் பணித்த ஒன்பதினாயிரப்படி வ்யாக்யானத்தில் இவ்விதமான பொருளையே எழுதி யுள்ளார். "अत्राश्रयानां सर्वेषां मोक्षलाभे लीलाविभूत्यन्तर्भूतलोकानाम् उच्छेद एव स्यादिति मत्वैव भगवता स्वविषये भक्तिमनुत्पाद्य देवतान्तरविषये भक्तिरुत्पादितेति भावः ।" என்பவை அந்த ஸ்வாமியினுடைய வ்யாக்யான பங்க்திகள்.

54. ஆனால், திருக்குருகைப்பிரான் பிள்ளான், நம்பிள்ளை முதலான பூர்வாசார்யர்கள் தம் வ்யாக்யானங்களில் வெளியிட்டருளின பொருள் இங்ஙனே யல்ல, வேறே யென்னில்; 'உலகில்லையென்றே' என்றவிடத்தில், உலகு என்பதற்கு சா மென்று பொருள்; ப்ரபல பாபம் செய்து வைத்த நீங்களும் ப்ரபல ஸுக்ருதிகளு

பெறக்கூடியதான மோக்ஷத்தைப் பெற்று விட்டார்களாகில் சாஸ்த்ர மர்யாதையே அழிந்துவிடுமென்று நினைத்தே எம்பெருமான் உங்களை தேவதாந்தர ப்ரவணர்களாக ஆக்கிவைத்திருக்கிறான்; அவரவர்கள் பண்ணின புண்ய பாபரூப கருமங்களுக்குத் தக்கபடியே பலன் கொடுப்பதென்று ஒரு சாஸ்த்ர மர்யாதை ஏற்பட்டிருக்கிறது; நீங்கள் முற்பிறவிகளில் பிரபலமான தீவினைகளைச் செய்திருக்கிறபடியால் அவற்றின் பலனை இப்பிறப்பில் க்ஷுத்ரதேவதா பஜநம் பண்ணும்படியாக உங்களை உபேக்ஷித்திடலாயிற்று. கொடிய பாவங்கள் செய்த உங்களையும் புண்யாத்மாக்களைப் போலே ஸ்ரீமந்நாராயண ஸமாச்ரயணமே செய்யும்படி பண்ணிவிடுவரானால் அப்போது முன் சொன்ன சாஸ்த்ர மரியாதை அழிந்துவிடுமன்றோ; அங்ஙனம் அழியாமைக்காகவே உங்களை இங்ஙனே நிறுத்திவைத்தது— என்பதாகவே ஆழ்வார் திருவுள்ளம் பற்றிய பொருள் என்று பூருவாசாரியர்கள் உபபாதித்தருளுகிறார்கள். வேதாந்த தேசிகனும் த்ரமிடோபநிஷத் தாத்பர்ய ரத்நாவளியில் * तत्तत्कर्मानुरूपं फलवितरणतः— தத்தத் கர்மாநுரூபம் பலவிதரணத: * என்று இவ்வர்த்தத்தையே வெளியிட்டருளினார். ஆகவே ஆழ்வார் திருவுள்ளத்தால் உலகு என்பதற்கு சாஸ்த்ர மென்னும் பொருள் தேறிவிட்டபடியால் இதையடியொற்றியே ஸ்வாமி பாஷ்யகாரர் ப்ரக்ருத கீதாச்லோகத்தில் [* அதோஸ்மி லோகே வேதே ச *] என்றவிடத்தில் லோக சப்தத்தை சாஸ்த்ர பரமாக கல்பித்தருளினாரென்று அறியக் கிடக்கிறது. இந்த கீதா ச்லோகத்தை அப்பாஸுரத்தின் வியாக்கியானத்தில் பெரியவாச்சான் பிள்ளையும் வடக்குத் திருவீதிப் பிள்ளையும் எடுத்துக் காட்டியுமிருக்கிறார்கள்.

55. எம்பெருமானார்க்கு முன்னே ஆளவந்தாரும் லோக சப்தத்தை சாஸ்த்ர மென்னும் பொருளில் ப்ரயோகம் செய்தருளினார். ஸ்தோத்ர ரத்நத்தில் (23) * न निन्दितं कर्म तदस्ति लोके— ந நிந்திதம் கர்ம ததஸ்தி லோகே * என்றவிடத்திற்கு வியாக்கியானஞ் செய்தருளாநின்ற பெரியவாச்சான்பிள்ளை "ஆயிரமடங்கு என்றால் பண்ணப்படாதது யாதொரு நிந்திதகருமமுண்டு அதிபாதகமஹாபாதகாதிகள். அது சாஸ்த்ரத்திலுமில்லை;...... அநுஷ்டாதாக்கள் பக்கல் இல்லாத நிஷித்தங்களும் சாஸ்த்ரத்தில் காணலாயிற்று" என்று அருளிச் செய்திருக்கிறார். தேசிகனும் ஸ்தோத்ரபாஷ்யத்தில் அவ்விடத்தில், 'लोक्यते अनेनेति लोकः—प्रमाणम्; तस्मिन्नास्ति; अप्रामाणिकमित्यर्थः। अत्र शास्त्ररूपप्रमाणविशेषविवक्षा" என்றருளிச் செய்தார். இவற்றால் ஆளவந்தாரும் லோக சப்தத்தை சாஸ்த்ரபரமாகவே கொண்டாரென்று விளங்காநின்றது. இப்படி ஆளவந்தாரும் எம்பெருமானாரும் கொண்டது ஆழ்வாரருளிச்செயலை அடியொற்றியேயென்பது நிஸ்ஸந்தேஹம், ஆழ்வார் ஸ்ரீஸூக்திகளில் ப்ரவேசமற்ற மற்றையோர்கள் எங்கும் லோகசப்தத்தை இங்ஙனே உபயோகங்கொள்ளக் காணாமையாலே. இனி அடுத்த அத்யாயத்திற்குச் செல்வோம்.

56. பதினாறாமத்யாயத்தில் தேவாஸுரவிபாகம் முக்கியமானது. தைவப்பிறப்பு ஆஸுரப்பிறப்பு என்று பிறப்பிலேயே இருவகையுண்டு. (16–6.) * द्वौ भूतसर्गौ लोके- दैव आसुर एव च— த்வௌ பூதஸர்கௌ லோகேஸ்மிந் தைவ ஆஸுர ஏவ ச *. உலகத்திலுள்ள பிராணிவர்க்கங்களை யெல்லாம் இரண்டே வகுப்பாக வகுத்தாசார்யன். தைவவகுப்பு ஒன்று, ஆஸுரவகுப்பு மற்றொன்று. இதைப்பற்

றிச் சுருக்கமாகத் தெரிந்து கொள்ள வேணுமானால் *दैवी सम्पद्विमोक्षाय निबन्धायासुरी मता– தைவீ ஸம்பத் விமோக்ஷாய நிபந்தாய ஆஸுரீமதா * (16—5) என்கிறவொரு பாதிச் ச்லோகத்தை மனனம் பண்ணினாற் போதும். ஸம்ஸாரபந்தத்தில் நின்றும் விடுபட்டு ஸத்கதியை யடையும் வழியைச் சிந்தனை செய்யும் வகுப்புதான் தெய்வவகுப்பெனப் படுவது. அப்படிப்பட்ட சிந்தனையின்றிக்கே அதோகதியை யடையும் வழியைத் தேடும் வகுப்புதான் ஆஸுர வகுப்பெனப்படுவது. இங்ஙனே சொன்னதைக் கேட்டவுடனே அர்ஜுநனுடைய முகத்தில் துக்கக் குறி காணப்பட்டது. நம்மைக் கண்ணபிரான் தைவவகுப்பில் சேர்த்திருக்கிறானோ ஆஸுரவகுப்பில் சேர்த்திருக்கிறானோ தெரியவில்லையே யென்று அர்ஜுநன் கவலையுற்று நின்றான். அதை யறிந்த கண்ணபிரான் உடனே யருளிச் செய்கிறான் — *मा शुचः सम्पदं दैवीमभिजातोऽसि पाण्डव– மா சுச: ஸம்பதம் தைவீம் அபிஜாதோஸி பாண்டவ! * என்கிறான். அப்பா! நீ கவலை கொள்ளாதே, நீ தெய்வ வகுப்பில் சேர்ந்தவனே யென்று கூறி அவனைப் பரமானந்தப்படுத்துகிறான். தான் செய்யும் உபதேசங்களை அவன் ருசிவிச்வாஸங்களோடு கேட்டுக் கொண்டிருப்பது பற்றியே அவனைத் தைவஸம்பத்து வாய்ந்தவனாக அறுதியிட்டருளினன் கண்ணபிரான். நமக்கு ஆஸ்திக்ய முள்ளதா? நாஸ்திக்ய முள்ளதா? என்பது உலகில் அவரவர்களுடைய நெஞ்சுக்குத் தெரியுமன்றோ. ஆஸ்திக்ய முண்டாகில் நம்முடைய பிறப்பு தெய்வப்பிறப்பு என்று தானே நிச்சயித்துக் கொள்ளலாம். அஃதில்லையாகில் ஆஸுரப் பிறப்பே நமக்கு வாய்த்ததென்று நிச்சயித்துக் கொள்ள என்ன தடை? இவ்விரு பிறப்பின் தன்மைகளை மேலே பல ச்லோகங்களினால் கண்ணபிரான் தானே எடுத்துக் கூறுகின்றான். *न शौचं नापि चाचारो न सत्यं तेषु विद्यते । असत्यमप्रतिष्ठं ते जगदाहुरनीश्वरम् ॥ –ந சௌசம் நாபி சாசாரோ ந ஸத்யம் தேஷு வித்யதே, அஸத்யமப்ரதிஷ்டம் தே ஜகதாஹுரநீச்வரம் * இத்யாதிகள் காண்க.

57. இனி, பதினேழாமத்யாயத்திற் செல்வோம். இதில் மூவகையான தபஸ்ஸுக்களைக் கூறுகின்றான் கண்ணன். அவை சாரீர தபஸ்ஸென்றும், வாங்மயதபஸ்ஸென்றும், மாநஸதபஸ்ஸென்றும் வழங்கப்படுவன. *ஊன்வாட வுண்ணாது உயிர்காவலிட்டு உடலிற்பிரியாப் புலனைந்தும் நொந்து, தாம்வாட வாடத் தவஞ்செய்ய * என்றும், * காயோடு நீடுகனியுண்டு வீசு கடுங்கால் நுகர்ந்து நெடுங்காலம் ஐந்து தீயூடு நின்று தவஞ்செய்ய * என்றும் ஆழ்வார்கள் ஒருவிதமான உடல்தவத்தை யருளிச் செய்துள்ளார்கள். கீதாசார்யன் அருளிச்செய்வது அதனில் வேறுபட்டது. *देवद्विजगुरुप्राज्ञपूजनं शौचमार्जवम् । ब्रह्मचर्यमहिंसा च शारीरं तप उच्यते ॥* என்பது காயிகதபஸ்ஸைத் தெரிவிக்கும் ச்லோகம். பகவானையும் அந்தணர்களையும் ஆசாரியர்களையும் பண்டிதர்களையும் வழிபாடு செய்வது, புண்ய தீர்த்தங்களில் குடைந்தாடுவது, நெஞ்சில் நினைத்தபடியே அநுஷ்டித்துக் காட்டுவது, மாதர்களைக் கண்டு காதல் கொள்ளாமை, ப்ராணிபீடைகள் செய்யாமை ஆகிய இவை காயிகதபஸ்ஸெனப்படும். *अनुद्वेगकरं वाक्यं सत्यं प्रियहितं च यत् । स्वाध्यायाभ्यसनं चैव वाङ्मयं तप उच्यते ॥—அநுத்வேககரம் வாக்யம் ஸத்யம் ப்ரியஹிதம் ச யத், ஸ்வாத்யாயாப்யஸநம் சைவ வாங்மயம் தப உச்யதே * என்பது வாங்மயமான தபஸ்ஸைத் தெரிவிக்கும் ச்லோகம். பிறரை நோவச் செய்யா வார்த்தைகளைச் சொல்லுவது, உண்மையைச் சொல்லுவது, ப்ரியமும் ஹிதமு

வற்றைச் சொல்லுவது, வேத மோதுவது ஆகியவிவை வாசிகதபஸ்ஸெனப்படும். *मनः प्रसादः सौम्यत्वं मौनमात्मविनिग्रहः। भावसंशुद्धिरित्येतत्तपो मानसमुच्यते — மன: ப்ரஸாதஸ் ஸௌம்யத்வம் மௌனமாத்மவிநிக்ரஹ:, பாவஸம்சுத்திரித்யேதத் தபோ மானஸமுச்யதே * கோபம் முதலியன கொள்ளாமையாகிற மனத்தெளிவு, பிறர்க்குத் தீங்கிழைக்க நினையாமையாகிற ஸௌம்யத்வம்; வாய்திறந்து பேசாமை, ஸதா த்யானிக்கத் தகுந்த பரமபுருஷன் விஷயத்திலே நெஞ்சைச் செலுத்துகை, வேறு விஷயங்களில் சித்தம் செல்லாமை ஆகிய இவை மானஸதபஸ்ஸெனப்படும். இங்ஙனம் மூவகைப் பட்ட தபஸ்ஸு மறுபடியும் மூவகையாக வகுக்கப்படுகிறது; ஸாத்விகமென்றும் ராஜஸமென்றும் தாமஸமென்றும்.

58. இப்படி மூன்று மூன்றாக வகுக்கப்படும் விஷயங்கள் பதினெட்டாமத்யாயத்திலும் பல கூறப்படுகின்றன. அதில் ஸுகமானது ஸாத்விகமென்றும் ராஜஸமென்றும் தாமஸமென்றும் மூன்றாகப் பிரிக்கப்படுகிறது. எந்த ஸுகமானது உபக்ரம தசையில் விஷம்போல இருந்து பரிணாமத்தில் அம்ருதம்போலாகிறதோ அது ஸாத்விக ஸுகமாம். யோகம் தொடங்கும்போது வெகு ஆயாஸஸாத்யமாகையாலே துக்கம் போல் தோற்றும்; விபாகதசையில் அப்யாஸபலத்தாலே அதுவே அம்ருதம்போலாகும். இதுதான் ஸாத்விகஸுகம். *यत्तदग्रे विषमिव परिणामेऽमृतोपमम्। तत्सुखं सात्त्विकं प्रोक्तमात्मबुद्धिप्रसादजम् ॥* யத் தததக்ரே விஷமிவ பரிணாமே அம்ருதோபமம், தத் ஸுகம் ஸாத்விகம் ப்ரோக்தம் ஆத்மபுத்தி ப்ரஸாதஜம் * (18-37.) என்கிற ச்லோகத்தை இங்கே அநுஸந்திப்பது.

59. இதற்கடுத்த ச்லோகம்—*विषयेन्द्रियसंयोगात् यत्तदग्रेऽमृतोपमम्। परिणामे विषमिव तत्सुखं राजसं स्मृतम् ॥— விஷயேந்த்ரியஸம்யோகாத் யத்ததக்ரே அம்ருதோபமம், பரிணாமே விஷமிவ தத்ஸுகம் ராஜஸம் ஸ்ம்ருதம் * என்பது. இந்த ச்லோகத்தை நம்மாழ்வார் திருவாய்மொழியில் (7-1-8) * இன்னமுதெனத் தோன்றி ஓரைவர் யாவரையும் மயக்க * என்கிற பாசுரத்திலும் மொழிபெயர்த்திருக்கிறாரென்னலாம். இந்திரியங்கள் சிற்றின்பங்களைப் பற்றி யநுபவிக்கும் ஸுகம் அநுபவவேளையில் அமுதம்போல் தோன்றிப் பிறகு கசக்குமதாகையாலே விஷமாகப் பரிணமிக்கும். இதுதான் ராஜஸஸுகமென்பது.

60. இதற்குமேல் தாமஸஸுகமென்பது எத்தகைத்தென்னில்; *यदग्रे चानुबन्धे च सुखं मोहनमात्मनः। निद्रालस्यप्रमादोत्थं तत्तामसमुदाहृतम् ॥—யதக்ரே சாநுபந்தே ச ஸுகம் மோஹநமாத்மந:, நித்ராலஸ்ய ப்ரமாதோத்தம் தத் தாமஸமுதாஹ்ருதம் * (18—39.) இந்த ச்லோகத்தினால் தெரிவிக்கப்படுகிறது. கீழ்ச் சொன்னவற்றில், அநுபவவேளையிலோ விபாகதசையிலோ ஏதேனுமொரு போதிலே அமுதமாயிருக்குமாகாரமுண்டு. இதில் அங்ஙனன்றிக்கே இரண்டு தசையிலும் விஷமாகவே காண்பது. உறங்குவது, சோம்பேறியாயிருப்பது, செய்யவேண்டியவற்றிலே கவனிப்பில்லாமலிருப்பது ஆகியவை உபயதசையிலும் விஷமானதே.

61. இப்படியாகச் சொல்லிக்கொண்டு போய், ப்ராஹ்மண ஜாதிக்குரிய கருமங்களின்னது, க்ஷத்திரிய ஜாதிக்குரிய கருமமின்னது, வைச்ய ஜாதிக்குரிய கருமமின்னது,

க்ஷத்ரஜாதிக்குரிய தருமமின்னது என்று சொல்லுகையில் *शौर्यं तेजो धृतिर्दाक्ष्यं युद्धे चाप्यपलायनम् । दानमीश्वरभावश्च क्षात्रं कर्म स्वभावजम् ॥ — சௌர்யம் தேஜோ த்ருதிர்தாக்ஷ்யம் யுத்தே சாப்யபலாயனம், தானமீச்வரபாவச்ச க்ஷாத்ரம் கர்ம ஸ்வபாவஜம் * என்கிற ச்லோகத்தினால் க்ஷத்ரியதருமத்தை நெஞ்சிலே யூன்ற வருளிச் செய்தான். இதின் பூர்வார்த்தத்தில் நான்கு குணங்கள் க்ஷத்ரியனுக்குச் சொல்லப்படுகின்றன. இவற்றுள் சௌர்யமாவது-போர்க்களத்தில் சிறிதும் கூசாமே புகுவதற்குரிய வல்லமை. தேஜஸ்ஸாவது—பிறரால் அசைக்கவும் முடியாமை. த்ருதியாவது-தொடங்கின காரியத்தை எத்தனை யிடையூறுகள் மிடைந்தாலும் சிதிலக்காமல் நிறைவேற்றியே தீரும்படியான மனவுறுதி. தாக்ஷ்யமாவது—எந்தகாரியத்தையும் இனிது நிறைவேற்ற வல்லனாகை. [யுத்தே சாபி அபலாயநம்] போர்புரியவந்து நின்றபின் தனக்கு மரணமே ஸம்பவிக்குமென்று தோன்றினாலுங்கூட முதுகுகாட்டிபோடாமை. அர்ஜுநன் க்ஷத்ரியஜாதியிலே பிறந்தவனாதலால் அவனுக்கு ஸ்வஜாதிதர்மமாகிய யுத்தத்தை வழுவறச்செய்கை ஆவச்யக மென்பதை மேன்மேலும் வற்புறுத்திச் சொல்லி, தான் சொன்னபடியே கேட்டாக வேண்டுமென்றும் தன்னையே தஞ்சமாகப் பற்றியாகவேண்டுமென்றும் வாழைப்பழத்தில் ஊசியேற்றுவதுபோலுரைத்து, கடைசியாக அவன் வாக்கிலிருந்து *नष्टो मोहः स्मृतिर्लब्धा त्वत्प्रसादान्मयाऽच्युत । स्थितोऽस्मि गतसंदेहः करिष्ये वचनं तव— நஷ்டோ மோஹ: ஸ்ம்ருதிர்லப்தா த்வத்ப்ரஸாதாந் மயாऽச்யுத, ஸ்திதோஸ்மி கதஸந்தேஹ: கரிஷ்யே வசநம் தவ.* என்று சொல்லுவித்துக் கீதையைத் தலைக்கட்டியருளிற்று. கண்ணா! உனது திருவருளால் என்னுடைய விபரீதஜ்ஞான மெல்லாம் தொலைந்தது; உண்மைப் பொருளுணர்ச்சி உண்டாயிற்று; மனதிலிருந்த கல்மஷங்களெல்லாம் தீர்ந்து ஒரு நிலையில் நின்று விட்டேன்; இனி நீ சொன்னபடி கேட்கிறேன் என்று சொன்னானென்கிற இவ்வளவையும் த்ருதராஷ்ட்ரனுக்கு ஸஞ்ஜயன் சொல்லி நின்றான்.

62. கீதையுபதேசம் கேட்பதற்கு முன்பு அர்ஜுநன் இருந்த இருப்பு என்ன? இப்போது நின்றநிலை என்ன? என்பதே ஸாரமாக இங்கு உய்த்துணரத் தக்கது. நான் யுத்தம் செய்யமாட்டேனென்று வில்லையும் அம்புகளையும் விட்டெறிந்து தேர்த்தட்டிலே உட்கார்ந்து விட்டான் என்பது முதலத்யாயத்தின் முடிவில் சொல்லப்பட்டது. நீ சொன்னபடியே செய்கிறேனென்று சொல்லி யுத்தத்திற்கு உடன்பட்டு நின்றானென்பது பதினெட்டாமத்யாயத்தின் முடிவில் சொல்லப்பட்டது. அவரவர்களுக்கு ஸ்வதர்மத்தில் ருசியையுண்டாக்குவதே கீதையின் முழுநோக்கு என்றதாயிற்று. இந்த கீதாசாஸ்த்ரம் அவதரித்திருக்கிற ரீதியை ஊன்றி நோக்குமிடத்து மிகவும் ஆச்சரியமாகவேயிருக்கிறது. திருவாய்மொழியில் (4-8-6.) *அறிவினால் குறைவில்லா அகல்ஞாலத்தவரறிய, நெறியெல்லாமெடுத்துரைத்த நிறைஞானத்தொருமூர்த்தி* என்கிற பாசுரத்தின் பெருமை ஸாரமாக அருளிச் செய்யப்பட்டது. இதன் அருமைபெருமையைக் கண்ணபிரான் தானே முடிவில் *इदं ते नातपस्काय नाभक्ताय कदाचन । न चाशुश्रूषवे वाच्यं न च मां योऽभ्यसूयति— இதம் தே நாதபஸ்காய நாபக்தாய கதாசந, நசாசுச்ரூஷவே வாச்யம் நச மாம் யோப்யஸூயதி * என்கிற வொரு ச்லோகத்தினால் புதமாகப் பேசினான். அர்ஜுநா! நான் உனக்குச் சொன்ன இந்த பரமமான சாஸ்த்ரத்தை அதபஸ்களுக்குச் சொல்லாதே, அபக்தனுக்குச் சொ-

அசுச்ரூஷுவுக்குச் சொல்லாதே, என்னிடத்தில் அஸூயையுள்ளவனுக்குச் சொல்லாதேயென்று கட்டளையிடுகிறான் கண்ணபிரான். இங்கு "ந ச மாம் யோப்யஸூயதி" என்றவிடத்திற்கு நம் பாஷ்யகாரர் பாஷ்யமிட்டருளுகிறார்; காணக் கண்ணாயிரம் வேண்டும்; கேட்கக் காதாயிரம் வேண்டும். நவில நாவாயிரம் வேண்டும். "मत्स्वरूपे मदैश्वर्ये .मद्गुणेषु च कथितेषु यो दोषमाविष्करोति न तस्मै वाच्यम्" என்று பாஷ்யவாக்கியுள்ளது. என்னுடைய ஸ்வரூபத்தையும் என்னுடைய ஐச்வர்யத்தையும் என்னுடைய குணங்களையும் ஒருவர் எடுத்துரைத்தால் அவற்றில் தோஷாவிஷ்கரணம் செய்பவனே என்னிடத்தில் அஸூயை கொண்டவன், அவனுக்கு நீ ஒன்றும் சொல்லாதே— என்று கண்ணபிரான் கட்டளையிடுவதாக ஸ்வாமி பாஷ்யம் செய்தருளுகிறார். பகவத் குணங்களை எத்தனை உயர்த்தியாகச் சொன்னாலும் அத்தனையும் ஒக்கும்! ஒக்கும்!! என்றிராதே அவற்றில் அஸம்பாவிதத்வத்தை உபபாதிக்கிறோம் கேண்மினென்று, தங்களுக்குண்டான பாண்டித்யத்தையெல்லாம் பகவத் குணங்களை இல்லைசெய்வதிலும் இறக்குவதிலுமே உபயோகப்படுத்துகிறவர்கள் பகவத்கீதைக்கு வெகுதூரத்திலே நிற்கவேண்டுமென்பது ஸ்வாமி திருவுள்ளமாகக் காண்கிறது.

❀ यत्र योगेश्वरः कृष्णो यत्र पार्थो धनुर्धरः ।
तत्र श्रीर्विजयो भूतिर्ध्रुवा नीतिर्मतिर्मम ॥ ❀

ஸ்ரீகாஞ்சி பிரதிவாதிபயங்கரம்
அண்ணங்கராசாரியர் எழுதிய
பகவத்கீதை யறுபத்திரண்டென்னும் தோஷாரலங்க்ரமும்
முற்றுப் பெற்றது.